இதழ் 12 ஆடி 2021 £4

# சிறுகதை மஞ்சரி

ஆசிரியர்: மு.தயாளன்

மாதஇதழ்



வளர்ந்த வளரும் படைப்பாளிகளுக்கான களம்

# பங்காளர்கள்



ஏ.என்.எம். நியாஸ்
பக்கம் 4



குரு சதாசிவம்
பக்கம் 8



தாட்சாயினி
பக்கம் 15



ஜெ. கார்த்திக்
பக்கம் 20



குலசிங்கம் வசீகரன்
பக்கம் 23



எஸ். அகஸ்தியர்
பக்கம் 31



தர்சித்
பக்கம் 36



சூ.கலாவர்ணன்
பக்கம் 36



பேராசிரியர் செ. யோகராசா
பக்கம் 39



நந்தினி சேவியர்
பக்கம் 40



# நம்பிக்கைகளின் தோல்வி

மனித இனத்தின் வாழ்வும் இருப்பும் கேள்விக்குறியான ஒரு காலகட்டத்தில் நாம் இப்போது இருக்கிறோம். ஒன்று முடிய இன்னொன்று என்பதாக வைரசின் பரம்பல் கட்டுக்குள் அடங்காது சென்று கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் எல்லாம் தோல்வியை நோக்கிய பயணத்தில் இருக்கின்றன. என்ன இடர் வந்தாலும் கடவுள் எம்மைக் காப்பார் என்கின்ற நம்பிக்கையெல்லாம் காற்றோடு அடிபட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன.
உங்களை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும் என்கின்ற கோஷம் வலுப் பெற்றுக் கொண்டிருக்கிறது.
காலங்காலமாக நம்பிவந்த நம்பிக்கைகள் எல்லாம் உடைந்து சுக்கு நூறாகி புதிய நம்பிக்கைகளுக்காக உலகம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறது.
இந்தியா புண்ணிய பூமி என்று உரக்கச் சொன்னவர்கள் எல்லாம் இன்று அடக்கி வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் உயிர் காப்பாற்றப்படவேண்டுமெனில் அரசு சொல்வதைக் கேளுங்கள். முகத்தை மூடிக்கொள்ளுங்கள். சொல்லும்வரை வீட்டிற்குள்ளேயே இருங்கள். இப்படியான கோரிக்கைகள் விஞ்ஞானிகளாலும் மெய்ஞ்ஞானிகளாலும் சத்தமாகச் சொல்லப்படுகின்றன.
இப்போது எமக்குத் தேவை வாழ்வதற்கான நம்பிக்கை ஒன்றே.
நம்மை நாமே காப்பாற்றுவதோடு மற்றவர்களையும் காப்பாற்றவேண்டுமென்ற மனிதாபிமான சிந்தனை மட்டுமே.
உங்களிடம் உள்ள நோயை மற்றவருக்குக் கொடுக்காதிருக்க வேண்டும்.
அதேபோல் மற்றவர்களிடமுள்ள நோயை நாம் வாங்காதிருக்க வேண்டும்.
என்ன செய்யவேண்டும்?
தனிமை வேண்டும்.
வீட்டிற்குள்ளேயே இருக்கவேண்டும். இருந்தென்ன செய்வது.? நோயிலிருந்துதான் தப்ப முடியும். ஆனால் வறுமை கொன்றுவிடுமே? அன்றாடங்காய்ச்சிகள் அலறுகிறார்கள்.
உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவுங்கள். இந்த நேரத்தில் மதம் தராதரம் சாதி பார்ப்பதையெல்லாம் விட்டுவிடுங்கள்.
நீங்கள் நம்புகின்ற கடவுளாக நீங்களே மாறுங்கள்.
அப்போது இதுவரை உங்களிடம் இல்லாத உணர்வு உங்களை அரவணைக்கும்.
உள்ளதைப் பகிர்ந்து இன்பமாக வாழப் பழகுங்கள்.
இன்று வந்திருக்கும் நிலமை என்று மாறுமென யாருக்கும் தெரியாது.
அது எப்போதாவது மாறிவிட்டுப் போகட்டும் நாங்கள் இப்பொழுதே மாறுவோம். எங்கள் மாற்றமும் வேகமும் எந்தக் கொடிய நோயையும் விழுங்கிவிடும்.
புறப்படுங்கள். தர்மம் செய்ய அணிவகுப்போம்.
உள்ளவர்களே! உங்கள் பணப்பெட்டிகளை திறந்து வையுங்கள். நோய்க்குப் பயந்து வீட்டிற்குள் முடங்குவோர் மரணித்துவிடக் கூடாது. குறிப்பாக இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வாழ்வோர் துயரங்கள் சொல்ல முடியாதளவுக்கு உச்சம் சென்றுவிட்டன.
கைகொடுப்போம்! புறப்படுவோம்! நம்மவரைக் காப்போம்!

**மு. தயாளன்**

# உள்ளடக்கம்...


1 **நம்பிக்கைகளின் தோல்வி**
மு. தயாளன்

2 **உள்ளடக்கம்**

3 **வாசிப்பனுபவம் 8**
மு.தயாளன்

4 **என் அன்பு மேரி அன்ரி..**
ஏ.என்.எஸ். நியாஸ்

8 **புரியாத உறவுகள்**
குரு. சதாசிவம்

15 **பெண்மையின் தவறோ**
தாட்சாயினி

20 **டோக்கன்**
ஜெ. கார்த்திக்

23 **ஒரு பால்ய பொழுதொன்றில்...**
குலசிங்கம் வசீகரன்

31 **கொக்குத்தவம் - சிறப்புச் சிறுகதை**
எஸ். அகஸ்தியர்

36 **போர்க்களம்**
தர்சித்

38 **கனாக்காலம்**
சூ. காலாவர்ணன்

39 **மஞ்சரி 11 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா

40 **எழுத்தின் அனுபவம்....**
நந்தினி சேவியர்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**

**சிறுகதை மஞ்சரி 11 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. ஒரு தேநீர் ஒரு குவளை - ஃபைசல் அகமது
2. ஒரு மர(ண)த்தின் புலம்பல் - ஐ. கிருத்திகா
3. மடிப்பிச்சை - மயில் மகாலிங்கம்


**நன்றிகள்..**
பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சரியை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் எனது மனைவி சாருகேசிக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தைத் தந்துதவிய திருமலை சுந்தா எனது மனமார்ந்த நன்றிகள்.


**1000 பேரை இணைப்போம்......**
தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


அட்டை வடிவமைப்பு: ரமணன்
அட்டைப்படம் : திருமலை சுந்தா

**பிரதம ஆசிரியர்** : மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்:**செல்வி த. சரண்யா, வி.மைக்கேல் கொலின்
**ஆலோசகர்கள்** : Dr P. இராசையா , பேராசிரியர் செ. யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:** 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Other countries:** $80/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649

# வாசிப்பனுபவம் 8

## சிவப்புக்கோடுகள்

**சிறுகதைத் தொகுப்பு**

**ஆசிரியர்: ச. சிறீறங்கன்**

---

இப் பகுதியில் வருவது விமர்சனமல்ல. நான் வாசிக்கும் புத்தகங்களில் எனது அனுபவமும் அபிப்பிராயமும் மட்டுமே.

சிவப்புக்கோடுகள் என்னும் இச் சிறுகதைத் தொகுப்பில் 12 கதைகள் அடங்கியுள்ளன.

இது 2019 இல் வெளியிடப்பட்டதால் போர்க்காலக் கதைகளும் அதன் பின்னான கதைகளும் அடங்கியுள்ளன.

வாசிக்கத் தூண்டும் வகையான எழுத்து நடை. இலகுவான சொற்பிரயோகம்.

சிறுகதைகள் என்பவை இன்றைய காலகட்டத்தில் சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணருவதற்கான இலகுவான இலக்கிய வடிவமாகக் கருதப்படுகிறது. இதற்கமைய 12 கதைகளும் பன்னிரண்டு விதமான பிரச்சினைகளை மக்கள் முன் கொண்டு வந்துள்ளன. போரின்பின் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் மூடப் பழக்கவழக்கங்களால் உருவாகும் பிரச்சினைகளும் அழகாக உள்வாங்கப்பட்டுள்ளன.

சில கதைகள் எடுத்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களைக் கூறி நிற்கின்றன. சில கதைகள் பிரச்சினைகளைக் கூறுவதோடு நின்றுவிடுகின்றன. இன்னும் சில கதைகள் வாசகனை முடிவுக்கு வரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு கனவு மெய்ப்படவேண்டும் என்னும் கதையில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவன் தன்னைப் பிரபலப்படுத்த வேண்டாமென்றும் அதனால் மற்றைய மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கூறி முடித்தது பாராட்டுக்குரியதே.

இன்னுமொரு கதையில் வேலைக்காக அமைச்சர்களிடம் கொடுக்கப்படும் சிபார்சுக் கடிதங்கள் அமைச்சரை அடையாமலே கீழ்மட்ட அதிகாரிகளால் உதாசீனப்படுத்தப்படுவதை மிக அழகாகவும் நகைச்சுவையாகவும் கூறியமை சிறப்பாகவிருந்தது.

முதலாவது கதையில் ஒர் ஆசிரியரின் துயரம் இதயத்தைத் தொடும் வண்ணம் இருந்தது. அதேநேரம் இவ்வளவு பிரச்சினைகளுக்கிடையில் பாடசாலைக்குச் சென்றும் சிவப்புக் கோட்டுக்குக் கீழ் கையொப்பம் இடவேண்டிய சூழ்நிலை ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது என்பதை நாசூக்காகக் கூறியுள்ளார். இது போர்க்கால சூழலில் ஆசிரியர்களின் நிலையை கருத்திற்கொள்ளாத அதிபர்களின் உதாசீனம் நிறைந்த தன்மையை சுட்டுவதாக உள்ளது.

இக் காலகட்டத்தில் வெளிவந்த சிறுகதைகளாகட்டும் நாவல்களாகட்டும் கவிதைகளாகட்டும் இயக்கப் பிரச்சினைகளை மையமாக வைத்தே வெளிவந்தன. இயக்கங்களாலோ அல்லது விடுதலைப் போரினாலோ மக்கள்பட்ட துன்பங்கள் இழப்புகள் என்பன கருத்திற் கொள்ளப்படவில்லை.

ஆனால் இச் சிறுகதைத் தொகுப்பு அப்படியில்லாமல் தனித்து நிற்பது உண்மையில் பாராட்டக்கூடியதே. ஆசிரியர் தன்னுரையில் **எங்கெல்லாம் அநீதி நிகழ்கின்றதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன்** என்கின்ற பகவத்கீதையின் வசனத்தோடு ஆரம்பிக்கின்றமையை நாம் கவனத்திற்கொண்டால் கவனிக்கப்படாத பல பிரச்சினைகளுக்குள் ஆசிரியர் அவதாரம் செய்துள்ளமையை நீங்கள் உணரலாம். வாங்கிப் படியுங்கள். புதிய அனுபவம் உங்களுக்குக் கிடைக்கும்.

திறமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த சிறீறங்கன் மேலும் பலபடைப்புகளை தருவார் என்று எண்ணுகிறேன்.

**மு.தயாளன்**



ஏ. என். எஸ். நியாஸ்.

ஆலயத்துக்கு வந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எத்தனை அப்பாவிகள் தங்கள் இன்னுயிரை நீத்திருக்கிறார் கள்?' என என்னுள்ளம் பதை பதைத்தது. சற்று நேரத்தில், குண்டு வெடிப்பு நடந்த ஒரு இடத்தைக் காட்டினார்கள். அது நீர்கொழும்பு, காட்டுவாப்பிட்டி என்று அறிந்தபோது சுரீரென்றது. தீயை மிதித்தவனானேன்.

என் அன்புக்குரிய மேரி அன்ரியும், விக்டர் ஐயாவும் அங்கேதானே இருக்கிறார்கள். நிச்சயமாக அந்தத் தேவால யத்துக்குத்தான் அவர்கள் போயிருப்பார்கள். அப்படியா னால் அவர்கள் கதி? பதற்றத்து டன் அங்குமிங்கும் நடந்தேன். என் மேசை லாச்சியை இழுத்து, மேரி அன்ரியின் மகள் சூட்டி யின் திருமண அழைப்பிதழைத் தேடி எடுத்தேன். அதில் அவர் களது தொலைபேசி இலக்கம் இருந்தாலும் அது வீட்டிலுள்ள தொலைபேசி இலக்கம். அவர்கள் வீட்டில் இருக்கிறார்களா? இல்லையா? இருந்தாலும் என்ன நிலைமையில் இருக்கிறார்களோ தெரியாது. அதனால் அழைப்பு எடுப்பதில் தயக்கம் இருந்தது. மனம் ஒரு நிலையில் இல்லை. எனக்கு ஒன்றும் புரியவில்லை. என் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.

**நா**ன் குளித்து முடித்து குளியலறையிலிருந்து வெளியே வந்தபோது, வீட்டிலிருந்த அனைவரும் மற்றும் அயல் வீட்டார் சிலரும், தொலைக்காட்சி முன்னால் அமர்ந்து பரபரப்புடன் எதையோ பார்த்துக்கொண்டிருந்தார்கள். "ஏன் என்ன விசயம்..?" என்றேன் ஆவலுடன். விசாரித்ததில் ஹோட்டல்களிலும், கிறிஸ்தவ ஆலயங் களிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றதாக அறிய வந்தது. கடந்த பத்து வருடங்களாக இப்படியான ஒரு தாக்குதல் நடைபெற்றதாக கேள்விப்படவேயில்லை. அமைதியாக இருந்த நம் நாட்டுக்குத் திடீரென என்னதான் நடந்தது? ஏன்?, எங்கே?, யார்? என்ற கேள்விகள் என்னுள்ளே அலைமோதின. 'இருந்து பார்ப்போமே' என எண்ணியவனாக அங்கே உட்கார்ந்தேன். மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களும், ஹோட்டல்களும் தாக்கப்பட்டதாக செய்திகள் மாறி மாறி வந்த வண்ணமிருந்தன. 'ஐயோ! அநியாயமாக யார் இந்த முறையற்ற வேலையைச் செய்தார்கள்? வழிபாட்டிற்காக

.........................

எனக்கு அப்போது ஒரு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும். எங்களது தென்னந் தோட்டம் ஊரின் எல்லையில் அமைந்திருந்தது. என் வாப்பா தனது

# என் அன்பு மேரி அன்ரி

மோட்டார் சைக்கிளில் போகும்போது என் னையும் அழைத்துச் செல்வார். அப்போதுதான் புதிதாகக் குடிவந்திருந்த மேரி அன்ரி அறிமுகமா னார். அன்ரியை முதன் முதலில் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்துப்போய்விட்டது. அழகாகவும், புன்னகை பூத்த முகத்துடனும் காட்சியளித்தார். கதைக்கும்போது அன்பாகக் கதைத்தார். அவர் ஒரு நர்ஸ் என்பதையும், எங்களூர் ஆஸ்பத் திரிக்குப் புதிதாக மாறி வந்தவர் என்பதையும் அறிந்து கொண்டேன். அவரோடு அவரது தாயாரும், புதிதாக மணமுடித்த கணவரும் கூட இருந்தார்கள். விக்டர் ஐயாவும் சுகாதார இலாகாவில் வேலை செய்தவர்தான்.

ஒரு நாள் வாப்பாவுடன் தோட்டத்துக்குச் சென்றிருந்தபோது, அன்ரியும் மற்றவர்களும் நல்ல உடையணிந்து எங்கோ செல் வதற்கு ஆயத்தமாக இருந் தார்கள். ''நீங்க சேர்ச்சுக்குப் போறீங்க போலி ருக்கு. சரி, நீங்க போய் வாங்க, நா இருந்து பாத்துட்டுப் போறேன்'' என்று அவர்களை அனுப்பி வைத்தார் வாப்பா. நான் வாப்பாவின் மடியிலிருந் தபடி அவரை அண்ணாந்து பார்த் தேன். அவருக்கு விளங்கிவிட்டது. நானும் அவர்களோடு சேர்ச்சுக்குப் போக ஆசைப்படுகிறேன் என்று. இதைப் புரிந்துகொண்ட அன்ரி மெல்ல என் அருகில் வந்து, ''இப்ப வேணாம், வேறு ஒரு நாளைக்குப் போவோம்'' என்று என்னை ஆறுதல் படுத்தி, என் தலையைத் தடவி விட்டார்.

மற்றொரு நாள், சனி பின் னேரம் தோட்டத்துக்குச் சென்றிருந்த போது, அன்ரி வாப்பாவைப் பார்த்து, ''முதலாளி! நாளைக்கு எங்களுக்கு ஈஸ்டர் ஞாயிறு, பிள்ளைக்கு நல்ல உடுப்பு உடுத்தி சேர்ச் வாசலுக்கு கூட்டி வாங்க, நாங்க பாத்துக் கொள்றம்'' என்று சொன்னபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அவ்வாறே கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த என் மாமா வாங்கித் தந்த கழிசான் சட்டை அணிந்து என்னைக் கூட்டிச் சென்று, சேர்ச் வாசலில் விட்டபோது எனக்காக மற்றவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு சேர்ந்ததும், என்னைச் சேர்ச் வளவுக்குள் அழைத்துச் சென்றார்கள். அங்கே முதலில் நான் கண்டது கன்னி மேரி மாதா, தன் குழந்தை யேசு பாலனை அள்ளி அணைத்தபடி முக்காடிட்டு நிற்கும் திரு உருவச்சிலை அமைந்திருந்த கண்ணாடிப் பெட்டியை. அதைக் கடந்து சேர்ச்சுக்குள் நுழைந்தோம். வரிசை வரிசையாகப் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. தூரத்தில் அமைந்திருந்த மேடையில் அருட்தந்தைமார் அமர்ந்திருந்தனர். எங்களுக்கு ஆலயத்தின் உள்ளே நடுப்பகுதியில் இடம் கிடைத்தது. அன்று எல்லோருக்கும் விசேட தினம். அதுதான் ஈஸ்டர் தினம். அத்தினம் எவ்வாறு உருவாகியது என்பதை பிற்காலத்தில் நான் அறிய நேர்ந்தது. பிரதான அருட்தந்தை ஏதோவெல்லாம் கூறி, ஆராதனையை ஆரம்பம் செய்தார். புனித சகோதரிமாரும், மற்றப் பெண்களும்



தலையைத் துணிகளால் போர்த்தியிருந் தார்கள். இறுதியில் யாவரும் எழுந்து நின்று ஆராதனை முடிவில் 'ஆமேன்' எனக் கூறினார்கள்.

மேரி மாதா முக்காடிட்டிருந்ததும், 'ஆமேன்' என்று கூறியதும் எனக்கு அப்போது ஆச்சரியத்தை விளைவித்தது. பின்னர் ஒரு நாளில் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் நெருங்கியவர்கள் என்பதைத் திருக்குர்ஆன் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. எல்லாம் முடிந்து வெளியே வந்தபோது அன்ரியை அறிந்தவர்கள் வந்து கதைத்தார்கள். அவ்வேளை அருட்தந்தை ஒருவர் என்னைக் கண்டுவிட்டு வந்தவர், என்னைப் பற்றி விசாரித்தார். நான் ஒரு இஸ்லாமியக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிந்ததும், என்னை வாஞ்சையுடன் நோக்கிப் புன்னகைத்தார். பின்னர் என் முதுகைத் தடவி விட்டு நடந்தார். நான் வாசலை அடைந்தபோது, என் தந்தையும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார். நான் வீடு வந்து சேர்ந்ததும் அங்கு நடந்தவை களை விளக்கமாகக் கூறியது, இன்னும் என் நினைவில் இருக்கிறது.

வாராவாரம் தோட்டத்துக்கு வாப்பாவுடன் செல்லும்போது அங்கு பல மாற்றங்கள் தெரிந்தன. விக்டர் ஐயாவும், அன்ரியும் கஸ்டப்பட்டு நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி மரக்கறித் தோட்டம் ஒன்று போட்டிருந்தார்கள். சுரைக்காயும், பாகற்காயும் வேலிகளில் தொங்கிக் கொண்டிருக்க, வளவுக்குள்ளே கத்தரிக்காய், வெண்டிக்காய், மிளகாய்ச் செடிகள் அழகுக்கு அழகூட்டின. நாம் ஆச்சரியத்துடன் பார்த்து அவற்றை ரசித்துக்கொண்டிருந்தோம். அவ்விடத்தை விட்டு நகர மனமில்லாமல் இருந்தது. வேறொரு இடத்தில் விக்டர் ஐயா வாழை மரங்களுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். அங்கு தண்ணீருக்குப் பஞ்சமில்லை.

நாங்கள் அங்கிருந்து புறப்படத் தயாரானபோது அன்ரி ஒரு பை நிறையக் காய் கறிகளை நிரப்பிக் கொண்டு வந்து வாப்பாவின் கைகளில் கொடுத்தார். அவர் தனது சட்டைப் பையில் கையை விட்டு பணம் எடுக்க முனைந்தார். அன்ரி இரண்டு அடிகள் பின்வாங்கி, அதை வாங்க மறுத்து, "ஐயோ! முதலாளி பணம் வேண்டாம், சும்மா கொண்டு போங்க" என்று அன்போடு கொடுத்தார்.

பிறிதொரு நாள் நாங்கள் சென்ற நேரம் நர்ஸ் உடை அணிந்து ஆஸ்பத்திரிக்குப் போக ஆயத்தமாக இருந்தார். அப்போதுதான் நான் முதன் முதலாக அவ்வுடுப்பில் அவரைக் காண நேர்ந்தது. வாப்பாவை நான் அண்ணாந்து பார்த்தேன். அவருக்கு விளங்கிவிட்டது நானும் சேர்ந்து போகக் கேட்கிறேன் என்று. அன்ரி முன்னே வந்து என்னைத் தடவி விட்டு, "இன்னொரு முறை கூட்டிப் போகிறேன்" என்று ஆறுதல் படுத்திவிட்டுச் சென்றார். அவர் கூறியவாறே ஒரு நாள் என்னை அழைத்துக்கொண்டு போனார். அங்கு சென்ற பின் அன்ரி என்னை ஒரு பெஞ்சில் இருத்தி விட்டு, வார்டைப் பார்க்கச் சென்றார்.

'டொக்' 'டொக்' என்று வராந்தாவில் கேட்ட பூட்ஸ் ஒலி டாக்டர் வருவதை அறிவித்தது. அன்ரி திரும்ப வந்து மேசைக்கருகில் நின்றார். டாக்டர் தூய்மையான வெள்ளை உடை அணிந்து, முகத்தில் ஒரு அழகான கண்ணாடியும் போட்டிருந்தார். 'ஸ்டெதஸ்கோப்' ஒன்றைக் கையில் வைத்திருந்தார். அவரைப் பார்க்கும்போதே அவர் மீது ஒரு தனி மரியாதை என் மனதில் ஏற்பட்டது. வந்தவர் என்னைக் கண்டதும் "யார் இந்தப் பெரிய மனுஷன்?" என்றார் அன்ரியைப் பார்த்து. அன்ரி அவருக்கு விளக்கமளித்தார்.
"ஓ ஐஸீ!" என்றுவிட்டு என்னருகில் வந்து "நல்ல ஷேர்ட் ஒண்டு போட்டிருக்கிறீர் போல" என்று கூறி, என் முதுகைத் தடவி விட்டு "குட்! நல்ல பிள்ளையாய் இரும்" என்று கூறிவிட்டு, அன்ரி பின் தொடர, நோயாளிகளின் கட்டிடங்களை நோக்கி நகர்ந்தார்.

அன்ரி இருந்திருந்து வீட்டுக்கு வருவதுண்டு. அது ஒரு கிறிஸ்துமத் தினமோ, வேறு ஏதாவது விஷேட தினமாகவோ இருக்கும். வரும்போது கையில் கேக் ஏதாவது கொண்டு வருவார். ஒரு நாள் அதே போல் கையில் கேக் ஒன்று ஏந்தியவாறு வந்தார். கூடவே தாயாரும், விக்டர் ஐயாவும் வந்திருந்தார்கள். அன்று அவரின் முகம் சரியாகவே இல்லை. கொண்டு வந்ததைப் புன்னகையோடு வாப்பாவிடம் கையளித்தார். கண் கலங்கி இருந்தது. பின்னர் கதைத்துக் கொண்டிருந்ததில், அவர்களுக்கு இடமாற்றம் வந்ததால் ஊரை விட்டே போகப் போகிறார்கள் என அறிய நேர்ந்தது. அன்ரியும் மற்றவர்களும் கை கூப்பி என் தந்தையாருக்கு மரியாதை செய்துவிட்டு என் பக்கம் திரும்பி "தம்பி! நாங்க போயிட்டு வாறோம்" என்றபோது, அன்ரியின் பிரிவைத் தாங்க முடியாது தேம்பித் தேம்பி அழத் தொடங்கினேன். "தம்பி! அழாதீங்க, நாங்க திரும்பி வந்து போவோம்" என்று ஆறுதல் சொன்னார். காலங்கள் உருண்டோடினாலும், சொன்னபடியே வந்து போய்க்கொண்டிருந்தார், கடைசியாக

அவர் எங்கள் வீட்டுக்கு வந்தது மகள் சூட்டியின் திருமண அழைப் பிதழ் கொண்டு வந்தபோது.

...................

இப்போது இடி போன்ற இந்த செய்தி கேட்டதிலிருந்து நான் அதிர்ந்து போயிருந்தேன். மூன்று நாட்கள் கழிந்தது. நாட்டு நிலைமை சற்று சீரானது போலிருந்தது. பல முறை முயற்சி செய்தும், அன்ரியின் தொலைபேசி இலக்கம் சரியாக வேலை செய்வதாகத் தெரிய வில்லை. எனக்கு இருப்புக் கொள்ள வில்லை. அன்ரியின் நிலைமையை அறிந்து வரலாம் என்று புறப்பட்டு விட்டேன். பஸ் பிரயாணம் சற்றே வினோதமாகத் தெரிந்தது. சன நெரி சலே இல்லை. இருந்த கொஞ்சப்பேர் முகங்களிலும் பீதியை அவதானிக்க முடிந்தது. வழி நெடுக உள்ள கடைத் தெருக்களெல்லாம் பெரும்பா லும் வெறிச்சோடிப்போய் கிடந்தது. ஆங்காங்கே போலீஸும் ராணுவமும் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள். ஒருவாறாக நான் நீர்கொழும்பு வந்து சேர்ந்தேன். தேநீர் அருந்தக் கூட ஒரு கடையில்லை. எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. ‘திரும்பிப் போக பஸ் இருக்குமா? என்ற பயமும் என் மனதை ஆட்கொண்டது. மெது வாக நடந்து கொண்டே நான் ஒரு சந்தில் திரும்பியபோது – என்ன ஆச்சரியம்! மேரி அன்ரியும் மற்றவர் களும் சுமார் 50 மீற்றருக்கப்பால் போய்க்கொண்டிருந்தார்கள். என் பலம் கொண்ட மட்டும் கைதட்டி னேன். திரும்பிப் பார்த்தவர்கள் அன்ரி உட்பட “வர வேண்டாம், வந்த வழியே திரும்பிப்போய் விடுங் கள்” என்று கையசைத்துச் சைகை செய்து விட்டுப் போனார்கள்.

எனக்கு மீள முடியாத அதிர்ச்சி – அன்ரியுமா இப்படி? ஆண்டாண்டு காலம் கட்டியெழுப்பிய அன்புக் கோட்டை வெறும் மண் கோட்டையாகி, அடை மழையில் அடித்துக்கொண்டு போவது போல இருந்தது. யாரோ மாபாவிகள் செய்த அடாத செயல்களால், இருக் கின்ற மற்றவர்கள் இப்படித் துன்பம் அனுபவிக்க வேண்டுமா? என் இத யம் குமுறியது. நான் எப்படி பஸ் ஸில் ஏறினேன் - எப்படி வீடு வந்து சேர்ந்தேன், என்பதே எனக்குத் தெரியாது. உயிரற்ற ஜடம் போல கட்டிலிலேயே கிடந்தேன். நாலு நாட்களாயிற்று மனப்பாரம் குறைந் தபாடில்லை. ஒரு நாள் போன் மணி ஒலித்தது. “ஹலோ!” என்றேன் சுரத்தில்லாமல்

“தம்பி நான் அன்ரி கதைக்கிறேன்”

எனக்கு சற்று ஆச்சரியமாக இருந்தா லும், பதில் சொல்லத் தோன்ற வில்லை.

“.. .. .. .. ..”

“ஏன் கதைக்க மாட்டீங்கிறீங்க தம்பி”

“பின்ன என்ன அன்ரி, உங்களுக்கு என்ன ஆச்சு என்று பார்க்கக் கவலையோடு வந்தேன். நீங்க என்னண்டா, என் முகத்திலேயே முழிக்காதே, போயிடுன்னு கையைக் காட்டினீங்க”

“ஐயோ! இல்ல தம்பி! அந்த நேரத்துல நீங்க இங்க வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்ல. இங்கே அப்போ நிலமை சரி இல்லை. இங்க உள்ள சூழ்நிலையால உங்க ளுக்கு ஏதாவது ஆபத்து வந்துரு மோன்னு பயந்துதான் உடனே திரும்பிப் போகச் சொன்னேன்”

எனக்கு அப்போதுதான் உண்மை விளங்கியது. என்னை நானே நொந்துகொண்டேன்.

“அது சரி அன்ரி இதில இருந்து எப்படித் தப்பினீங்க?” என்றேன்.

“அதுதான் தம்பி, பாருங்க எங்க நல்ல நேரத்த! காலியிலே இருந்து ஒரு கூட்டாளி எங்களை ஈஸ்டருக்கு வரச் சொல்லியிருந்தார். அதனால தான் நாங்க அங்க போயிட்டோம். கர்த்தர் கிருபையால நாங்க தப்பிட் டாலும், எங்களுக்குத் தெரிஞ்ச மிச்சம் பேர் உயிரை விட்டுட்டாங்க” என்றார் ஆழ்ந்த கவலையுடன்.

“அன்ரி! நாங்க இந்த மாதிரி பாதகச் செயலையெல்லாம் ஆதரிக்கிறோம் எண்டு நெனச்சீங்களா?, தன் சொல்லாலோ அல்லது செயலாலோ மத்தவங்களுக்கு துன்பம் தராதவன் தான் உண்மையான முஸ்லிம். இதைச் சரியாகப் பின்பற்றாத ஒரு சில பேர் சேர்ந்து இப்பிடி ஒரு வேலயைச் செஞ்சு, சும்மா இருக்கிற அப்பாவி மக்கள் அத்தனை பேருக் கும் இவ்வளவு பெரிய கஸ்டத்த தந்துட்டாங்க. இவ்வளவு அழகான நாட்டுல, சுதந்திரமா வாழ நாமெல் லாம் எவ்வளவு கொடுத்து வச்சி ருக்கணும்?! அநியாயமா இதெல் லாம் கெட்டுப் போச்சே..! இந்தப் படுபாதகமான சம்பவத்தை நெனச்சி ரொம்ப கவலையாயிருந்தாலும், நீங்களும் உங்க குடும்பமும் தப்பிப் பிழைச்சதை நெனச்சி மிச்சம் சந்தோஷமா இருக்குது அன்ரி..”

ஒரு சிறிது நேர மௌனம் நிலவி யது. அன்ரி தேம்பித் தேம்பி அழு வது போல் விளங்கியது. என் கண்களிலும் நீர் துளிர்த்தது.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**

# புரியாத உறவுகள்



குரு. சதாசிவம்

**கா**லை ஏழுமணியாகியும் படுக்கையிலிருந்து எழும்பா மல் படுத்திருந்தாள் அகல்யா. எழும்பி என்ன செய்வது என்ற விரக்தியும் அதற்கு ஒரு காரணமாயிருந்தது. மீண்டும் கண்களை மூடி தூங்க முயன்றாள். ஒரு கிழமையாக பாடசாலைக்குப் பிள்ளைகளின் வருகை குறைந்து இப்போது முற்றாக நின்று போயிருந்தது. வன்னியிலே யுத்த சூழல் நடைமுறை வாழ்க் கைக்கே அச்சுறுத்தலாய் மாறியிருந்தது. இரண்டு வருடத்திற்கு முன் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்து கற்சிலைமடு மகாவித்தியால யத்தில் அவள் இணையும்போது அங்கு நிலைமை நன்றாகத்தான் இருந்தது.

இப்போது நிலைமை மாறிச் சண்டை மிக மும்மரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏ9 பாதை முற்றாக இராணுவத்திடம் போய்விட்டதாக செய்திகள் வந்துகொண்டி ருந்தன. புலிகளின் குரல் வானொலி, ஈழநாதம் பத்திரிகை இரண்டுமே நின்று போனதால் வதந்திகளே செய்திகளாய் மாறி மக்களைப் பீதியில் உறைய வைத்தன. இழந்த ஆனையிற வைப் பிடித்து விட்டதால் இனிக் கொஞ்சநாள் அமைதியாய் இருக்கும் அதற்குள் சமாதானப் பேச்சு வார்த்தை ஏதும் வருமென்று கடந்த கால அனுபவங்களில் மக்கள் கொஞ்சம் தைரியமாக இருந்தனர். பயங்கர சத்தத்துடன் குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு போன போது கட்டடங்கள் ஆடுவது போலிருந்தது. வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த அகல்யா நடுக்கத்துடன் காணப்பட்டாள். எங்கோ தொலைவில் குண்டு சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. பால்காரப் பையன் பாலைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டான். அதை எடுத்துச் சூடாக்கிக் குடித்ததும் உடம்பு கொஞ்சம் தெம்பாயிருந்தது. மாங்குளத்திலி ருந்தும் புளிங்குளம் பகுதியிலிருந்தும் ஒட்டுசுட்டான் காட்டுப் பிரதேசங்களில் செல்கள் வந்து விழுந்துகொண்டிருந்தன. அப்பகுதி மக்கள் புதுக்குடியிருப்பை நோக்கி இடம்பெயரத் தொடங்கிவிட்டனர். கற்சிலை மடுக் கடைக்காரர்களும் சாமன்களை ஏற்று வதில் முனைப்பாயிருந்தனர். பக்கத்து விடுதி ரீச்சர் வந்து தாங்களும் நாளைக்கு வெளிக் கிட்டு புதுக்குடியிருப்புப் பக்கம் போகவிருப்ப தாகவும், அகல்யாவையும் பாதுகாப்பான இடத்துக்குப் போகுமாறும் சொல்லிவிட்டுப் போயிருந்தாள். இங்கு வந்து இரண்டு வருடமாகியும். படிப்பிக்கும் ஆசிரியர்களையும் தன்னிடம் படிக்கும் மாணவர்களையும் தவிர வேறு யாருடனும் தொடர்பில்லா மலே இருந்துவிட்டாள்.

“ரீச்சர்”பால்காரப் பையன்தான் வந்திருக்கிறான் என்று

தெரிந்துகொண்டு வெளியேவந்தாள்

"இனிமேல் பால் கொண்டுவரமாட்டன் ரீச்சர் அம்மா நானூற்றி ஐம்பது ரூபா கணக்கென்று காசை வாங் கிக்கொண்டு வரச் சொன்னவா"என்று சொல்லியபடி ஓரமாய் நின்றான்.

"ஏன் வரமாட்டாய்?" என்று கேட்ட அகல்யாவின் குரலில் மெல்லிய பதட்டமும் சேர்ந்திருந்தது. சின்னச் சின்ன உதவிகள் எது கேட்டாலும் அவன் மறுக்காமல் செய்பவன். அவளுக்குக் காலையிலிருந்து சகுனமே சரியில்லாத மாதிரி இருந்தது.

"நாங்கள் நாளைக்குப் புதுக்குடியிருப்புக்குப் போறம் எப்ப வாறமெண்டு தெரியாது" திரும்பி அறைக்குள் போனவள் இரண்டாயிரம் ரூபா தாளோடு வெளியே வந்தாள்.

"மாத்தின காசு இல்லைத்தம்பி. இதைக்கொண்டுபோய் இரண்டு லெமன் பப்பும் ஒரு நெஸ்ராமோல்ட்டும் வாங்கி காசையும் மாத்திக்கொண்டு வாறியா?" என்று பையனின் தோளில் கைவைத்தபடி நின்றாள். சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாய்ப் புறப்பட்டவன் சற்று நேரத்தில் பொருட்களோடு திரும்பி வந்தான்.

"இந்தாருங்கோ ரீச்சர். இதில தொளாயிரத்தி ஐம்பது ரூபா மிச்சக் காசும் வில்லும் இருக்கு" என்றவாறே பொருட்களையும் மிகுதிப் பணத்தையும் கொடுத்தான். பொருட்களை வாங்கியவள்

"காசு எல்லாத்தையும் கொண்டுபோய் அம்மாட்ட குடு"என்று சொன்னபோது நன்றியே சொல்லத் தெரியாத அந்த சிறுவனின் முகத்தில் பளிச்சிட்ட ஒளி ஆயிரம் நன்றிகளுக்குச் சமனாயிருந்தது. தனக்கு யாருமே இல்லை என்று உணரும் போதுதான் சின்னச்சின்ன உதவிகளின் கனதிகூடப் பெரிதாகத் தெரிகிறது. தன்னுடைய சொந்த உழைப்பில் ஒரு ஏழைக்கு உதவுவதில் உள்ள ஆத்ம திருப்தி அவளுக்குப் புதிதாயிருந்தது. பக்கத்து விடுதி ரீச்சரும் வந்து பயணமும் கவனமும் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அந்தப் பெரிய கட்டடத் தொகுதியில் தான் தனித்து விடப்பட்டிருப்பதை நினைக்கும்போதுதான் அருகில் இருப்பவர்களை அனுசரித்துப் போவதன் அவசியம் புரிகிறது. பொருட்களையும் மக்களையும் ஏற்றியவாறு லொறிகளும், டிராக்ரர்களும் புதுக்குடியிருப்பை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. மதிய உணவை முடித்த கையோடு பயணப் பையை எடுத்து உடுப்புகள் அதில் வைக்கக்கூடிய அளவு உணவுப் பொருட்களையும் எடுத்துத் திணித்துக்கொண்டாள். சைக்கிள் கரியரில் பையை வைத்துக் கட்டினாள்.

தெரிந்த தெய்வங்களை எல்லாம் மனதிலே வேண்டியபடி இலக்குத் தெரியாத பயணத்தை தொடங்கிவிட்டாள். இருநூறு மீற்றர்தான் போயிருப்பாள். கட்டியிருந்த பயணப்பை ஒருபக்கம் சரிந்துவிட்டது. மத்தியான வெய்யில் தொப்பியையும் ஊடறுத்துத் தலையிலே வியர்வையாய் இறங்கி முகத்திலே வழிந்தது. அருகிலே நின்ற மரமொன்றில் சைக்கிளைச் சாற்றிவிட்டுப் பையைச் சரிசெய்துகொண்டிருந்தாள். தெருவிலே வந்த டிராக்ரர் ஒன்று வேகத்தைக் குறைத்து அவளுக்குப் பக்கத்திலே வந்து நின்றது.

"ரீச்சர் பதுக்குடியிருப்புக்குத்தான போறியள்?"அது சிவா என்றுதான் அகல்யாவுக்குத் தெரியும். பாடசாலை முன்னேற்றத்தில் அக்கறை உள்ள இளைஞர்களில் அவனும் ஒருவன். அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் அவன்மீது ஒரு மதிப்பு உண்டு. அவனுக்கு விதானை வேலை கிடைத்திருப்பதாகவும் சண்டை நடக்கிறதாலை நியமனம் தள்ளிப் போவதாக ஆசிரியர்கள் பேசிக் கொள்வதும் அவளுக்கும் தெரிந்திருந்தது. அவனை நிமிர்ந்து பார்க்க அகல்யாவுக்கு வெட்கமாயிருந்தது. பலதடவைகள் அவனைப் பாடசாலையில் கண்டி ருந்தாலும் முன்பின் தெரியாத ஒருவனைப் பார்ப்பது போலவே கடந்து போயிருக்கிறாள்.

'ஓம்' என்பதுபோல் தலையை மட்டும் ஆட்டினாள். சிவா டிராக்ரரை விட்டுக் கீழே இறங்கினான்.

"இது மோசமான பாதை ரீச்சர். பழக்கமில்லாத ஆக்கள் இதில ஓடுறது கஸ்டம். நீங்கள் டிராக்ரர்ல ஏறுங்கோ"

என்று சொல்லியவாறே பதிலை எதிர் பார்க்காமல் பயணப் பையை அவிழ்த்துப் பெட்டிக்குள் இருந்தவர் களிடம் கொடுத்துவிட்டுச் சைக்கிளையும் தூக்கி ஏற்றினான். சிவாவின் அக்கா ஜெயா அகல்யாவின் கைகயைப் பிடித்து ஏற உதவியதுடன் இருப்பதற்கு வசதியாய் இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்தாள். நன்றி உணர்வா?தாழ்வு மனப்பான்மையா? அவமானமா? சொல்ல முடியாத உணர்வின் தாக்கத்தில் கண் கலங்கி சிவந்துபோயிருந்தது. டிராக்ரரில் சிவாவின் அம்மா யோகேசுவம் அப்பா குணமும் அக்கா குடும்பத்தினரும் அடுத்து என்ன என்ற ஏக்கத்தோடும் விரக்தியோடும் இருந்தனர்.

“நீங்கள் எங்கயம்மா போகவேணும்?”யோகேசு கேட்டதும் கையைப் புரட்டித் தெரியாது என்று சைகை காட்டிவிட்டு முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு விம்மி அழத்தொடங்கிவிட்டாள். அகல்யாவுக்குப் பக்கத்தில் இருந்த ஜெயா தோளைக் கையால் அணைத்து முதுகிலே தடவியதும் சற்று அமைதியானாள்.

“பறவாயில்லையம்மா நாங்களும் காணிபூமி வீடு வாசல் எல்லாம் இருக்கெண்டுதான் இவ்வளவு காலமும் வாழ்ந்தனாங்கள். ஒரே நாளில அகதியாய் போனம். மற்றவைக்குக் குடுத்ததும் உதவினதும்தான் இப்ப எங்களிகளிட்ட இருக்கிற மிச்சம். இருக்கிறதை பிரிச்சுச் சாப்பிடுவம் மரத்துக்குக் கீழே எண்டாலும் படுப்பம். நீ என்னை நம்பி வாம்மா”என்ற யோகேசு அவளையே உற்றுப் பார்த்தபடி சிந்தனைக்குள் மூழ்கிப்போனாள்.

நீங்கள் என்று அன்னியமாய் பேசிய யோகேசு இப்போது ‘நீ’என்று உரிமை எடுத்துக்கொண்டதை ஆழமான அன்பின் வெளிப்பாடாகவே அகல்யா புரிந்து கொண்டாள்.

“எங்கட கையில என்ன பிள்ளை கிடக்குது. கடவுளை நம்புங்கோ. ஒருதருக்கு ஒருதர் துணையாய் இருப்பம்.” யோகேசுவின் வார்த்தையை குணத்தாரும் ஒத்துக் கொண்டு பேசியது அவளின் பயங்களைத் தாண்டி பாதுகாப்பான இடத்திற்கு வந்துவிட்டதை உணர்த்தியது. புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி கழியும் வரை விலகிச்செல்ல முடியாத அளவுக்கு வீதி வாகனங்களாலும் சனங்களாலும் நிறைந்து போயிருந்தது.

“அப்பா..இஞ்ச சரிவராது. ஆனந்தபுரம் போய் கனகண்ணையின்ர இடத்தை பாப்பம். அது சரி ரீச்சர் எங்க போகவேணும்?” டிராக்ரர் ஓடிக்கொண்டிருந்ததால் பின்னுக்கு நடந்த பேச்சு வார்த்தைகள் சிவாவுக்கு தெரியவில்லை. அகல்யாவுக்கு ஒருகணம் ‘திக்’ என்றிருந்தது.

“அந்தப் பிள்ளையைத் தனிய விட்டுட்டுப் போக வேண்டாம். எங்களோடையே வரட்டும்.” யோகேசு சொன்னதற்கு மறுப்பு சொல்லாமல் அவன் மீண்டும் டிரக்ரரைச் செலுத்தத் தொடங்கினான்.

ஆனந்தபுரத்தோடு இரண்டு மாதம் முடிந்துவிட்டது. போர் உக்கிரமாகிக் கொண்டிருக்கிறதே தவிர ஓய்வதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. இராணுவம் விசுவமடுவைத் தாண்டிவிட்டதாகக் கதைகள் உலாவரத் தொடங்கின. புதுக்குடியிருப்பும் முல்லைத் தீவை நோக்கி நகரத் தொடங்கியது. சிவாவும் பொக்க ணைக்குப் போவது என்று முடிவில் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். பொக்கணை தொடங்கு மிடத்துக்கு அப்பால் வாகனத்தை நகர்த்த முடியவில்லை. அந்த இடத்தைக் கண்கொண்டு பார்க்க முடியாம லிருந்தது. பசி,பட்டினி. ஊருக்குச் சோறு போட்ட மக்கள் ஒரு பிடி சோற்றுக்குக் கையேந்தும் அவலம். முல்லைத்தீவு சங்கக்காரர் கஞ்சி காய்ச்சி குழந்தைக ளுக்கு ஊற்றிக்கொண்டிருந்தார்கள். சிவாவின் டிராக் ரரில் வரும்போது குற்றிவந்த அரிசி ஆறு மூடை இன்னும் இருந்தது. யார் யாரோ வந்து மூடை ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு விலை பேசினார்கள். குழந்தைப் பிள்ளைகளோடு பெண்கள் நகைகளைக் கழட்டி நீட்டியபடி அரிசிக்காக மடியைப் பிடித்து மன்றாடினார்கள். சிவாவுக்கு கண்ணீர் வந்துவிட்டது. திடீரென்று அரிசி மூட்டைக்கு மேல் ஏறி நின்றான்

“எனக்கு காசு தேவையில்லை. இந்த அரிசியை நான் சங்கக் காரரிட்டைக் குடுக்கப்போறன். அவை கஞ்சி யாயோ அரிசியாயோ மக்களுக்கு இதை பங்கிடட் டும்” சங்க ஊழியர்களைக் கூப்பிட்டு அரிசி மூடைகளை ஒப்படைத்தான். பெட்டியிலே இருந்த தங்களின் உடமைகளையும் இரண்டு பிளாஸ்டிக் தறப்பாள்களையும் எடுத்துக்கொண்டு எல்லாரும் நடப்பதற்குத் தயாராய் நின்றனர். தங்களை ஊருக்குள் அடையாளப்படுத்திய டிராக்ரரின் முன்னால் போய் அதைக் கையைத் தூக்கி வணங்கிவிட்டு நடக்கத் தொடங்கினான்.

அவனுடைய ஒவ்வொரு செய்கைகளும் அகல்யாவுக்கு இப்படியும் ஒரு மனிஷனா?என்ற பிரமிப்பையே ஏற்படுத்தியது.

“சிவா” என்ற அந்த இளைஞனில் பாடசாலைச் சமூகம் வைத்திருக்கிற மதிப்பின் அர்த்தம் இப்போதுதான் அகல்யாவுக்குப் புரிகிறது. இப்படி ஒரு வராலாற்று அனர்த்தம் உலகில் வேறு எங்காவது நடந்திருக்குமா என்று தெரியவில்லை. இலட்சக் கணக்கான மக்களை ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் அடைத்திருந்தனர். செல் வீச்சு,விமானத் தாக்குல்,துப்பாக்கிச் சூடு என்று அனைத்தும் அந்த மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டி ருந்தது. எங்கும் ஒரே மரண ஓலம். பார்த்த இடமெல்லாம் இரத்தமும் சதையும் சடலங்களுமாய் சிதறிக்கிடந்தன. காயப்பட்டவர்களுக்கு மருந்து இல்லை பசிக்கு உணவில்லை தாகம் எடுத்தவர்களுக்குத் தண்ணீர் இல்லை. இராணுவம் கண்ணால் பார்க்கக்கூடிய அளவுக்கு நெருங்கிவிட்டது. புலிகளின் எதிர்த் தாக்கு

தலும் முற்றாக ஓய்ந்துபோயிருந்தது. சாவா? வாழ்வா? மக்களின் தலைவிதி எழுதப்படப்போகும் கடைசி நிமிடங்களும் கரைந்து கொண்டிருந்தன. ஒரு சிறிய பள்ளத்துக்குள் சிவாவின் குடும்பமும் முகம் குப்புறப் படுத்துக் கிடந்தது. யோகேசு அகல்யாவின் இடுப்பிலே கையைப் போட்டு இறுக அணைத்தபடி எல்லாக் கடவுள்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டிருந்தாள். வேட்டுச் சத்தங்கள் நின்று சனங்களின் ஓலங்கள்தான். எல்லாப்பக்கமும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

''ஆமி சுத்தி வளைச்சிட்டான்'' மந்திரம்போல் எல்லார் வாய்களும் உச்சரித்துக் கொண்டிருந்தன.

''நாங்கள் உங்களைக் காப்பாற்றத்தான் வந்திருக்கிறம். பயப்படாமல் எல்லாரும் வரிசையாய் நடந்து வாருங்கோ''

இராணுவம் தமிழிலே ஒலிபெருக்கி மூலம் அறிவித்தபடி இருந்தது. பயத்தில் ஆளை ஆள் பார்த்து ஒருவர், இருவர் என்று தொடங்கி பின்னர் முண்டியடித்து இராணுவ முன்னரங்கை நோக்கி மக்கள் ஓடத் தொடங்கினர்.

''அம்மா,வெளிக்கிடுங்கோ சனமெல்லாம் போகுது'' குணத்தாரை ஒரு கையில் பிடித்தபடியே சிவா சத்தம் போட்டான். அகல்யா யோகேசுவின் கையை விலக்கிவிட்டு எழும்ப முயற்சித்தாள்.

''கொஞ்சம் பொறம்மா'' என்ற யோகேசு அருகிலே இருந்த 'பாக்'ஐ திறந்து உள்ளே கையை விட்டுத் தடவி அடியிலே கிடந்த தனது தாலிக்கொடியை இழுத்து எடுத்தாள்.

''இளம் பிள்ளைகளுக்கு என்ன நடக்குமெண்டு தெரியாது. ஆபத்துக்குப் பாவமில்லை இதைக் கழுத்தில போடம்மா.'' தாலிக்கொடியைக் கண்டதும் அகல்யா பாம்பை மிதித்தவள்போல பதறினாள்.

''என்ன அன்ரி சொல்லுறியள். செத்தாலும் பறவாயில்லை நீங்கள் கோவிச்சாலும் சரி நான் போடமாட்டான்.''அவள் கையைத் தட்டிவிட்டு எழ முயற்சித்தாள்.

''எல்லாரும் சாகிறதுதான் பிள்ளை. இதிலை இப்ப எத்தனைசனம் செத்துப்போச்சு. விசாரணை எண்டு கொண்டுபோனால் நினைக்கவே சதிரம் நடுங்குது'' யோகேசு அகல்யாவையும் பிடித்தபடி இன்னும் எழும்பாமல் படுத்திருந்தாள்.

''அம்மா என்ன செய்யிறியள்?'' சிவா அவசரப்படுத்தினான் ஒரு கண் இமைக்கும் நேரம்தான்..யோகேசு தாலிக் கொடியை அகல்யாவின் கழுத்திலே போட்டு கலைந்திருந்த தலை முடியை தூக்கி கொடிக்குமேல் விட்டாள். இரண்டு கைகளையும் இறுகப் பிடித்தபடி

''மூச்சுக் காட்டாமல் நட..இவ்வளவு நாளும் கோழி குஞ்சைப் பாதுகாத்தமாதிரி பொத்திப் பொத்திக் கொண்டுவாறன். சாகப்போறாவாம்'' யோகேசுவின் கண்கள் கலங்கி குரல் தழுதழுத்தது.அவளின் உண்மையான பாசத்தை கொச்சைப் படுத்திவிட்டோமோ என்று மனது உறுத்தியது. இருந்தாலும் கழுத்திலே தாலிக்கொடி ஏதோ ஊருவதுபோல அருவருப்பாயிருந்தது. யாரோ யாருக்கோ கட்டிய தாலி அவளின் கழுத்திலே. ' நினைக்கவே சங்கடமாயிருந்தது. கூட்டத்தோடு கூட்டமாய் நடந்துகொண்டிருந்தனர். சிவாவைப் பிடித்து இழுத்துக் காதுக்குள் ஏதோ சொல்லிமுடித்தாள் யோகேசு.

''உனக்கென்னம்மா பைத்தியமே?'' சிவா உறுக்கினான். என்ன சொல்லியிருப்பாள் என்று அகல்யாவுக்குப் புரிந்தது. நெஞ்சு படக்படக் என்று அடித்துக்கொண்டது.

ஒரு மணித்தியாலம். இராணுவத்தின் முன் வந்துவிட்டனர். என்ன நடக்கப் போகிறது என்ற திகில் எல்லோர் முகத்திலும் தெரிந்தது. பெண் பிள்ளைகளையும், இளைஞர்களையும் வேறாக்கி தனிமைப்படுத்தியிருந்தனர்.

பெற்றோர் நின்று அழுது புலம்பிக்கொண்டிருந்தனர்.

''பயப்பட வேண்டாம். விசாரிச்சுப்போட்டு அனுப்புவம்.'' ஒரு அதிகாரி

சொல்லிக்கொண்டிருந்தான். சிவாவையும், அகல்யாவையும் முன்னால் விட்டு யோகேசுவும் குணத்தாரும் பின்னால் நின்றுகொண்டனர். இராணுவத்தின் புலனாய்வுப் பார்வை சிவாவையும் அகல்யாவையும் ஊடுருவி ஆராய்ந்தது. அகல்யா அணிந்திருந்த தாலிக்கொடியையும் அவர்கள் அவதானித்திருக்க வேண்டும். சிவாவின் அடையாள அட்டையை அதிகாரி ஒருவன் வாங்கிக் கொண்டான்.

''இது யாரு?'' சிங்களத் தமிழ்தான். அகல்யாவிடம்தான் கேட்டான்.

''என்ர ஹஸ்பன்ட்'' ஏதோ ஒரு புரியாத உணர்வு உடல் முழுக்கப் பரவியது.

“அவரு பெயரு சொல்லுங்க”

“சிவகுமார்”

“அவரு அப்பா பெயரு சொல்லுங்க” எல்லோரும் ஒருகணம் திகைத்துவிட்டனர்.

“குணரத்தினம்”அவள் தடுமாறாமல் சொல்லி முடித்தது சிவாவுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவளே சிவாவின் முழுப் பெயரை பாடசாலைத் தேவைகளுக்காக எழுதிய ஞாபகங்கள் இன்றைக்குக் கை கொடுத்திருக் கிறது. விசாரணை முடியப் பதிவு செய்து உரிய ஆவணங்களைப் பெற்றபின் பஸ்சிலே ஏறுவதற்காகக் காத்திருந்தனர்.

“ஜெயாக்கள் எங்க” யோகேசு பதட்டமாகக் கேட்டாள்.

“எங்களுக்கு முன்னுக்கு விசாரணை முடிச்சுப் போனது கண்டனான். அவை வருவினம்.இப்ப எழும்பித் திரியேலாது.”சிவா மெதுவாகச் சொன்னான்.

செட்டிகுளம் அருணாசலம் முகாமிலே கொண்டு வந்து விட்டு இரண்டு வாரம் முடிந்துவிட்டது. ஆரம்பத் தில் பல சிரமங்களைச் சந்தித்தாலும் இப்போது படிப்படியாகச் சில வசதிகளைச் செய்திருக்கிறார்கள். சிலது பழகிப் போய்விட்டது. வந்து இரண்டுநாள் தேடலின்பின்தான் ஜெயாவின் குடும்பம் இராமநாதன் முகாமிலிருப்பதைக் கண்டுபிடித்தனர்.

சிவாவுக்கும் பெற்றோருக்கும் அகல்யாவுக்கும் ஒரு கொட்டில் வழங்கப்பட்டிருந்தது. முகாமுக்கு வந்ததும் யோகேசுவிடம் தாலிக்கொடியைக் கழட்டிக் கொடுத்து விட்டாள். ஆனால் வெளியே போகும்போது பாதுகாப்புக்காக சிறிதாக ஒரு குங்கும்ப் பொட்டு வைக்கச் சொல்லி யோகேசு சொன்னதை அவளால் மறுக்க முடியவில்லை. ஆசிரியர்கள் அங்குள்ள மாணவர்களுக்கு வகுப்பு நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அகல்யாவும் படிப்பிப்ப தற்காக போய்வந்து கொண்டிருந்தாள். சிவாவும் அரசாங்க அதிபரின் பணிப்பில் கிராம சேவையாள ருக்கான பயிற்சியை முகாமிலுள்ள கச்சேரி அலுவல கத்தில் தொடங்கியிருந்தான்.

அன்று சனிக்கிழமை. சிவாவின் பெற்றோரும் அகல் யாவும் கொட்டிலைப் பாவிக்கப் பக்கத்தில் நின்ற நாவல் மரத்தின் அடிதான் சிவாவின் வசிப்பிடமாய் மாறியிருந்தது. இரவு சரியான தூக்கமில்லை. விடிந்தால் காலைக்கடன் முடிப்பது குளிப்பது எல்லாம் சிரமமாகி விடும். போய் அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு திரும்ப வந்தான் தாழ்வாரத்திலிருந்த இரண்டு பிளாஸ்டிக் வாளியையும் எடுத்துக்கொண்டுபோய் தொட்டியிலிருந்து தண்ணீரை எடுத்துவந்து வீட்டு அருகில் இருந்த பரலில் நிறைத்துவிட்டான். அகல்யா பொதுத் தொட்டிக்குப் போகாமல் யோகேசுவின் ஏற்பாடு இது. லீவு நாள் என்று யோகேசு கொஞ்சம் பிந்தி எழுந்தாலும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தாள்.. அகல்யா கால் முகம் கழுவிவிட்டு துவாயால் துடைத்த படியே வந்தாள்.

“அன்ரி, ஏலாமல் இருக்கன்ரி. ஒரு ரீ போட்டுத் தாறியளே?”

“ஏனம்மா காய்ச்சலோ?”

“இல்லையன்ரி”என்ற அகல்யாவின் முணுமுணுப்பில் யோகேசு புரிந்து கொண்டாள்.

“ஐஞ்சாறு நாள் முந்தீட்டுது என்னம்மா?”யோகேசு தன்னில எவ்வளவு கவனமாயிருக்கிறாள் என்பது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. செய்த வேலைகளை அப்படியே போட்டுவிட்டுத் தேனீரைத் தயாரித்து அகல்யாவிடம் கொடுத்தாள். காலை உணவு தயாரித்து எல்லாருக்கும் கொடுத்துவிட்டு யோகேசு அவசரமாக வெளிக்கிட்டுக்கொண்டிருந்தாள்.சிவா நேற்றைய பத்திரிகையில் மூழ்கியிருக்க பழைய சருகுகளை குணத்தார் கூட்டி அள்ளிக்கொண்டிருந்தார்.

“நேற்றும் ஜெயாவிட்ட போகேல்லை. இஞ்ச பிள்ளை தனிய இருக்குது. ஒரு இடமும் வெளிக்கிட்டிடாதையுங்கோ நான் ஒருக்கால் போய்ப் பாத்துக்கொண்டு வாறன்”

குணத்தாரிடம் சொல்லியபடியே அடையாள அட்டை யையும் எடுத்துக்கொண்டு யோகேசு வெளியே போய்விட்டாள். அடிவயிற்றைக் குற்றி வலித்தது. வலி தாங்க முடியாமல் கீழ் உதட்டை மடித்து கடித்தபடி படுத்திருந்தாள் அகல்யா. கால் இடுக்கில் பிசுபிசுப்பது போன்ற உணர்வு பயமாயிருந்தது. உதவிக்கு யோகே சுவும் இல்லை. மெதுவாக எழும்பித் துவாயை எடுத்து போட்டிருந்த சட்டைக்கு மேலே கட்டினாள் பர்ஸைத் திறந்து ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். நாவலுக்குக் கீழே மரக்குற்றியில் இருந்தவாறே சிவா பத்திரிகையில் மூழ்கிப் போயிருந்தான். அவனிடம் கேட்பதற்குச் சங்கடமாயிருந்தது.

“சிவா,” திடுக்கிட்டு நிமிர்ந்தான். கலங்கிக் கிடந்த அகல்யாவின் கண்கள் உடைந்து வழிந்தது. இதுவரையும்

நேருக்கு நேர் அவன் முகத்தைப் பார்த்து அவள் பேசியதில்லை.

“எனக்கு ஒரு உதவி செய்வியளா?”

“என்ன இப்பிடிக் கேக்கிறியள்?சொல்லுங்கோ”

“எனக்கு ஒரு பைக்கட் ‘கோட்டெக்ஸ்’வாங்கித் தாறியளா?” என்று கேட்டபடி காசை நீட்டினாள்.சிலர் கதைக்கும்போதும் விளம்பரங்களிலும் அந்த வார்த்தை அவனுக்குத் தெரிந்திருந்தது. வன்னிக்கு அரசு அதைத் தடை செய்திருந்ததால் அவன் பார்த்ததுகூட இல்லை.

“எங்க இருக்கும்”

“சங்கக் கடையில கேட்டுப்பாருங்கோ”காசை வாங்காமல் எழும்பி வேகமாக நடந்தான். அந்த நாட்களில் தன் அக்கா படும் அவஸ்த்தைகளை அவன் கண்டு வருந்தியிருக்கிறான். மாரிகாலங்களில் அந்தத் துண்டுகளைக் கழுவி காயவிடுவதற்கு ஜெயா படும் பாடு அவனை வருத்தியிருக்கிறது. ஒரு பெண், ஒரு இளம் பெண்ணின் தாய் இந்த நாட்டின் தலைமைத் துவத்தில் இருந்த காலத்திலேயே பெண்ணியல் சார்ந்த அத்தியாவசியப் பொருளொன்றை ஆயுதம்போல் அடையளப்படுத்தித் தடை செய்தது எவ்வளவு கொடுமை? சங்கக் கடையில் “இல்லை.இன்று சாமான் வரும் பத்துப் பதினொரு மணிபோல வந்து பாருங்கோ”என்று சொன்னதும் ஒரு நெஸ்ராமோல்ட் ரின்னை வாங்கிக் கொண்டு திரும்பினான். இன்னும் கட்டாமல் புதிதாய் வைத்திருந்த சறத்தை எடுத்துத் துண்டு துண்டாய் கிழித்து அகல்யாவிடம் கொடுத்தான்.

“இப்ப இதைப் பாவியுங்கோ. மத்தியானம் எப்பிடியும் வாங்கித் தரலாம்”என்று சொல்லிய சிவா நெஸ்ரா மோல்ட்டைக் கரைத்து எடுத்து வந்து தாழ்வாரத்தில் நின்றபடியே எட்டிக் கொடுத்தான். கண்ணீரால் நன்றி சொல்வதைத் தவிர அவளுக்கு வார்த்தைகள் வர மறுத்தது.

முகாமில் இருப்பவர்களை உறவினர் பார்க்க வந்தால் ஒலிபெருக்கியில் அறிவித்தல் செய்யப்படும். உள்ளே இருப்பவர்கள் கம்பி வேலியூடாகப் பார்த்துப் பேச முடியும். தன்னுடைய பெயரையும் கூப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்து இப்போது அகல்யா அதை மறந்தே போய்விட்டாள்.

“கற்சிலைமடு மகா வித்தியாலய ஆசிரியை அகல்யா சந்திரசேகரம் தேடுவது பெற்றோர்.”இரண்டு தடவைகள் அறிவித்தல் வந்து ஓய்ந்து போனது. எதிர்பாராது வந்த அறிவிப்பில் அவளுக்கு உடலெல்லாம் நடுங்கியது. ஒரு வருடத்திற்கு மேல் பார்க்காத பெற்றோரை பார்க்கப்போகிறோம் என்ற அதிர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் நெஞ்சுஅடைப்பது போலிருந்தது

இந்தப் பிறவியில் அவர்களைப் பார்ப்போமா என்று உயிரைக் கையில் பிடித்ததுக்கொண்டு ஏங்கிய பொழுதுகள் பயங்கரமாய் வந்து போனது. வகுப்பிலே பாடம் நடத்திக்கொண்டிருந்தவள் பக்கத்தில் நின்ற ரீச்சரிடம் சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாய் முன்பக்கம் வந்தாள். வேலி ஓரமாய் நின்ற தாயைக் கண்டுவிட்டாள். அழுதுகொண்டே ஓடினாள். பாசத்தின் உச்சம். முள்ளுக் கம்பி அவளுக்கு கயிறுபோல் தெரிந்தது. கம்பிக்குள்ளால் கையைத் திணித்து தாயைக் கட்டிக்கொண்டு “ஓ” வென்று அழுதாள். விலகி நிமிர்ந்து பார்த்தபோது சொண்டை மடித்துக் கடித்தபடி தகப்பன் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

“அப்பா,அப்பா” என்று விம்மியபடியே இரண்டு கைகளையும் நீட்டினாள். தந்தை அசையாமல் நின்றது அவளுக்குப் பெரும் அதிர்ச்சியாயிருந்தது..

“முதலில நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையோ எண்டு எனக்குத் தெரியவேணும்.”

“அப்பா”அந்த வார்த்தையும் தகப்பன் விலகிநின்ற தோரணையும் அவள் இதயத்தைக் குத்திக் கிழிப்பது போலிருந்தது.

“என்னம்மா இது?” தாயின் இரண்டு கைகளையும் இறுகப் பற்றிக்கொண்டாள்.

“நீ கலியாணம் கட்டீட்டாயென்று ஊரெல்லாம் கதைக்கிது மோனை. அப்பான்ர குணம் உனக்குத் தெரியும்தானே”

“அப்ப நெத்தியில இருக்கிற குங்குமத்துக்கு என்ன அர்த்தம்” தந்தை அள்ளி வீசிய நெருப்பில் அகல்யா வெந்துகொண்டிருந்தாள்.உண்மையை உரத்துச் சொல்ல அவளால் முடியவில்லை. அந்தப் பகுதி தீவிர புலனாய்வுக் கண்காணிப்பில் இருப்பது அவளுக் குத் தெரியும். தந்தைக்கு அந்த இடத்தில் தீக்குளித்து தன்னைப் புனிதமாய்க் காட்ட அவள் முயலவில்லை. ஏதாவது சொல்லப்போய் அது தனக்கு மட்டுமல்ல சிவாவையும் சிக்கலுக்குள்ளாக்கும் என்று அகல்யா எல்லாப் பழிகளையும் மௌனமாய் ஏற்றுக்கொண்

டாள்.

"அகல்,வவுனியாவில அண்ணை வீட்டிலதான் நிக்கிறம். ஞாபகத்தில வைச்சிரு. வீட்ட வரேக்க நீ மட்டும்தான் வரவேணும்." திரும்பிப் போய் தள்ளி நின்றுகொண்டார்.
"அம்மா நான் உங்கட பிள்ளையம்மா தப்பான வழியில போகமாட்டன். எல்லாம் வந்து கதைக்கிறன். அப்பாவைக் கவனமாய்ப் பாத்துக்கொள்ளுங்கோ" சொல்லி விட்டு தாயைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி போய்க் கொண்டிருந்தாள் அகல்யா.
வயோதிபர்களையும் அரச ஊழியர்களையும் முகாமிலிருந்து விடுவிப்பது என்ற தீர்மானத்தின்படி அன்று சிவா பெற்றோர் அகல்யா எல்லோரும் விடு விக்கப்பட்டுவிட்டார்கள்..
தாய் தகப்பன் வந்து பார்த்ததை யோகேசுவிடம் அகல்யா சொல்லியிருந்தாள். அவர்களைக் காயப்படுத் தக் கூடாதென்று அங்கு நடந்த சம்பவங்களை மறைத்து விட்டாள். எல்லாரும் போக இப்போது அங்கே ஒரு களேபரம் நடக்கும் என்று அவளுக்குத் தெரியும். எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவள் வந்துவிட்டாள்.
காசைக் கொடுத்து ஒட்டோக்களை அனுப்பிவிட்டு "கேற்" ஐத் திறந்து அகல்யா முன்னே போக மற்றவர்கள் பின்னால் வந்துகொண்டிருந்தனர்.
"அகல் நீ மட்டும் உள்ளே வா!" மற்றவர்களுக்கு எதுவும் புரியவில்லை. இப்படி ஒரு வரவேற்பை அவர் கள் எதிர்பார்க்கவில்லை. ஆரவாரத்தைக் கேட்டு அகல்யாவின் பெரியப்பா வெளியே வந்தார்.
"எனக்கு உயிர் கொடுத்த தெய்வங்கள் பெரியப்பா. என்னெண்டாலும் உள்ள கூப்பிட்டு பேசச் சொல்லுங்கோ பெரியப்பா. எல்லாரும் பாக்கினம் அவமானமாயிருக்கு" யோகேசுவோடு ஒட்டியபடியே அகல்யா அழுது கொண்டிருந்தாள்
"தம்பி இது என்ர வீடு. அவனுக்காக நான் மன்னிப்புக் கேக்கிறன். உள்ள வாருங்கோ பேசுவம்."
"அன்ரி வாருங்கோ அன்ரி. என்னை பாதுகாப்பாய்க் கொண்டுவந்து விட்டிட்டு நீங்கள் அவமானப்பட்டுப்போக நான் விடமாட்டன். அகல்யாவுக்குக் கண்ணைத் துடைக் கத், துடைக்க கண்ணீர் வந்துகொண்டே இருந்தது.. சிவாவும் பெற்றோரும் உள்ளே போக மறுத்துவிட்டனர். பெரியப்பா கதிரையைக் கொண்டுவந்து வெளியே போட்டு உட்கார வைத்தார்.
"தம்பி எங்கட நெருங்கின சொந்தக்காரர் முத்தையன் கட்டில இருக்கினம். அவருக்கு உங்களையும் தெரிஞ் சிருக்கு. அகல் தாலிக்கொடி போட்டிருந்ததிலயிருந்து எல்லாம் எனக்குச் சொல்லியிருக்கிறார். அதை நம்பாமல் இருக்கவும் முடியேல்லை. இனி நீங்கள்தான் சொல்லவேணும்." பெரியப்பா சிவாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். சிவா சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு
"எனக்கு சுபா என்று ஒரு தங்கச்சி இருந்தவள். இயக் கத்துக்குப் போய் ஐந்து வருடத்துக்கு முதல் ஆனையிறவு அடிபாட்டில வீரமரணம் அடைஞ்சிட்டா. உடல்கூடக் கிடைக்கேல்ல. அதால அவள் இறந்திட்டாள் எண்டிறதை அம்மாவாலை இன்னும் நம்பமுடியேல்ல.. அதிலயிருந்து அவ இன்னும் மீளவேயில்லை. இரண்டு வருடத்துக்கு முதல் எங்கட பள்ளிக்கூடத்தில அகல்யா வைக் கண்டதும். எனக்கே அதிர்ச்சியாயிருந்தது. அச்சு அசலாய் சுபாவைப் பாக்கிறமாதிரியே இருந்தது. இதை நான் அம்மாவுக்கும் சொல்லியிருக்கிறன். இனி ஊரில இருகேலாது என்று இடம் பெயர்ந்து வரேக்க ஏதோ முற்பிறப்பு தொடர்போ தெரியாது கடவுள் எங்களோட கொண்டுவந்து அவவைச் சேர்த்திருக்கிறார் எண்டுதான் நான் இன்னும் நம்பிறன். அம்மா சுபா மீண்டும் கிடைச்சமாதிரியான ஒரு உணர்விலேயே இன்னும் இருக்கிறா. இறுதியாய் இராணுவ சோதனை சாவடிக்கு போகேக்கை அகல்யாவைப் பாதுகாக் கவேணும் என்ற நோக்கத்துக்காகத் தன்னிச்சையாய் அவளை வற்புறுத்தி தன்ர தாலிக்கொடியை எடுத்து அவளுக்குப் போட்டிருக்கிறா. முட்டாள்தனமான வேலை எண்டுதான் நானும் பேசினனான். ஆனால் அங்க நடந்த சம்பவங்களைப் பாக்கேக்க அவவின்ர புத்திசாலித்தனம்தான் அகல்யாவை உங்களுக்கு முன்னால நிக்க வைச்சிருக்கு. அவளுக்கு நான் பெரிசாய் ஒண்டுமே செய்யேல்லை. செய்த சின்னச் சின்ன வேலைகள்கூட சுபாவுக்கு செய்த ஆத்மதி ருப்தியை தந்திருக்கு." எழுந்து போன சிவா அகல்யாவின் கையைப் பிடித்துச் சந்திரசேகரத்தின் முன் கொண்டுபோய் நிறுத்தினான்.
"ஐயா, உங்கட பிள்ளையை என்னமாதிரி நீங்கள் எங்கட ஊரில விட்டுட்டு வந்தியளோ அதேமாதிரி ஒரு அண்ணனாய் உங்கட கையில ஒப்படைக்கிறன். இடையில நடந்த சம்பவங்கள் தவறு என்றால் என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" வணங்குவதற்குத்
தூக்கிய கையைத் தூக்கவிடாமல் இறுகக் கட்டிக் கொண்டு
"அண்ணா" என்று அகல்யா கத்தின சத்தம் சுவர்களில் மோதி எதிரொலித்துக்கொண்டிருந்தது.



# பெண்மையின் தவறோ?



-தாட்சாயணி-

“ராஜி அக்காண்டை கலியாண வீடியோ போடீனை, ராஜி அக்கா சொல்லி விடச் சொன்னவ”

விர்ரென்று நெளிந்து சுற்றி பிரேக் அடித்து வளைத்துத் திருப்பும் பாவனையில் கிஷோர் ஓடிய கணத்தில் பாமதி அடுக்களைக்குள் பாத்திரங்களை ஒதுக்கிக் கொண்டிருந்தாள். அம்மா சற்று முன்னர் தான் வீட்டிலிருந்து கிளம்பியிருந்தாள். இரண்டு வயசான பாபுஜியை சற்றே தள்ளியிருக்கும் பெரியம்மாவிடம் ஒப்படைத்து விட்டு ஒரு சின்ன வேலைக்கு அவள் போக வேண்டும். போனால் தான் இரவுக்குள் அவள் ஐந்நூறு ரூபாவோடு திரும்ப வர முடியும். பனை யோலைத் தடுக்குகளால் பிரிக்கப்பட்டிருந்த அடுக்க ளையின் சப்பிப் பலகையாலான கதவினை இழுத்துக் கொழுக்கியால் மூடி விட்டு அவள் விறாந்தைக்கு வந்தாள். பாழாய்ப் போன கொரோனா வந்தது தான் வந்தது. அவள் இங்கே அசைய மாட்டாமல் முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறது

ராஜி அக்காவின் கல்யாண வீடியோவைப் பார்ப்பதா விடுவதா? எனும் குழப்பம் அவளை நெடுநேரம் அலைக்கழித்தது. ராஜி அக்காவுக்கு சுமதியை விட ரெண்டு வயசு குறைய, இவளை விட ரெண்டு வயசு கூட. ஆக, இவளுக்கும் சுமதிக்கும் இடையில் நாலு வயசு வித்தியாசம். வீடு இருக்கிற நிலையில் இப்போ கல்யாண வீடியோ பார்ப்பது தான் இல்லாத குறை என்று தோன்றியது. இருந்தாலும் இரண்டரை மாதங்களாய்த் தொடரும் இந்த இறுகிய நிலையிலிருந்து வெளியே வர ராஜி வீட்டிற்குப் போய் வந்தால் என்ன என்று தோன்றியது. அங்கே இருக்கின்ற யாராவது சுமதியைப் பற்றி ஏதேனும் கேட்டு விடுவார்களோ என்று தோன்றியது. அடி வயிற்றிலிருந்து கொஞ்சம் காந்தல் எழுந்து அடங்கியது.

“பாமதி அக்கா உங்களுக்குத் தான் பார்த்துக் கொண்டிருக்கீனை...” கிஷோர் தூரத்திலிருந்து குரல் கொடுத்தான்.

“இனியும் போகாமலிருப்பது சரியில்லை” அவள் வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டி விட்டு ராஜி வீட்டை நோக்கி நடந்தாள்.

ராஜி வீடு இவளது வீட்டிலிருந்து நாலாவதாயிருந்தது. எல்லாமே ஒன்றரைப் பரப்புக் காணிக்குள் அமைந் திருக்கும் சிறு வீடுகள், கோவில் குத்தகை நிலம்.

இவர்களுக்கு சொந்தமான காணிகள் இல்லையென்பதால் அரச வீட்டுத் திட்டங்களும் இல்லாமல் முறையான அமைப்பு இல்லாத அரை நிரந்தர வீடுகள். மழைகாலங்களில் நிலம் ஊறி வெள்ளம் உள் நுழையாம லிருந்தால் அதுவே அதிசயம்தான். ஆனால் அதிசயத்திலும் அதிசயமாய் அநேக வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன. விடலைப் பையன்கள் சீறித் திரியும்படிக்கு சில வீடுகளில் பல்ஸர்களும் இருந் தன. இவளுக்கு “ப்ளெஷர்” ஒன்று எடுக்க வேண்டும். இப்போதில்லா விட்டாலும், எப்போதாவது.

இந்த பல்ஸர்களும் தொலைக் காட்சிகளும் லீசிங்கில் வாங்கப்பட் டிருப்பதாய் சுமதி ஒரு தடவை இவளுக்குச் சொல்லியிருக்கிறாள். லீசிங் காசு வாங்குவதற்கென்று சில இளைஞர்கள் பொழுதுபடுகிற நேரங்களிலும் வருவார்களாம். ஏன் பகலில் வாங்குவதற்கென்ன என்று இவள் கேட்டால் இப்படி கூலிக்கு வேலை செய்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பொழுது படும் வேளையில் தான் வீட்டுக்குத் திரும்புவார்கள் என்பதால் அந்த நேரம் வருகிறார்களாம். ஆனால் காசு கிடைக்காவிட்டால் அவர்களின் தூஷண வார்த்தைகள் மனிதர்களை சாகத் தூண்டிவிடுமாம். சுமதிக்கு ஊர் விசயங்களென்றால் அத்துப்படி. அவள் எப்போதும் ஊரில் தானே இருக்கிறாள். பாமதி வவுனியா கொலீஜிற்கு தெரிவு செய்யப்பட்டு போன பிறகு ஹாஸ்டல் வாசத்தோடு, படிப்பு, படிப்பென்றே மூச்சு விடத் தொடங்கியிருந்தாள். அதற்கு கொஞ்சக் காலம் முதல் தான் சுமதிக்குத் திருமணம் ஆகியிருந்தது. சுமதி பத்தாம் வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. அப்பா தங்கு வேலைக்குப் போய்க் கொண்டி ருந்தார். திடீரென்று ஒரு நாள் அப்பா மேல் சாரத்திலிருந்து கீழே விழுந்து காலை உடைத்துக் கொண் டார். அப்போ பார்த்துத் தெற்கி லிருந்து ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு ஆள் தேடித் கொண்டி ருந்தவர்களின் தொடர்பு அப்பாவிற் குக் கிடைத்தது. இவர்கள் இருவரில் ஒருவர் மேலே படிக்கலாம் என்றும், மற்றவர் கார்மெண்ட்ஸிற்கு வேலைக் குப் போனால் தான் குடும்பத்தைக் கொண்டு நடத்தலாம் என்றும் அப்பா சொன்ன அந்த நாள் அவளுக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது.

**“காலம் முழுக்க வாழப் போற வாழ்க்கை. இப்பிடி எடுத்தன், கவுத்தன் எண்டு முடிச்சுப் போடாதை, எதெண்டாலும் நல்லா யோசிச்சு முடிவெடு.” என்றாள்.**

இவளுக்குப் படிக்க வேண்டும் என்ற விருப்பம் நிறைய இருந்தது. சுமதிக்கும் விருப்பம் இருந்திருக் கலாம். அப்பா இவர்களில் எவரைத் தெரிவு செய்வது என்று குழம்பி கடைசியில் திருவுளச்சீட்டு மூலம் குலுக்கிப் போட்டு இவளைப் படிப்புக்கென நேர்ந்து கொண்டார். சுமதி கார்மெண்ட்ஸில் சேர்வதற் காகத் தெற்கு நோக்கிப் பயணப்பட் டாள். அதற்குப் பிறகு அவள் அனுப்பிய காசில் தான் இவர்களது வாழ்க்கைப்பாடு போய்க் கொண்டி ருந்தது. மூன்று வருடங்களுக்குப் பிறகு அவள் கொழும்பிலிருந்து திரும்பிய போது திடீரென்று திரும்பிப் போக மறுத்துவிட்டாள். இப்போது அம்மாவும், சின்னச் சின்ன வேலைகளுக்குப் போகத் தொடங்கியபடியால் யாரும் அவளை வற்புறுத்தவில்லை, அவளும் ஊருக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருந்தவள் பதினெட்டு வயதுக்குள்ளேயே தனக்குரியவன் என ஒருவனை அடையாளம் காட்டினாள்.

அவளது அந்தக் கல்யாணத்தில் அப்பாவிற்கு அவ்வளவு விருப்பம் இல்லாவிட்டாலும் அவளதுஆசையை நிறைவேற்றி வைக்கவேண்டியது தனது கடமை என்று உணர்ந்தது போல கல்யாணத்திற்கான ஆயத் தங்களை முன்னெடுக்கச் சொன்னார். படிக்க வைக்கத்தான் முடியாவிட்டா லும் அவளது ஆசைக்கேற்ற வாழ்க்கையாவது அவளுக்கு கிடைக்கட்டும் என அவர் நினைத்தி ருக்கலாம். ஆனால் அம்மாவால் அப்படி இருக்க முடியவில்லை.

“காலம் முழுக்க வாழப் போற வாழ்க்கை. இப்பிடி எடுத்தன், கவுத்தன் எண்டு முடிச்சுப் போடாதை, எதெண்டாலும் நல்லா யோசிச்சு முடிவெடு.” என்றாள். பாமதியோ அந்தக் காலங்களில் உயர்கல்விக் கான கனவுகளில் மூழ்கியிருந்தாள். சுமதியின் காதல் விவகாரம் எங்கே தொடங்கியது? எப்படி ஆகப் போகிறது? என்கின்ற கேள்விகளை அவள் அத்தருணத்தில் சிந்திக்கவே யில்லை. தனக்குரிய வாழ்க்கையை அவள் தெரிவு செய்திருக்கிறாள். அதைப்பற்றிக் கருத்துக் சொல்லி ஒரு சஞ்சலத்தை எதற்குப் புதிதாக உருவாக்க வேண்டும் என்பதுவாய் அவள் வெறுமனே சிரிப்போடு விலகிக் கொண்டாள்.

ராஜி வீட்டில் பத்தோ, பதி னைந்தோ பேர் கூடியிருந்தனர். எல்லோருமே சுற்றியுள்ள குடியிருப் புகளில் வசிப்பவர்கள் தான். இவள் போகும் போது மாப்பிள்ளைக்குப் பாலறுகு வைத்துக் கொண்டிருந் தார்கள். அங்கிருந்த பெண்கள்

மாப்பிள்ளையான ராஜி அக்காவின் கணவரை ஏதோ நக்கலடிக்க அவர் சுவரில் சாய்ந்தபடி நெளிந்து கொண்டிருந்தார். அதற்கேற்றாற் போல இவள் அறிந்திராத ஏதோ ஒரு பாட்டுக் காட்சிக்கேற்றபடி இழைந்து கொண்டிருந்தது. சுமதியானால் அந்தப் பாட்டை அறிந்து வைத்திருக்கக் கூடும் என இவளுக்குத் தோன்றிற்று. சுமதியின் ரசனைக்கு அவள் இங்கி ருந்திருந்தால் இந்தப் பாட்டைவிட இன்னொரு பாட்டு இந்தக் காட்சிக்கு இன்னும் எடுப்பாக இருந்தி ருக்கும் எனச் சொல்லியிருப்பாள். ஆனால், அவளது திருமணம் தான் இப்படிப்பட்ட வீடியோக்கள் எதுவுமே இல்லாமல் வெறுமனே கோயிலில் தாலி கட்டியதோடு முடிந்து போயிற்று.

"சுமதி இன்னும் வீட்டை வரேல்லைப் போலை," மூன்று வீடு தள்ளியிருக்கும் கோகிலத்தின் குரல் அது. இவளுக்குக் கடுப்பேறக் காதில் விழாதது போலத் திரையில் பார்வையைச் செலுத்தினாள். கண்கள் திரையைப் பார்த்தாலும் மனசு அதற்குள் நுழையாது சுமதியைப் பற்றித் துளாவிக் கொண்டிருந்தது. சுமதியின் கண்கள் காந்தக் கண்கள்தான். வளைந்து, சுழன்று அவை தமக்குரிய இரையை ஈர்க்கின்றனவோ? என இவளுக்கு அண்மைக் காலமாகத் தான் தோன்றி வருகிறது. இவளது கண்கள் பொதுவிலேயே எதிர் நிற்பவரோடு பேசத் தயங்கும் கண்கள். கூடுதலாக நிலம் பார்த்துத் தழையும் கண்கள். அதைக்கூட அவள் தாமதமாகத் தான் உணர்ந்தாள். கொலீஜில், அவள் மற்றவர்களோடு தழைந்து, தழைந்து பேசுகிறதைக் கண்டு விபுலன் தான் இவளுக்கு அதை வேறுபடுத்திக் காட்டினான். அந்த வேறுபடுத்தலின் விளைவு தான், சுமதியின் குணங்களையும் வேறுபடுத்திப் பார்க்கச் சொல்கிறதோ?.

சுமதியும், அவள் புருஷனும் அந்த வீட்டில் வசிக்கத் தொடங்கிய சில நாள்களிலேயே இவளுக்குக் கொலீஜிற்கு வரும்படியான அழைப்பு வந்தது. சுமதிக்குத் திருமணத்தால் கிடைத்த மகிழ்ச்சியை விட அதிகப்படியான மகிழ்வு தனக்குரியது எனும் பிரமையில் அவள் மிதந்தாள். அப்படியிருந்தும் அந்த மகிழ்வை சுமதியிடமிருந்து பறித்து விட்டு, இவ்வாறு நினைப்பது தவறில்லையோ எனும் குற்ற உணர்வும் அவளை உறுத்தாமலில்லை. கடைசியில் அவள் புறப் பட்டுக் கொண்டிருந்த போது அப்பாவின் குரல் கரகரப்பாய் அவளை அழைத்தது.

"சுமதின்ரை படிப்பை நிப்பாட்டித் தான் உன்னைப் படிக்க வச்சது. இதை நீ ஒருக்காலும் மறக்கக் கூடாது, அதுக்குத் தக்கபடி நீ விளையாடாமல் படிக்கோணும்."

இவள் அப்படித்தான் படித்தாள். அதில் எந்தக் குறையுமில்லை. ஆனால், சுமதி? அதையெல்லாம் பார்ப்பதற்கு அப்பா அதிக காலம் இருக்கவில்லை. பிறகு வந்த ஒரு பனிக்காலத்தில் சளி பிடித்து "இன்பெக்சன்" ஆகி நாலைந்து நாள் ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்து அல்லாடி அவரும் போய்ச் சேர்ந்து விட்டார்.அப்பாவிற்குச் சீரியஸ் என்று அவள் கொலீஜில் அனுமதி எடுத்து இங்கு வருவதற்குள் அப்பாவின் உயிர் போய் விட்டது. அப்பாவின் இறுதிச் சடங்குகளை அவன் தான் செய்தான். ஒரு பிள்ளை போல கொள்ளிக் குடம் சுமந்தான். அப்பா இல்லாத போது ஒரு வீட்டில் ஆண் துணை எவ்வளவு முக்கியம் என அவள் அப்போது தான் உணர்ந்தாள். பிறகு இவள் கொலீஜிற்குப் போய் விட்டாள். அம்மாவும், சுமதியும் அவள் கணவனுமென, இடையில் என்ன நடந்ததோ?

திரையில் இப்போது மணமகள் வீட்டுக் காட்சிகள் காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ராஜி அக்காவின் கூந்தல், முக அலங்காரங்கள் அங்குலம், அங்குலமாக திரையில் பளிச்சிடுகின்றன. பாடல்கள் மணப் பெண்ணை வர்ணிப்பதற்கென்றே இயற்றப்பட் டவை போலிருக்கின்றன. இப்போது மணமகள் தோழி களால் மணவறைக்கு அழைத்து வரப்படுகிறாள். சூழ வருகின்ற தோழிகளில் அதோ சுமதியின் முகம்.

பாமதி நிமிர்ந்து உட்காருகிறாள். சுமதியைப் பற்றி உண்மையில் இவளுக்கு என்ன தான் தெரியும்? சின்ன வயதில் ஒருமித்துக் கூட விளையாடியது தவிர, எப்போது அவள் கையிலிருந்த பாடப் புத்தகம் ஒரு திருவுளச் சீட்டு மூலம் பிடுங்கப்பட்டதோ அதிலிருந்து இருவருக்குமிடையே ஒரு விலகல் தானே இருந்திருக் கிறது. கார்மெண்ட்ஸில் சேர்ந்துகொண்ட அந்த மூன்று வருடங்களில் அவள் அனுப்பும் பணத்தை அம்மாதானே எடுத்து வருவாள். இவளோடு முகம் கொடுத்துப் பேசிய நாட்கள் என்றாலே அது மிகக் குறைவு தான். பின்னர் ஊருக்கு அவள் வந்திறங்கிய பிறகும் கொழும்பு நாகரிகத்தில் ஊறிப் போயிருந்த அவள் தோற்றத்திற்கும் இவளுக்கும் இடையில் ஏணி வைத்தாலும் எட்டாது போலிருக்கையில் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது பற்றி எப்படிச் சொல்வது? சாதாரண உரையாடல்களோடு சில பொழுதுகள் கடந்து சென்றாலும் அந்த உரையாடல்களின் முடிவில் தனது படிப்பைக் குடும்பத்திற்காகத் தியாகம்

செய்து விட நேர்ந்தது குறித்து அவள் ஆங்காரப்படும் போது இவள் குற்ற உணர்வில் குறுகிப் போய் விடுவாள். பிறகு அவளுக்குத் திருமணம் ஆகிய போது அந்த ஆங்காரம் சற்றுத் தணிந்திருந்தது என்று தான் இவள் எண்ணியிருந்தாள். அந்தத் திருமணமும் அவளைக் கைவிட்டுப் போனதற்கு யாரைக் குற்றஞ்சாட்ட முடியும்?

ராஜியின் திருமணம் நடந்த போது சுமதிக்குக் கணவன் கூட இருந்தானா இல்லையா என்ற சந்தேகம் இப்போது இவளுக்கு வந்தது. வீடியோவில் சுமதி முகம் முழுக்க சிரிப்பைப் பரவ விட்டிருந்தாள். சந்தன நிறத்திலான சேலையுடுத்தித் தலையில் மல்லிகைச் சரம் வைத்திருந்தாள். அந்தப் பூக்களின் வாசம் இத்தனை நாள்களின் பின்னும் தன்னைக் கிறங்க வைப்பது போல் உணர்ந்தாள் பாமதி. அப்போது பாபுஜி பிறந்து விட்டானா, என்பதை இவளால் உணர முடியவில்லை. வீடியோ முழுக்கப் பார்த்தால் சில வேளை பாபுஜி கண்ணில் தட்டுப்படலாம். ம்ம். பாபுஜிக்கு இப்போது இரண்டு வயசு நடக்கிறபடியால் அவன் பிறந்திருக்க வேண்டும். சுமதி திருமணமான கையோடு இவள் கொலீஜிற்கு புறப்பட்டு விட்டதால் இங்கு நடந்தவை எல்லாமே அவளுக்கு ஒரு அன்னியத் தன்மையைத் தான் தோற்றுவிக்கின்றன. இவள் மீண்டும் திரையில் கவனத்தைக் குவித்தாள். ராஜி அக்காவை விடவும், சுமதியின் முகத்தை இவள் விழிகள் ஆவலோடு தேடின.

முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கு இவள் தயாராகிக் கொண்டிருந்தபோது தான் இவளுக்கு அந்தச் செய்தி வந்தது. சுமதியின் கணவன் அவளை விட்டுப் போய்விட்டதாக. எங்கே போனான்? என மனதில் தோன்றிய கேள்வி அர்த்தமற்றது என்பது சில வினாடிக்குள்ளாகவே அவளுக்குப் புரிந்தது. சில நாட்களாகவே வீட்டில் சத்தமாக இருவருக்குமிடையே சண்டைகள் நடந்ததாக வேறு நபர்களூடாக அவள் அறிந்து கொண்டாள். அது வரைக்கும் அம்மா ஒரு சிறு தகவலைக் கூட அவளுக்குச் சொல்லவில்லை.

“என்ன நடக்குதம்மா வீட்டிலை, அக்கா என்ன தனி யாவோ இருக்குது?”

இவள் பொறுக்க மாட்டாமல் அம்மா தொலை பேசியெடுத்த ஒரு நாளில் கேட்டாள். மறு முனையில் பெரு மௌனம்.

“லீவுக்கு வீட்ட வா சொல்லுறன். அது மட்டும் கவ னத்தைச் சிதறவிடாமப் படி”

அம்மா தொலைபேசியை வைத்து விட்டாள்.

விடுமுறையில் இவள் வீட்டுக்கு வந்த போது பாபுஜி பிறந்திருந்தான். ஆனால், அம்மா தான் பாபுஜியைத் தூக்கிச் சுமந்து பால் கொடுத்துக் குளிக்க வார்த்து, உறங்க வைத்துக் கொண்டிருந்தாள். சுமதிக்குக் குழந்தை இருக்கிற நினைவே இல்லாமல் நகரிலிருந்த புடைவைக் கடை ஒன்றிற்கு வேலைக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள்.

“என்னக்கா, பச்சைப்பிள்ளையை இப்பிடியே விட்டிட்டு வேலைக்குப் போறாய்”

பாமதி பொறுக்காமல் கேட்டு விட்டாள். அவள் திரும்பி இவளை ஒரு பார்வை பார்த்தாள். பின் குழந்தையின் பக்கம் திரும்பி உதட்டைச் சுளுக்கினாள்.

“அப்பா உனக்கு படிப்பு வேண்டாம் எண்டார். புருஷன் பெண்சாதி வேண்டாம் எண்டான். இனிப் பிள்ளை அம்மா வேண்டாம் எண்டு சொல்ல முதல் நானே அதுக்குத் தயார் ஆகிறன் ”

அதற்குப் பிறகு அவள் அங்கு நிற்காமல் விறு, விறெனக் கிளம்பி விட்டாள். அவள் போன பிறகு தான் அம்மா சொன்னாள். சுமதி கார்மெண்ட்ஸிலிருந்து வரும்போதே கர்ப்பமாய்த்தானிருந்தாளாம். அது தெரியாமல் அவளைக் காதலித்த அவளது கணவன் சுமதியைக் கை விட்டுப் போன காரணமும் அது தானாம். சுமதி கார்மெண்ட்ஸிற்குப் போகாமல் விட்டிருந்தால் அவளுக்கு இந்த நிலை வந்திருக்காதோ? அந்தத் திருவுளச் சீட்டில் அன்று இவள் பெயர் இருந்திருந்தால்...?

திரையில் இன்னும் சுமதி சிரித்தபடி தானிருந்தாள். கார்மெண்ட்ஸில் யாரோ ஒருவனால் தான் ஏமாற்றப்பட் டதையோ பின் கணவனால் கைவிடப்பட்டதையோ, குழந்தையொன்றைப் பிரசவித்ததையோ துளியும் காட்டாமல் மலர்ந்து சிரித்துக் கொண்டிருந்தவளைப் பார்க்கப் பாமதிக்குள் ஒரு கேவல் எழுந்தது. இன்னும் இருந்தால் அழுது விடுவாள் போலிருக்கவே எழுந்து வெளியே வந்தாள். இவள் எழுந்ததை பார்த்து ராஜியின் அம்மா தானும் கூடவே வந்தாள். முற்றத்தில் இறங்கியதும் மெல்ல தோளைத் தொட்டுக் கிசுகிசுப்பாகக் கேட்டாள்.

”ஆரெண்டு சொன்னவளே சுமதி”

”ம்ஹும்” இவள் குறுகிப் போய்த் தலையசைத்தாள்.

“என்னெண்டாலும் நீங்கள் வீட்டுக்குள்ள இருக்கிறனீங்கள். உங்களுக்கும் தெரியாமல் போச்சே.”

இவள் பேசாதிருந்தாள்.

“மூண்டு பேரும் சேர்ந்து மறைச்சுப் போட்டீங்கள் எண்டுதான் சனம் கதைக்குது. ஆனா எனக்குத் தெரியும். நீர் படிப்பு, படிப்பெண்டு திரியுறனீர். நீர் கண்டு பிடிச்சிருக்க மாட்டீர். அவள் பெரிய பெரிய சட்டைகளைப் போட்டுக் கொண்டிருந்தவளாம் அதோட பெல்ட்டும் கட்டி மறைச்சவளாம். அதாலை உம்மட அம்மாவுக்கும் தெரியாமப் போய் கடைசியா குத்து வந்த நேரம் தான் அவவும் கண்டு பிடிச்சிருக்கிறா. தெரிஞ்சவுடனே உம்மை பெரியம்மா வீட்டிலை, அவவுக்கு உதவிக்குப் போகச் சொல்லியிருக்கிறா. நீரும் அங்க போட்டீர். பிள்ளை பிறந்த பிறகு ஒருத்தருக்கும் மறைக்க ஏலாமல் போட்டுது, ஊர்ப் பெடியள் ஜி. எஸ்ஸுக்கும், மிட்வைபிற்கும் அறிவிச் சிட்டாங்கள். சேவ் ஹவுஸ் எண்டாலும் எத்தினை நாளைக்குத்தான் தாயையும், பிள்ளையையும் வச்சிருக் கிறது?”.

இவள் தலையைக் குனிந்தபடி நின்றிருந்தாள்.

“நீர் தான் பாவம், இனிக் கலியாணம் காட்சியெண்டு காண ஏலுமே...ரெண்டாந்தரமும் சனியனுக்கு ஏன் தான் இப்பிடிப் புத்தி போனதோ...?”

“நான் போட்டு வாறன் அன்ரீ...”

அதற்குமேல் அவள் அங்கு நிற்க விரும்பவில்லை.

பார்வை எதேச்சையாக உள்ளே போனது. திரையில் தாலி கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. மணமக்களை நோக்கிப் பூக்களை வீசிக் கொண்டிருந்த சுமதியின் கண்களிலிருந்து வெளிப்பட்ட அந்த மலர்ச்சியும், குழந்தைமையான வெகுளித்தனமும் அவள் மீதான பழிச் சொற்களை அழிக்கப் போதவே போதாது போல் பட்டது.

**வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமனிதனாகிறான்**

## தகவல் 1 ( முதுகுவலி)

மனிதன் இரண்டு கால்களைக் கொண்டு நேராக நிமிர்ந்து நடப்பது அவனுக்குரிய தனித்துவமும் இன்னொரு பண்புநலனாகும். நிமிர்ந்து நிற்கும்போது விலங்குகள் அல்லது எதிரிகள் யாரேனும் வருகிறார்களா அல்லது ஒளிந்திருக்கிறார்களா என்று நோட்டம்விடுவது இலகுவாக இருந்தது. நடக்கும்போது மனிதனுக்குக் கைகள் தேவைப்படுவதில்லை. எனவே எறிதல் சமிக்ஞை செய்தல் போன்றவற்றிகு நம்மால் கைகளைப் பயன்படுத்த முடிகிறது. இந்தக் கைகளால் எவ்வளவு அதிகமான விடயங்களைச் செய்ய முடிந்ததோ அந்தக் கைகளுக்கு உரியவர்கள் அவ்வளவு அதிக வெற்றிகரமாகத் திகழ்ந்தனர்.எனவே பரிணாம வளர்ச்சியின் தேவையானது உள்ளங்கைகளிலும் விரல்களிலும் நரம்புகள் மற்றும் தசைகளின் அடர்த்தியை அதிகரித்தது. அதன் விளைவாக மனிதர்கள் தங்கள் கைகளைக் கொண்டு மிக நுண்ணிய வேலைகளைச் செய்யும் திறனைப் பெற்றனர். குறிப்பாக மேம்பட்ட கருவிகளை அவர்களால் தயாரிக்கவும் பயன்படுத்தவும் முடிந்தது. மனிதர்கள் கருவிகளைத் தயாரித்தனர் என்பதற்கான முதல் ஆதாரம் சுமார் 25 லட்சம் ஆண்டுகள் பழமையானது. கருவிகளின் தயாரிப்பு மற்றும்அவற்றின் பயன்பாட்டைக் கொண்டுதான்

தொல்பொருள் ஆய்வாளர்கள் பண்டைய மனிதர்களை இனங்காணுகின்றனர். ஆனால் நேராக நடப்பதில் ஒரு பிரச்சினையும் இருக்கிறது. நம்முடைய மனிதக்குரங்கு மூதாதையரின் எலும்புக்கூடு நான்கு கால்களைக் கொண்டு நடந்த ஒரு சிறிய தலையைக் கொண்ட ஒரு விலங்கைத் தாங்கிப் பிடிப்பதற்காகவே பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்திருந்தது. எனவே நேராக நிற்கும் ஒருவிலங்கைத் தாங்கிப் பிடிப்பதற்காக குறிப்பாக பெரிய மண்டையோட்டை தாங்கிப் பிடிக்க வேண்டியிருந்தது. இது ஒரு சவாலான விடயமாகவே இருந்தது. மனித குலம் தன்னுடைய பிரமாண்டமான கனவுகளுக்கும் சுறுசுறுப்பான கைகளுக்கும் முதுகுவலி கழுத்துப் பிடிப்பு ஆகியவற்றின் வடிவில் ஒரு பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

**நன்றி : சேப்பியன்ஸ்**

# டோக்



ஜெ.கார்த்திக்

அந்தப் பாட்டி எப்பவுமே இப்படித் தான்! யார் எதைக் கொடுத்தாலும் உடனே வாங்கிவிடாது. தன் உடம்பில் ஓடும் குருதி பாய்கின்ற இடங்களிலெல்லாம் சுயமரியாதையை நிரப்பி வைத்திருப்பாள். பிச்சை எடுத்து உண்பதற்குப் பதில் செத்தே விடலாம் என்ற வைராக்கியம் கொண்டவள்தான் அந்தக் கிழவி! பழனிமலை முருகனிடம் பாட்டியுடைய அப்பா காத்தானுக்கு அவ்வளவு பக்தி. குறைமாதப் பிரசவமாகப் பாட்டி பிறந்திருந்ததால் பிள்ளை வளரும் போது ஏதாவது பிரச்சனை வந்திடுமோ என்று அச்சப்பட்ட பாட்டியோட தகப்பன் காத்தான் ‘பழனியம்மா’ என்று பழனி முருகனை நினைத்துப் பாட்டிக்குப் பெயரிட்டார். பாட்டியின் கணவன் பழனியப்பனோ மாமனாருக்கு அப்படியே எதிர்துருவம். கம்யூனிஸ்ட்டுக் கட்சியில் இருந்ததால் அவருக்குக் கடவுள் பக்தி துளியும் கிடையாது. பழனியம்மாளைக் கோயில் இருக்கும் தெருப் பக்கம்கூட போகாமல் இருவரும் இணைந்தே நூலகம், கம்யூனிசஸ்ட்டுக் கட்சி அலுவலகம், அரசியல், இலக்கியச் சொற்பொழிவென்று கல்யாணமாகி நாற்பது வருசம் கழித்தும் கூட்டிச்சென்று கம்யூனிசம் பத்தியும் சுயமரியாதை பத்தியும் சொல்லிக் கொடுத்தவர். காந்தி நல்லவர்தான்! சுட்டுட்டாங்களே என்பது போன்று பழனியப்பனும் நல்லவர்தான். ஜமீன் தார் முறைக்கு எதிராகப் போராடியதால் ஜமீன்தாரின் அடியாட்களின் அருளால் கைகால் முறிவு! ஐந்து வருடம் படுத்த படுக்கை! சோறுதண்ணி கூட வாயில் இறங்காமல் கண் மூடியவர். கடைசி வரைக்கும் யார் கிட்டையும் கையேந்தாதவர். “சுயமரியாதைய உசுராகக் காத்தவரு பாட்டி புருசெ. அவரு பொண்டாட்டியா இப்படி? பாட்டிக்கு அப்படி என்னதா ஆச்சு, பணக்கஸ்டம்தான் எல்லாத் துக்கும் இப்ப.! பாட்டி பார்க்காத பணக்கஸ்டமா?” அதிர்ச்சியுடன் பாலாயி காதில் மெல்லமாகக் கடித்தாள் பவளாயி. “அடிபோடீ!! பஞ்சாயத்து எலக்சன்ல செயிக்க வடக்குத்தெருகார பால்ராஜூம் தெக்குத் தெருக்கார முனியப்பனும் மாத்துக்கட்டுல அடிச்சிக்கிரானுங்க! செயிக்கிறதுக்கு என்ன வேணாலும் செய்யலாம்னு யோசிச்சு ஓட்டு வாங்க ஊட்டுக்கு ஊடு பவுன்காசுக் கொடுக்குரானுங்க! அதுக்குதா டோக்கன் கொடுக்குறானுங்க இன்னக்கி இரவைக்கு. பழனியம்மா பாட்டியும் பொம்பளதானே! பவுனுகாசு இப்ப என்ன விலைக்கி போகுது தெரியுமுள்ள. ஆசை இருக்காதா” என்று பாலாயி பவளாயிக்கு ஆபரணச் செய்திகளை வாசித்துவிட்டு வீட்டில் உலை வைக்க நகர்ந்தாள். இது போன்றே பலருக்கும் பழனியம்மா பாட்டிக்கு ஏற்பட்ட பவுன் மோகம் பற்றியேதான் வடக்குத் தெருவிலும் தெற்குத் தெருவிலும் ஒரே பேச்சு. “வீட்டுக்காரர் பேரையே இந்தம்மா கெடுத்திடும் போல” என்று பழனியம்மா பாட்டியை வசைபாடிக் கொண்டே டோக்கன் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்த நீதிமான்கள்! பம்ப்பு செட்டில் குளிக்கப்போன இடத்தில் வடக்குத்தெரு வேட்பாளர் பால்ராஜின் ஒன்னுவிட்ட கொழுந்தியா ஒருத்தி தன் நண்பிகளிடம் பால்ராஜூம், முனியப்பனும் வெற்றி பெறுவதற்குப் போட்டி போட்டுக் கொண்டு தங்கக்காசு வழங்குவார்கள் என்றும் தேர்தல் அதிகாரிகளிடம் பிடிபடாமல் இருக்க முதலில் இன்று இரவு டோக்கன் விநியோகம் நாளை மறுநாள் நடக்கக் கூடிய தேர்தலன்று விடியற்காலை டோக்கனை வாங்கிக் கொண்டு பவுன் காசுகள் இரு கட்சியினரும் ஒருமணி நேர இடைவெளியில் முன்பு பின்பு கொடுப்பதாகக் கூறியதைப் பழனியம்மா பாட்டி காதோரம் கேட்டுக்கொண்டபடியே, சோப்பு நுரையைத் தேய்க்க ஆரம்

# கன்



பித்தாள். ஊரில் உள்ள ஆலமர வாசிகளான ஓட்டை வாய்கள் சிலரிடம் 'யாரு தங்கக் காசு கொடுக்குறாக? எப்ப கொடுப்பாங்க?' இதை மட்டுந்தான் பாட்டி கேட்டிருக்கிறாள். “நான் வாங்கப் போறேன்னு” என்றுகூட பாட்டி சொல்லவில்லை. ஊர் முழுவதும் பாட்டிதான் தலைப்புச் செய்தி! பாட்டியிடம் யாரும் வந்து இதைப் பற்றிக் கேட்காததனால் உண்மையைக் கூறி ஊர் வாயினை அடைக்க முடியவில்லை என்று பாட்டியுடைய கணவனின் உயிர் நண்பன் தோழர் அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார். தோழர், பழனியப்பனின் உற்ற நண்பராவார். வடக்குத் தெருவிற்கும் தெற்குத் தெருவிற்கும் கோயில் பிரச்சனை வந்தபோது சமாதானம் செய்து வைக்க முற்பட்டு இவரும் கால்முறிவு பரிசில் பெற்றவர்தான். கம்யுனிஸ்ட் இயக்கத்தில் இருந்ததால் கந்தசாமி என்ற பெயரிருந்தாலும் இவரைப் பழனியப்பன் ‘தோழர்’ என்றே அழைப்பார். தோழர் என்பது என்னவோ அரசுவேலையின் பணிப் பெயர் என்றே வடக்கு, தெற்கு மக்கள் கருதியகாலமும் இருந்தது. பின்னர்தான் இது உப்பு புளி விற்கக்கூட இலாயக்கு இல்லாத பெயர் என்று மக்கள் தங்களுக்குள்ளாகவே கருதிய காலமும் இப்போது கனிந்துள்ளது. பழனியப்பனோடு எத்தனையோ தேர்தல்களைப் பார்த்தவர் தோழர் கந்தசாமி. பழனியம்மாளோட ஈடுபாடும், ஓட்டுக்காக பணம் வாங்க வெட்கப்படும் மனத்தினையும் நன்கு அறிந்தவர்தான். இவ்வளவு கிராம் பவுன், இவங்க இவங்க கொடுப்பாங்கன்னுதான் தெரிந்து வைத்திருப்பாள். வாங்க முற் பட்டு சுயமரியாதை இழக்க மாட்டாள் என்றே

**வடக்குத் தெருவிற்கும் தெற்குத் தெருவிற்கும் கோயில் பிரச்சனை வந்தபோது சமாதானம் செய்து வைக்க முற்பட்டு இவரும் கால்முறிவு பரிசில் பெற்றவர்தான். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்ததால் கந்தசாமி என்ற பெயரிருந்தாலும் இவரைப் பழனியப்பன் ‘தோழர்’ என்றே அழைப்பார். தோழர் என்பது என்னவோ அரசுவேலையின் பணிப்பெயர் என்றே வடக்கு, தெற்கு மக்கள் கருதியகாலமும் இருந்தது.**

மீண்டும் மீண்டும் மனத்தில் அசைபோட்டபடியே கொட்டைப் பாக்கை வெற்றிலையோடு மடித்தும் வாயிலும் அசைபோட்டுக்கொண்டிருந்தார். ஏழரை மணிக்குச் சோறுதண்ணியெல்லாம் ஆக்கி வைத்து இரண்டு தெருக்களும் டோக்கன் வரவை எதிர்நோக்கி வழிமீது விழுவைத்து, காத்துக் காத்து எட்டரை மணியாகியிருப்பினும் கண்களைப் பூத்திருக்க வைத்திருந்தனர் ஊர்மக்கள் எல்லோரும்!

“யெக்கோவ்..! பொன்னம்மா வீட்டுலயும் மருதாயி வீட்டுலயும் டோக்கன் வந்திருச்சாமுக்கோவ்!..

“எந்தக் கட்சிக்காரனுங்கடீ?

“வடக்கால தெரு பால்ராசுக் கட்சியாமுக்கோவ்! பிரச்சன வராம இருக்க பக்கத்து ஊருக்காரப் பசங்கள வேலக்கி வச்சு கொடுக்கராணாம்!”

எட்டரையத் தாண்டி பரபரப்பான நேரத்தில் பாலாயியும் பவளாயியும் காதோரம் உரசிக்கொள்ள, வடக்குத் தெருவில் டோக்கன் பட்டுவாடா எல்லா வீட்டிற்கும் சென்றடைந்தது! மீதம் பாக்கி இருப்பது பழனியம்மா குடிசையும், தோழர் குடிசையும் தான்! பழனியம்மா ரேசன் அரிசியைக் கஞ்சிகாய்ச்சிக் குடித்து இரண்டு ஈரவெங் காயத்தைக் கடித்துக் கொண்டு இரவு விருந்தை முடித்துவிட்டாள்! பல் இடுக்கில் மாட்டியுள்ள வெங்காயத் தோலை, விளக்கமாற்று குச்சியின் மூலம் தூர்வாரிக்கொண்டே குடிசையின் முற்றத் திலே அமர்ந்திருந்தாள்!.. டோக்கன் கொடுப்போரும் குடிசையின் முற்றத்தில்!! தோழரும் பக்கத்துக் குடிசை என்பதால்

அவரின் வீட்டின் முற்றத்தில் அமர்ந்து என்னதான் நடக்குமென்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்! பழனியம்மாள் மீது வைத்த நம்பிக்கை அந்த ஒரு நொடிப்பொழுதில் பொய்த்துவிட்டது அவருக்கு!. வந்தவர்கள் ''பழனியம்ம நீதான்'' என்று கேட்க "நான்தா அது" என பதிலளிக்க டோட்டன் கொடுத்துவிட்டு விரைவாக நகர்ந்தனர். தோழருக்கு இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இருந்தார். ''பழனியப்ப னோட கொள்கைய கேவலம் ஒத்த பவுன் டோக்கனுக்கு அடகுவச்சுருச்சே'' என்று வாயோரம் புலம்பிக் கொண்டிருக்க, குறுக்கு வெட்டுத் தோற்றம்போல் இன்னொரு எண்ணமும் தோழருக்கு முகிழ்க்க ஆரம்பித்தது! ''கொள்க ஒருபக்க இருந்தாலும், வயி றுன்னு ஒன்னு ஒருக்கே! கொரானாவுனால நூறுநாள் வேலைத் திட்டத்தையும் நிறுத்தி வச்சுருக்கா சர்க்காரு!

**கம்யூனிஸ்ட் டுக் கட்சியில் இருந்ததால் அவருக்குக் கடவுள் பக்தி துளியும் கிடையாது. பழனியம்மாளைக் கோயில் இருக்கும் தெருப் பக்கம்கூட போகாமல் இருவரும் இணைந்தே நூலகம், கம்யூனிசஸ்ட் டுக் கட்சி அலுவலகம், அரசியல், இலக்கியச் சொற்பொழிவென்று கல்யாணமாகி நாற்பது வருசம் கழித்தும் கூட்டிச்சென்று கம்யூனிசம் பத்தியும் சுயமரியாதை பத்தியும் சொல்லிக் கொடுத்தவர். காந்தி நல்லவர்தான்! சுட்டுட்டாங்களே என்பது போன்று பழனியப்பனும் நல்லவர்தான். ஜமீன் தார் முறைக்கு எதிராகப் போராடியதால் ஜமீன்தாரின் அடியாட்களின் அருளால் கைகால் முறிவு!**

கையல அந்தம்மாவுக்குக் காசு இல்ல! இரண்டு பவுன் வாங்கி எங்காவது வித்தா ஒரு நாலஞ்சு மாசமாவது பழனியம்மா வவுத்தக் கழுவிக்கு! சரி நாமும் டோக்கன வாங்கி அவக்கிட்டயே கொடுப்போம்!'' என்று ஒரு வழியாக மனம் மாறி ஊரோடு ஒத்துவாழத் தோழர் முயன்றார்.

''கந்தசாமி நீ தானா??'' என்று கேட்ட பட்டுவாடா பெருமக்களுக்காகத் தோழர் பட்டத்தை இறக்கி வைத்துவிட்டு,

''ஆமாங்க அது நான்தா கந்தாசாமி!!''

என்று ஒரு கும்பிடுபோட்டு டோக்கனை வாங்கிக் கொண்டு பழனியம்மாள் குடிசைக்குப் பக்கம் நகர்ந்தார்! முன்னாள் தோழர்!

"வாங்க தோழரே!! சாப்பாடாச்சா??"

''ஆச்சும்மா! இந்த டோக்கனையும் வச்சுக்க! இந்த கொரனா முடியிறபாடு தெரியில! ஊட்ல இருந்து வாயும் வயித்தயும் கழுவிக்க! ஏதோ நம்ம போதாத காலம்! இப்படியெல்லாம் இருக்கக் கூடாதுன்னு நெனச்சோம்! ஆனா!..!! சரி சரி வாங்கிக்கம்மா!''

உபசரித்த பழனியம்மா பாட்டியிடம் தோழர் தாத்தா உள்ளத்தில் உள்ளதையெல்லாம் வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

''அண்ணே! ரேசன் அரிசியே போதும்னே நம்மள காப்பாத்திக்க! பவுன வித்தால் வரப்போற அம்புட்டு காசயும் கையில வச்சிக்கிறது எதுக்கு?? வடக்குத் தெரு முக்குல இருக்குல்ல நம்ம பஞ்சாயத்து பள்ளிக்கூடம்! அதுல நாலாவது கிளாஸ்ல கால் ஒடஞ்சுபோயி மூனு மர பென்ச் இருக்கு! போன வருசம் அடிச்ச புயல்ல ஒரு வரிச ஓடெல்லாம் ஒடஞ்சு போயி இருக்கு! நானும் நாலஞ்சு தடவ முன்னாடி இருந்த பஞ்சாயத்துத் தலைவர்கிட்ட சொன்னே! இப்ப எலெகசன்ல நிக்கிறவங்க கிட்டயும் சொன்னே! யாரும் கண்டுக்கிர மாதிரி இல்ல! அடுத்த மாசம்கீது பள்ளிக் கூடம் தொறந்தாங்கன்ன இரெண்டு தெரு பிள்ளையலும் அங்க உக்காந்து படிக்க ரொம்ப செரமமுள்ள! அதான் பாத்தே! கையில காசு இல்ல! இத வச்சாவது, இப்படியாவது பண்ணலாம்னுதா! இந்தா என் டோக்கன்! நீயே வச்சுக்கோ! நாளாண்டிக்குக் காலைல பவுனு கொடுத்தாங்கன்னா அத வாங்கி டவுனுக்குப் போய் வித்துப்போட்டு வந்துருண்ணே!'' என்று கூறிவிட்டுக் குடிசை மாளிகைக்குள் உட்சென்றாள் பழனியம்மா பாட்டி! டோக்கன் வாங்கியதில் அதிர்ச்சியடைந்த தோழருக்கு மேலும் நாம் நினைத்தது தவறென்று மேலும் ஒரு அதிர்ச்சி! வெட்கம்! பூமாதேவியை நோக்கி அவர் தலை! ஊரோடு ஒத்து வாழ்வது சரிதான்! அதைக்காட்டிலும் ஊருக்காக உயிர்வாழ வேண்டும் என்று நினைத்துக் கொண்ட மெல்லிய பொக்கை வாய்ச்சிறு சிரிப்புடன்! டோக்கனை முன்னும் பின்னும் பார்த்து தலையணியில் பதுக்கிவைத்து, குடிசைக்கு வெளியே பல்லாண்டுகளாய்க் கிழிந்து தொங்கும் கட்டிலில் குளிர்க்காற்றின் தாலாட்டில் குறுக்கிப் படுத்துறங்க முயன்றார்!



# ஒரு பால்ய பொழுதொன்றில்...

குலசிங்கம் வசீகரன்

“வாடாப்பா, கொண்டு இறக்கி விடுறன்” என்று கேட்டு விடுவார்களோ என்ற எண்ணத்தில் தலையை நிமிர்த்த வேயில்லை.

“எனக்கென்று சையிக்கிள் இல்லை, அதனால் யாருடனும் டபிள் போவதில்லை. நடந்து தான் போவது” என்று மனசுக்குள் ஒரு வன்மம்.

“ஏன் கடவுள் எனக்கு மட்டும் இப்பிடிப் பண்ணிறார், கூடப் படிக்கிற கனபெடியள் சையிக்கிள்ள வாறாங்கள், நான் மட்டும் தான் நடந்து போறன்”, இது தான் செழியனின் மனதிலுள்ள கோபம். செழியனின் தந்தை ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், தாயாரும் ஒரு ஆங்கில ஆசிரியர். செழியன் இரண்டாவது பிள்ளை, ஒரு அக்கா, ஒரு தங்கச்சி என அளவான குடும்பம். இரண்டு பெண் பிள்ளைகளைப் பெற்றுவிட்டு இந்த வருமானத்தில் எவ்வாறு அவர்களைக் கரையேற்றுவது என்று எண்ணத்தில், அரசாங்க உத்தியோகத்தில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டு வெளிநாடு செல்லத் தீர்மானித்தார் செழியனின் தந்தை. ஆனால் தாய்க்கு கணவன் தங்களை விட்டு வெளிநாடு சென்று உழைப்பதில் சம்மதமில்லை. தந்தையோ தன் நண்பர்கள் சிலர் அவ்வாறு சென்று நல்ல வருமானத்தை ஈட்டுவதாகக் கூறித் தான் நினைத்தபடியே வெளிநாடு சென்றார், அதற்காகச் சில லட்சங்கள் கடனும் பட்டார், வெளிநாட்டு வருமானத்தில் விரைவிலேயே கடனையும் திருப்பி கொடுத்து, பிள்ளைகளுக்கும் பணம் சேர்க்கலாம் என்ற நம்பிக்கையில். ஆனால் போன நாட்டில் அவர் எண்ணியயபடி வருமானத்தை ஈட்ட முடியவில்லை. கடனாக வாங்கிய பணத்திற்கான வட்டியும் முதலுமே அவரால்

பருத்தித்துறை மருதடி வையிரவர் கோவிலடியில் செழியன் நடந்து போய்க்கொண்டிருந்தான், உயர்ந்து வளர்ந்திருந்த மருதமர நிழலில் வையிரவர் ஆழ்ந்த மௌனத்தில் இருந்தார். மருதமர குளிர்மை வீதியின் வெம்மையை சற்றே தணித்தது. செருப்பைக் கழற்றி விட்டு, திருநீற்றைப் பூசி, நீர்த்தன்மை குறைந்திருந்த சந்தனத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டான். பிறகு, சூலத்தை கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் குனிந்த தலை நிமிராமல் நடக்கத் தொடங்கினான்.

வகுப்புக்குத் தேவையான கொப்பிகள் தோளில் உள்ள துணிப்பைக்குள், சீ. எம். இ டியூசனில் மூன்று மணிக்கு வகுப்பு. நிமிர்ந்து பார்க்காமலேயே நடந்தாலும் தன்னை தாண்டிப்போவது சைக்கிளா, மோட்ட சையிக்கிளா அல்லது வேறு வாகனமா என்பது செழியனுக்கு நன்றாக விளங்கியது. யாராவது தெரிந்தவர்கள் தான் நடந்து போவதைப் பார்த்து,

அனுப்பக்கூடியதாக இருந்தது. போதாதற்கு ஒருமுறை வங்கியில் போடுவதற்கென தபாலில் அனுப்பியிருந்த காசோலையைக் கொழும்புத் தபாலகத்தில் வேலை புரிந்தவர்கள் சிலர் கடிதத்தை உடைத்து எடுத்துக் காசாக்கியிருந்தார்கள், அதனால் ஒருமாதம் வட்டியும், முதலும் செலுத்த முடியவில்லை. கடந்தமுறை விடுமுறையில் வந்தபோது கொழும்பிலேயே நின்று பொலீசில் முறைப்பாடுகள் செய்து அலைந்து திரிந்து விட்டுத்தான் ஊருக்கு வந்திருந்தார். தாய்க்கு இவையெல்லாம் மிகவும் மன உளைச்சலையும் வேதனையையும் கொடுத்தது,

"அப்பவே நான் சொன்னனான், உந்த வெளிநாட்டு வேலை ஒண்டும் தேவையில்லை, கஞ்சியோ, கூழோ எல்லாரும் ஒண்டா இருந்து குடிப்பமெண்டு",

தந்தைக்கு அது தற்போது விளங்கியிருந்தாலும் காலம் கடந்த ஞானமாகவே இருந்தது, இடை நடுவில் வேலையை விட்டுவர முடியாத நிலை. அவர் விடுமுறை முடிந்து செல்லும் முன்னர் காசோலையை மாற்றிப் பணத்தை எடுத்தவர்களைக் கண்டுபிடித்த பொலீசார் பணத்தை மீளவும் தந்தைக்கு வழங்கினார்கள். அதோடு அந்த பிரச்சனை ஓரளவு ஓய்ந்தாலும், வட்டிப்பணம், முதல் என்பவற்றையே அவரால் ஒவ்வொரு மாதமும் அனுப்ப முடிந்தது. தற்போது தாயின் வருமானம் மட்டுமே வீட்டுச் செலவுகளுக்கு.

தந்தை வெளிநாட்டில் வேலை தாய் அரச உத்தியோகம் ஆனாலும் வருமானம் அன்றாட செலவுகளுக்கே போதுமானதாக இருக்கிறது. பிள்ளைகளுக்கு அத்தியாவசிய விடயங்களில், முக்கியமாகச் சாப்பாட்டில் எந்த வித குறையும் விடக்கூடாது என்பதில் தாய் மிகவும் கவனமாக இருப்பார். அப்படி இப்படி என்று கொஞ்சம் மிச்சம் பிடித்து சேமித்தாலும் அதுதான் வருடப்பிறப்பு, தீபாவளி, பிறந்தநாள் என்று மேலதிக செலவுகள் வரும் போது கைகொடுக்கும். இருந்தாலும் அந்த மாதிரியான விசேட தினங்களுக்காக அனைவருக்கும் புது ஆடைகள் வாங்குவதென்பது கூட சில வேளைகளில் முடியாமல் போய் விடுகிறது. இவ்வாறான நிலையில் செழியனின் மனக்குமுறலை தாயால் எவ்வாறு உடனடியாக தீர்த்து வைக்கமுடியும்.

செழியன் இரவில் படுக்கையில் மற்றவர் அறியா வண்ணம் தன் நிலையை பெரிய சோகமாக நினைத்து வராத அழுகையை வலுக்கட்டாயமாக வரவைத்து அழுவான். அதேபோலத்தான் பாடசாலைக்கு ரியூசனுக்குப் போகும் போதெல்லாம் யாரோடும் டபிள்ஸ் போகமாட்டான். எல்லாம் ஒருவித வீம்புதான்.

அக்காவிடம் மட்டும் தன் ஆசையைச் சொன்னான். தமக்கையாருக்கு தம்பி மீது பாசம் அதிகம். தம்பியென்றால் போதும் உருகி உருகி அன்பைப் பொழிவார். தம்பியார் படுக்கையில் அழுவதும் அதற்கான காரணமும் தமக்கைக்குத் தெரிந்தே இருந்தது. தம்பியுடன் கல்வி கற்கும் மற்றைய பெடியள் பலரும் சையிக்கிளில் பாடசாலைக்கு ரியூசனுக்கு எல்லாம் சென்று வரும்போது தன் தம்பி மட்டும் நடந்து போய் வருவது அவருக்கும் மிகப்பெரிய குறையாகவே தெரிந்தது. இறுதியில் தம்பியும் வாய்விட்டு தனது விருப்பத்தைக் கேட்டதும், தாயிடம் சென்று,

"அம்மா, தம்பிக்கு உடன சையிக்கிள் ஒண்டு வாங்கி குடுங்கோ, அவனும் மற்ற பெடியள் மாதிரி சையிக்கிள்ள போய்வரோனும்" என்றார்.

தாய்க்கும் ஏற்கனவே ஓரளவு விசயம் விளங்கியே இருந்தது, செழியன் நடந்தே எங்கும் போய் வருவதை பார்க்கும் போதெல்லாம், எப்படியாவது மகனுக்கு சையிக்கிள் ஒன்று வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று எண்ணியிருந்தார். மகள் வந்து சொன்னதும்,

"அவன் நடந்து திரியிறது எனக்கும் கவலைதான் பிள்ளை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளட்டும் அடுத்த மாதம் அரியேர்ஸ் வர இருக்கு, வாங்கி குடுக்கிறன்", என்றார்.

தாய் சையிக்கிள் வாங்கித்தர சம்மதம் தெரிவித்து

**ராகவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. கபிலனை பார்த்தான், கபிலனுக்கும் அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை. அவனுக்குச் சையிக்கிளை யாரும் மாறி எடுத்து சென்றிருக்கலாம் என்று தோன்றவில்லை, யாரோ திருடிச்சென்று விட்டார்கள் என்றே அவனும் ராகவனும் நம்பினார்கள், ஆனால் செழியன் கூறியதற்கு நேரடியாக மறுத்து கூற தயக்கமாக இருந்தது. செழியனை தனியாக விட்டு செல்லவும் முடியவில்லை, இருவரும் யோசித் தபடி நின்றார்கள்.சிறிது நேரத்தின் பின்னர் செழியன் தானாகவே சொன்னான், "வாங்கோடா போவம், நீங்களும் இன்னும் சாப்பிடேல்லை" என்றபடி நடக்க தொடங்கினான்.**

விட்டார் என்பதை அறிந்த நேரத்தில் இருந்து செழியனின் கால் நிலத்தில் படவில்லை. அடிக்கடி மருதடியில் இருந்த ராஜன் சையிக்கிள் கடைக்கு போய் அங்கு நிற்கின்ற சையிக்கிள்களை பார்ப்பதும், என்ன என்ன சோடினை செய்யலாம், ஒவ்வொன்றும் என்ன விலை என்று விசாரிப்பதிலுமே கூடிய நேரத்தைச் செலவிட்டான்.

..........

அடுத்த மாத இறுதியில் அம்மாவின் சம்பள அரியர்ஸ் கிடைத்து சையிக்கிள் வாங்கும் நாளும் வந்தது. மாலையில் செழியனையும் கூட்டிக் கொண்டு தாயார் கடைக்கு புறப்பட்டார்கள், தமக்கைக்கு கைகாட்டிவிட்டு துள்ளல் நடை நடந்தபடி தாயோடு புறப்பட்டான் செழியன். சையிக்கிள் கடைக்கு இருவரும் சென்றார்கள், இவர்களைக் கண்டதும் முதலாளி,

''என்ன டீச்சர், மகன் ஒவ்வொரு நாளும் கடைக்கு வந்து சைக்கிள்களைச் சுத்தி சுத்தி பாத்திட்டு போறார், சையிக்கிள் ஒண்டு வாங்கி குடுங்கோவன்'' என்றார்,

''ஓம், அதுக்கு தான் வந்தனாங்கள், நல்ல சையிக்கிலா ஒண்டு, தம்பி கேக்கிற மாதிரி வடிவா பூட்டி குடுங்கோ'' என்று செழியனின் தாயார் பதில் கூறினார்,

''அவற்ற விருப்பப்படியே நல்லதா ஒரு சைக்கிள் பூட்டி குடுக்கிறன் டீச்சர்'' என்று கூறியபடி கடையின் உள்ளே திரும்பி வேலைக்கு நின்ற பெடியனை பார்த்து,

''தம்பியை உள்ள கூட்டிப்போய் எந்த சையிக்கிள் வேணும் எண்டு கேட்டு, அதுக்கு தேவையான சாமான்களையும் எடுத்துக்கொண்டு வா" என்றார்.

செழியன் கடைப்பெடியனுடன் உள்ளே சென்று தான் பார்த்து வைத்திருந்த லுமாலா சையிக்கிளை காட்டினான். சையிக்கிளைக் கொண்டுவந்து கடைவாசலில் விட்டுவிட்டு உள்ளே சென்று சொக்கன்சோர், ரோலிங் பெல், ஒரிஜினல் லுமாலா சீட், பார் கவர், சில்லுக்குரிய பூக்கள், அழகிய மக்காட் லைட் என செழியன் கற்பனை செய்து வைத்திருந்த சையிக்கிளை உருவாக்க தேவையான அனைத்து பொருட்களையும் கொண்டு வந்து சையிக்கிள் கரியரில் வைத்தான்.

"சேர்விஸ் பண்ணி எல்லாம் பூட்ட ஒன்பதினாயிரத்தி அறுநூறு வருது டீச்சர்" என்றார் முதலாளி, அம்மா காசை எண்ணிக்கொடுத்து றிசீட்டை வாங்கினார், செழியன் சையிக்கிளைப் பொருட்களுடன் சேர்த்து மெதுவாக உருட்டிக்கொண்டு கடையைச் சுற்றி பின் புறம் சென்றான், அங்குதான் சேகரம் அண்ணாவின் சையிக்கிள் திருத்தும் கடை இருக்கிறது. ராஜன் சையிக்கிள் கடைக்கு தேவையான சையிக்கிள்களை பூட்டி கொடுப்பதும், தனியாகத் திருத்த வேலைகளும் அவர் செய்து கொடுப்பார், சேகரம் அண்ணா சையிக்கிள் திருத்துவதை வகுப்பு முடிந்து வரும் வழியில் சில வேளைகளில் பாத்துக்கொண்டு நிற்பது செழியனின் பொழுதுபோக்கு, அதனால் ஏற்கனவே சேகரம் அண்ணாவுடன் செழியனுக்கு அறிமுகம் இருந்தது. சேகரம் அண்ணையை கண்டதும் மகிழ்ச்சிபொங்க

“சேகரம் அண்ணை, இது என்ர சையிக்கிள். அம்மா வாங்கித்தந்தவ.. வடிவாக் கழுவிப்பூட்டித் தாங்கோ, முதலாளி கழுவிப்பூட்டவும் சேர்த்து காசு எடுத்திட்டார்” என்றான் செழியன்.

செழியனுக்கு இரவு நித்திரையே வரவில்லை, அதிகாலையிலேயே எழுந்து காலைக்கடன்களை முடித்து சாப்பிடாமலேயே சையிக்கிளை பார்க்க ஓடினான், சேகரம் செழியனை மதியத்துக்கு பின்னரே வரச்சொல்லி இருந்தார், ஆனாலும் செழியனால் பொறுமையாக இருக்க முடியவில்லை. கடை திறக்கவில்லை என்பதால் வீட்டுக்கு வந்து காலை உணவை சாப்பிட்டு விட்டு மீண்டும் ஓடினான். ரிம்முக்கு அன்டிகுரோஸ் அடிக்கப்படுவது முதல் போல்ஸ் எல்லாவற்றிற்கும் கிரீஸ் வடிவாக வைக்கப்படுகிறதா என்பது வரை எல்லாவற்றையும் கவனித்தபடியே இருந்தான். இடையில ரியூசனுக்குப் போய்விட்டு வந்தான், மதியமாகியும் வேலை முடியவில்லை, வீட்டுக்கு சென்று மத்தியான சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு மீண்டும் வந்து இருந்து சையிக்கிள் பூட்டப்படுவதை பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவாறாக மாலை ஆறரை போல எல்லா வேலைகளையும் முடித்து ஒருதரம் ஓடி பார்த்துவிட்டு வந்து செழியனின் கையில் சையிக்கிளை கொடுத்தார் சேகரம் அண்ணா.

சிறிதுநேரம் சையிக்கிளை பிடித்தபடி நின்றான் செழியன், கைகளால் தடவி தடவி அது தனது சையிக்கிள் என்பதை உணர்வால் உள்வாங்கிக்கொண்டான், இனம்புரியாத குதூகலம் மனதில் சேகரம் அண்ணாவிற்கு நன்றியை கூறிவிட்டு சையிக்கிளை மெதுவாக உருட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். புதுச் சையிக்கிளில் ஏறி இருந்து ஓட மனசுவரவில்லை, சையிக்கிளை தொட்டபடி இருந்தாலே போதும் என்ற

மனநிலையில் இருந்தான் செழியன். வீட்டிற்கு வந்ததும் அம்மா அக்கா தங்கச்சி என ஒவ்வொருவரையும் கூப்பிட்டு சையிக்கிளை காட்டினான். அவனது முகத்தில் தெரிந்த அளவு கணக்கில்லாத சந்தோசத்தை பார்த்து அம்மாவும் அக்காவும் தாங்களும் சந்தோசப்பட்டு கொண்டார்கள். இரவு படுக்கைக்கு போகும் வரைக்கும் சைக்கிளின் அருகிலேயே இருந்தான். படுக்கையில படுத்தபடி கடவுளை நினைத்து

"என்ர விருப்பத்தையும் நீ கணக்கில எடுத்து ஒப்பேத்தி வச்சிருக்கிறாய், நன்றி வைபிரவா", என்று சொல்லிக் கொண்டான். நாளைக்கு ஞாயிற்றுகிழமை, சைக்கிளில் வகுப்புக்கு போகலாம், பெடியள் எல்லாரிடமும் சையிக்கிளை காட்டலாம் என்ற எண்ணியபடியே நித் திரையாகிப் போனான்.

..................

கடந்த முறை தந்தை விடுமுறையில் வந்திருந்த போது கொண்டு வந்திருந்த 'கீற்றக்'கை செழியன் கவனமா வைத்திருந்தான், அந்த 'கீற்றக்' வித்தியாசமானது, சிறிய பட்டரி போட்டு பாவிக்கவேண்டிய கீற்றக், அதன் சிறப்பம்சம் எங்கேயாவது விழுந்துவிட்டால், விழுத்தியவர்கள் விசிலடித்தால் அதுவும் சப்தமெழுப்பும். அதன் மூலம் 'கீற்றக்' இருக்கும் இடத்தைக் கண்டு கொள்ளலாம். தந்தை கொண்டுவந்து தந்த உடனேயே செழியன் அந்த 'கீற்றக்'கை பாடசாலை, வகுப்பு என எல்லா இடத்துக்கும் கொண்டுசென்று நண்பர்களிடம் காட்டியிருந்தான்.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக தனது சையிக்கிள் திறப்புடன் அந்த 'கீற்றாக்'கை கொழு விவைத்து கொண்டான். வெவ்வேறு இடங்களில் நின்று விசிலடித்தும் பார்த்துக்கொண்டான், 'கீற்றக்' திரும்ப சப்தமெழுப்புகிறதா என்று.

காலைக்கடன்களை முடித்துச் சுவாமி கும்பிட்டுவிட்டு அம்மா, அக்கா, தங்கச்சி எல்லோருக்கும் சொல்லிவிட்டு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க சைக்கிளை வீட்டு முற்றத்தில் முதல் முதலாக ஓடிக்காட்டினான். பிறகு அவர்கள் கையசைத்து வழியனுப்ப சைக்கிளை ஓடிக்கொண்டு வகுப்புக்கு புறப்பட்டான்.

வீதியில் சையிக்கிளை தான் ஓடிக்கொண்டு போகும் போது எல்லோரும் தன் சையிக்கிளையே பார்ப்பதாக உணர்ந்தான். டீயூசனில் சிநேகிதர்கள் எல்லோரும் சைக்கிளை சுற்றிநின்று பார்த்தார்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறை நிறை சொன்னார்கள். ஒருபடியாக வகுப்புக்கள் தொடங்க எல்லோரும் வகுப்புக்கு போனார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் வகுப்பு முடிய வழமை போல நண்பர்கள் எல்லோரும் கடல்குளிக்க மூக்கத்துக்கு புறப்பட்டார்கள்.

ஒவ்வொரு ஞாயிறும் வகுப்பு முடிந்த பின்னர் வகுப்பில் அநேகமானோர் கடல் குளிக்க பருத்தித்துறை மூக்கக் கடற்கரைக்கு போவது வழக்கம். வீட்டிற்கு தெரியாமல் செழியனும் நண்பர்களுடன் கடற்குளிக்க போவான். செழியனின் தாய் அடிக்கடி சொல்லுவார்,

"தம்பி, உனக்குத் தண்ணியில கண்டம். அதால குளம், கடல், கேணி இதுகள்ல எல்லாம் குளிக்க போயிடாதை" என்று.

ஆதலால் வீட்டில் யாரிடமும் சொல்வதில்லை, வகுப்பு என்று சொல்லி விட்டு நண்பர்களுடன் சேர்ந்து கடற் குளித்துவிட்டு வருவான். மழை காலமென்றால் கோவிற் கேணிகள், குளங்கள், தோட்டக்கிணறுகள் என வீட்டிற்கு தெரியாமல் குளியல் தொடரும். ஆலடிக்குளம், பெரியபிள்ளையார் தீர்த்தக்கேணி, வியாபாரிமூலை தோட்டக்கிணறுகள், புற்றளைக்கேணி என பல இடங்களுக்கும் நண்பர்களுடன் சென்று குளிப்பான். வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியாமல் இருக்க இரகசியமாகப் புத்தகப்பையில் காற்சட்டை ஒன்றை வகுப்புக்கு எடுத்துச்செல்வான், அதை மாற்றி குளித்துவிட்டு மீண்டும் போட்டுச்சென்ற காற்சட்டை யுடனேயே வீட்டுக்கு வருவான். பையில் ஈரமான காற்சட்டை நன்றாக புழியப்பட்டு பொலித்தீன் பைக்குள் இருக்கும், வீட்டிற்கு வந்த பின்னர் யாரும் காணாத போது உடுப்புக்கள் காயவிடும் கொடியில் தனது மற்ற உடுப்புக்களோடு ஈர காற்சட்டையையும் காயப் போட்டு விடுவான், இந்தத் தந்திர வேலை பலகாலமாக நடக்கிறது. இவ்வாறு நண்பர்களுடன் குளிக்கச்சென்று நன்றாக நீந்த பழகிவிட்டான். தற்போது செழியன் நீச்சல்க்காரன் மட்டுமல்ல கடல் நீச்சல்க்காரனும் கூட.

கடற்குளித்த பின்னர் உடல்முழுவது படிந்திருக்கும் உப்பை வீட்டில் யாரும் கண்டுபிடித்துவிடாமல் இருக்க கடற்கரைக்குச் சிறிது தூரத்தில் அமைந்துள்ள நண்பன் தாசனின் தென்னந்தோட்ட கிணற்றில் மீண்டும் குளித்து விட்டுத்தான் காற்சட்டையை மாற்றுவார்கள். பொதுவாக நண்பர்கள் அனைவரும் இவ்வாறாகவே செய்வார்கள், தாசனுக்குப் பிரச்சனையில்லை, ஏனென்றால் அவனது காணியில் தான் நண்பர்கள் சையிக்கிளை விட்டுவிட்டு குளிக்க செல்வார்கள். அதனால் தாசனின் தாய்க்கு

அவர்கள் கடற்குளிப்பது தெரியும், அத்தோடு தாசன் குழந்தை பருவம் முதலே கடலோடு பழக்கமுள்ளவன் என்பதால் தாசன் கடலில் குளிப் பதில் தாய்க்கு எந்த பயமுமில்லை, ஆனாலும் மகனிடம் சொல்லுவார்,

“தம்பி கவனமடா, அலை கூடவா கிடக்கு, பெடியளை பாத்துக் குளிக் கச்சொல்லு” என்று.

மூக்கம் கடற்கரையை ஆண் பெண் கடல்கள் கலக்கும் இடம் என்றும், அதனாலே அவ்விடத்தில் சுழி இருப் பதாகவும், அதில் சிக்கினால் தப்ப முடியாது என்றும் செழியன் கேள் விப்பட்டிருக்கிறான், இரு வருடங் களின் பின்னர் அவன் கேள்விப் பட்டதை நம்பவைக்கும் படியான சம்பவம் ஒன்று நிகழ்ந்திருந்தது, ஒருநாள் செழியனும் நண்பர்களும் கடலில் குளித்து விட்டுக் கரை யேறும் பொது சீ. எம். இ டியூசனில் இவர்களுக்கு பின்னர் படித்த, அதே ஆண்டு சாதாரண தர பரீட்சை எழுதியிருந்த பெடியள் சிலர் குளிக் கத் தொடங்கியிருந்தார்கள். அதில் ஒரு பெடியனை சுழி இழுத்திருந்தது, மறுநாளே அவனது உடல் கரையொ துங்கியிருந்தது. அவனது இறப்பு தந்த சோகத்தையும் விட அவன் தோற்றியிருந்த சாதாரண தர பரீட் சையில் எட்டு பாடங்களிலும் சிறப்பு சித்தி பெற்றிருந்தான் என்பது தெரியவந்தபோது, ஊர் முழுவ துமே அவனுக்காக அழுதது. அன் றும் வகுப்பு முடிய நான்கு சையிக் கிள்களில் எட்டு பேர் மூக்கத்துக்கு புறப்பட்டார்கள். நான் முந்தி நீ முந்தி என்று சையிக்கிள்கள் தும் பளை மணியாரம் சந்தியை நோக்கி வீதியில் ஓடின. ராகவனை டபிள்ஸ் ஏற்றிக்கொண்டு, புதுச் சையிக்கிள் கலர்ஸ் காட்ட செழியன் எல்லோரை யும் முந்தி ஓடினான்,

சையிக்கிள்கள் எல்லாவற்றையும் தாசனின் தென்னங்காணிக்குள் விட்டு பூட்டினார்கள். செழியனும் தனது சையிக்கிளை தேங்காய் விழாத இடமாகப் பார்த்து நிறுத்திப் பூட்டையும் பூட்டித் திறப்பை கவன மாகச் சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டான்

கடலுக்குள் நிற்கும் போது நண்பர்க ளுக்கு நேரம் போவதே தெரியாது. பசி, தாகம்கூட விளங்காது. ஆனால் நீந்திக் களைத்து கடலிலிருந்து கரையேறினால் அவ்வளவுதான், ஒருபானை சோறு இருந்தாலும் சாப்பிட்டு முடித்து வீட்டிற்கு போய் சேரும் வரைக்கும் நண்பர்களால் பசி தாங்க முடிவதில்லை.

மூக்கம் கடற்கரையில் நீண்ட தூரம் மணலில் நடந்தே கடலுக்குச் செல்லவேண்டும். இடையில் சிறிதே உயரமான மணல் மேடுகள் கடற் கரையோடு நீண்டு கிடக்கும். ஒவ் வொரு பௌர்ணமிக்கும் கடல் பொங்கிக் கரையை மீறி மணல்மேடு தாண்டி உள்வந்து நீண்ட ஆறு போல தங்கிவிடும், அடுத்த பறு வத்துக்கும் இடையில் அந்த கடல் நீர் ஆற்றில் றால், சின்ன மீனி னங்கள், நண்டு என்று பலவும் விளையும். அவற்றை சிறுவர்கள், மீனவர்கள், கடற்குளிக்க வருவோர் எனப் பலரும் பிடிப்பார்கள், அவ் வாறு தான் செழியனும் நண்பர்களும் பௌர்ணமிக்கு அடுத்த வாரமளவில் குளிக்க போவதாயிருந்தால் தண் ணீர் நிற்கும் என தெரிந்து றால் பிடிக்க ஆயத்தமாகவே போவார்கள். றாலோடு சேர்த்து சாப்பிடுவதற்கு என தங்களிடம் இருக்கும் சில்ல றைக் காசை சேர்த்து பாண் வாங்கி போவார்கள், கூடவே கொஞ்சம் தேங்காயெண்ணை, வெங்காயம், பச்சமிளகாய் எல்லாம் வாங்கிக் கொண்டு போவார்கள், றாலை பிரட்டல் மாதிரி செய்வதற்கு தாச னின் காணிக்குள் சையிக்கிள்களை விட்டுவிட்டு பாணையும் மற்றைய பொருட்களையும் தாசனின் தாயிடம் கொடுத்துவிட்டு, எல்லோருமாகப் போய் முதலில் றால் பிடித்து கொண்டுவந்து அதையும் கொடுத்து றால் பிரட்டல் செய்யச்சொல்லி விட்டுப் பிறகுதான் குளிக்க போவார் கள். தாசனின் வீடு வேறிடத்திலிருந் தது. அந்தத் தென்னம் தோட்டத்தில் ஒரு சிறிய பெட்டிக்கடையை நடத்தி னார் தாசனின் அப்பா. ஆனால் கடையில் கூடிய நேரம் தாசனின் அம்மாவோ அக்காவோ தான் இருப் பார்கள். கடைக்கென இருந்த கொட் டிலை விட இன்னொரு சிறிய கொட்டிலும் அந்த காணிக்குள் இருந்தது, தேங்காய்களை சேக ரித்து வைக்க, மண்வெட்டி போன்ற சாமான்களை வைத்தெடுக்க வசதி யாக. அவசரத்துக்கு தேநீர் போட என ஒரு அடுப்பும் சில பாத்திரங்க ளும் மட்டுமே அங்கே இருந்தன.

அன்றும் முதலில் றால் பிடிக்க போனார்கள். முன்பு அங்கு றால் பிடித்தவர்கள் மீனவர்கள் எனப் பலரும் விட்டுச் சென்ற பிய்ந்த சிறிய துண்டு வலைகள் அங்கங்கே இருந்தன, அவற்றை எடுத்துச் சேர்த்து கட்டி நீண்ட வலைபோல ஆக்கி தாசன் ஒருகரையிலும், செழியன் மறுக்கரையிலுமாக நின்று வலையை இழுத்துக்கொண்டு கொஞ்ச தூரம் ஓடிப் பின்னர் தாசன் மட்டும் நீரின் குறுக்கே நடந்து மறுகரையில் ஏறி செழியனின் கையிலிருந்த வலையின் நுனியோடு சேர்த்து இரண்டு நுனிகளையும் ஒன்றாக இழுத்து வலையை முழு வதுமாக வெளியே எடுத்தார்கள். கொஞ்சம் றால், குஞ்சு மீன், நண்டு என வலையில் சிக்கியிருந்தன, அவ்வாறு மூன்று முறை ஆள் மாறி

ஆள் வலை இழுத்தார்கள், நீண்ட நேரம் றால் பிடிப்பதில் செலவிட நண்பர்கள் விரும்புவதில்லை, அவர்களுக்குக் கடலுக்குள் கிடப்பதில் தான் கூடிய ஆர்வம். பிடித்தவரை போதுமென்று புறப்பட்டார்கள். கழிவுகள் எல்லாம் போக ஒரு ஒன்றரை கிலோ றால் தேறியிருக்கும். இதிலும் றாலைக் கோதுநீக்கி சுத்தப்படுத்தினால் முக்கால்கிலோதான் தேறும். எட்டுப் பேருக்கும் பாணோடு சாப்பிட அது போதுமானதாக இருக்காது. ஆனாலும் பொதுவாகவே கிடைத்ததை எல்லோருமாக பகிர்ந்து சாப்பிடுவது வழமை. பிடித்திருந்தவைகளை வலையோடு சேர்த்து தாசன் எடுத்துச் சென்றான், தாயிடம் கொடுப்பதற்கு.

மற்றவர்கள் அனைவரும் கடலை நோக்கி ஓடினார்கள், கரைமீது இழுத்துவிடப்பட்டிருந்த கட்டுமர மொன்றில் உடைகளைக் கழற்றி வைத்துவிட்டுக் கடலுக்குள் பாய்ந்தார்கள். செழியன் சைக்கிளை விடும் போதே காணிக்குள் வைத்து தான் புத்தக பைக்குள் மறைத்து கொண்டுவந்திருந்த காற்சட்டையை மாற்றியிருந்தான். சட்டையை கழற்றி சையிக்கிள் திறப்பு சட்டைப்பைக்குள் இருக்கிறதா என பார்த்து கவனமாக சுற்றி கட்டுமரத்தில் வைத்துவிட்டு தானும் கடலுக்குள் பாய்ந்தான்.

கடற்குளிப்பதை நினைத்தாலே ஒரு புத்துணர்ச்சியும் குதூகலமும் வந்து விடும், நண்பர்களோடு சேர்ந்து கடலுக்குள் இறங்கிவிட்டால் கும்மாளம் தான். நீருக்குள் நீண்ட நேரம் யார் மூச்சடக்கி இருப்பது, யாரெல்லாம் நீண்ட தூரம் நீந்துவது, புற நீச்சலடிப்பது, சுழியோடுவது என பல போட்டிகளும் நடக்கும். போட்டிருக்கும் காற்சட்டையையோ, உள்ளாடையையோ கழற்றி தலையில் போட்டபடி அம்மணமாக குளிப்பதும் சுழியோடிச் சென்று உள்ளாடையுடன் குளிப்பவர்களினது உள்ளாடையை இழுத்து கழட்டியெடுத்து கரைமீது எறிந்துவிடுவது போன்ற இளமைக் குறும்புகளும் குழப்படிகளும் கூட நடக்கும். நண்பர்களில் சிலர் வடிவாக நீந்த தெரியாதவர்கள் அல்லது தண்ணீருக்குள் வர பயப்படுபவர்கள்.

அப்படி பயப்படுபவர்களில் ஒருவன்தான் பாலமுரளி, இடுப்பளவு தண்ணீரிலேயே குளிப்பான், அலைவந்தால் எழுந்து ஓடிப்போய் கரையில் நிற்பான், அலை போன பின்பு மீண்டும் திரும்பி தண்ணீருக்குள் இறங்குவான், அவ்வளவு பயம் கடலுக்கு, அப்படிக் கடலுக்கு பயந்தவன் பிற்காலத்தில் தன்னைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்ட போது கடலில் போரிடும் அணியில் இணைந்திருந்தான். காலம் பல பொழுதுகளில் புரியாதவற்றை புரியவைத்துவிடுகிறது, எமது எண்ணங்களை மாற்றிவிடுகிறது. அப்படித்தான் கடற்குளிக்கவே பயப்பட்ட பாலமுரளியை கடல் போராளியாக ஆக்கி கடலிலேயே போராட வைத்தது காலம்.

பாலமுரளியைப் போல இன்னொருவன் வாசன், எப்போதும் உள்ளாடையுடனேயே கடற்குளிப்பான், அலையடிக்கும் இடத்திலே மண்ணுக்குள் உருண்ட படியிருப்பான்,

“டேய் வாசன், பொந்துக்குள்ளே இருக்கிற நண்டு தன்ர குஞ்செண்டு உன்ர குஞ்சை பிடிக்கப்போகுது”, என்று நண்பர்கள் பகிடி பண்ணுவார்கள்.

இவ்வாறு கடலுக்குப் பயந்து கரையில் நின்று குளித்த வாசன் பிற்காலத்தில் போராட்டத்தில் இணைந்து ஊடுருவல் தாக்குதல் ஒன்றிற்காக கடலுக்கூடாக நீந்திச்சென்று கரையேறி முன்னேறிச் செல்லும்போது சாம்பல் தீவில் விமான தாக்குதலில் வீரச்சாவடைத்திருந்தான்.

அலையில் உருண்டு உருண்டு குளிப்பவர்களது காற்சட்டைப்பைகள் முழுவதும் கடல் மண் நிறைந்திருக்கும். அலையின் வேலையது, அலை வரும் போது கொஞ்சம் கவலையீனமாக இருந்துவிட்டால் வாய், மூக்கு எல்லாம் மண்ணால் நிறைந்துவிடும். செழியன் நண்பர்களுடன் கடற்குளிக்க வந்துதான் நீச்சல் பழகியிருந்தான். இப்போது பரம்பரையா நீச்சல் தெரிந்த ராகவன், குமார் ஆகியோரோடு போட்டிபோட்டு நீந்துவான்.

பருத்தித்துறை ஜெற்றிக்குக் கப்பல் வந்தால் ஆழம் காட்டுவதற்கு என்று வெறும் எண்ணை பரல்கள் நான்கை ஒன்றாக சேர்த்து இரும்பு சட்டம் போட்டு வெல்டிங் செய்து கடலிலே குறிப்பிட்ட தூரத்திலே நங்கூரமிட்டு மிதக்க விட்டிருப்பார்கள். அந்த பரல்களை தாண்டி கப்பல் வந்தால் தரைதட்டி நிற்கவேண்டிவரும். சில நாட்களில் ஜெற்றியடியிலும் குளிக்க போவார்கள், அப்படிப்போகும் போது பெடியள் அந்த பரல்கள் வரைக்கும் நீந்தி போயிருக்கிறார்கள், ராகவன், குமார், கபிலன், இவர்கள் பரல்கள் வரைக்கும் போட்டிபோட்டு நீந்துவார்கள். செழியனால் அவ்வளவு தூரம் நீந்த முடியாது, அரைவாசி தூரம் நீந்திவிட்டு திரும்பிவிடுவான்.

ஒருமணித்தியாலத்துக்கும் மேலாகக் குளித்து, கும்மாளமடித்து, போட்டி போட்டு நீச்சலடித்து விட்டு கரையேறினார்கள். உடுப்புக்களை எடுத்துக்கொண்டு

தாசனின் காணிக்கு வந்து அங்கிருந்த நல்ல தண்ணிக் கிணற்றில் குளித்தார்கள், அது ஒரு சிறிய கிணறு, கைவாளியால் இழுத்து இழுத்து தான் தண்ணி அள்ளவேண்டும், ஆழம் அதிகமில்லாததால் தண்ணி அள்ளுவது கடினமில்லை, ஆள்மாறி ஆள் தண்ணி யள்ளி உடம்பில் உப்புத் தன்மை இல்லாதவாறு குளித்தார்கள். உடுப்பை மாற்றி, போட்டிருந்த உடுப்பை அலம்பி, புழிஞ்சு டிசு பையில போட்டு புத்தகப்பைக்குள் வைத்து சையிக்கிளில் கொளுவினான் செழியன். தென்னந்தோட்டத்தின் நடுவில் ஓலைகளைப் பரப்பி அதன் மேல் நண்பர்கள் வட்டமாக அமர்ந்தார்கள். தாசனின் தாய், பிரட்டிவைத்திருந்த றாலை சட்டியோடு தூக்கிவந்து பெடியளுக்கு நடுவில் வைத்தார், தாசன் பாணையும் கால் றாத்தல் துண்டுகளாக வெட்டி வைத்தான்.

ஒருபோதும் றாலின் அளவுக்கு ஏற்றவாறு வெங்காயம், மிளகாய், தேங்காயெண்ணை என்பன வாங்கிவர மாட்டார்கள், அதனால் தாசனின் தாய் தன்னால் இயன்றவரை இருக்கும் பொருட்களை வைத்து றாலை பிரட்டியிருப்பார்கள். ஆனால் அந்த நேரத்தில் அந்த உணவின் ருசி அவர்களுக்கு அறுசுவை உணவின் ருசியைவிட மேலாக இருக்கும். றால் பிடிக்க முடியாத காலங்களில் பாணும் வெறும் பச்சை வெங்காயமும் சாப்பிடுவார்கள், அதுகூட அவர்களுக்கு அந்த தருணத் திற்கான ருசிமிகுந்த உணவுதான், இருந்த றால் பிரட் டலையும் பாணையும் அனைவரும் பகிர்ந்து உண் டார்கள். பானையில் வைத்திருந்த தண்ணியில் ஆளா ளுக்கு சிறிதளவு குடித்தார்கள்.

அந்த மத்தியான வெய்யில் நேரத்தில் கடற்குளித்து விட்டு வந்தால் மிகவும் தாகமெடுக்கும், ஆனாலும் நண்பர்கள் அங்கே அதிகம் தண்ணி குடிக்க மாட்டார்கள், தென்னந்தோட்டம் கடற்கரைக்கு அருகில் உள்ளதால் தண்ணி உப்புச்சுவையுடனிருக்கும். அத்தோடு திரும்பி போகும்போது சிவன்கோவில் துலாக்கிணற்றில் குடிக் கலாம் என்பதாலும்தான். சிவன்கோவில் கிணற்றுத் தண்ணியின் சுவையோ சுவை.

மத்தியான வெய்யிலில் கடலில் குளித்த பின்பு பாணும் றாலும் உண்ட களையால் சையிக்கிளை உழக்க கள்ளப்பட்டு ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் சையிக் கிளை ஓடக் கொடுப்பார்கள், ஆனால் செழியன் தன் புதுசையிக்கிளை யாரிடமும் கொடுக்காமல் ராகவனை ஏற்றிக்கொண்டு தானே ஓடினான். சிவன்கோவில் வடக்கு வீதியில் உள்ள தூளாக்கிணற்றடிக்கு வந்து எல்லா சையிக்கிள்களும் நின்றன. எல்லோருமாக ஓடிவிழுந்து துலாவைப் பிடித்து தண்ணியிறைத்துக் குடித்தார்கள், ஒவ்வொருத்தரும் ஒரு வாளி தண்ணி குடித்திருப்பார்கள், அந்த குளிர்ந்த தண்ணியில் முகத்தையும் கழுவிக்கொண்டார்கள். பிறகு அந்த இடத்திலிருந்து ஒவ்வொருவராக பிரிந்து தத்தமது வீடுகளுக்கு புறப்பட்டார்கள்.

ராகவன், கபிலன் ரெண்டு பேரும் கிணற்றடிக்கு எதிர் புறமா இருந்த பருத்தித்துறை நூலகத்துக்கு போனார் கள். வழமையாக நூலகத்துக்கு போய் அங்கு வாசிப்பு மேசைகள் மீது போடப்பட்டிருக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகையளை மேலோட்டமாக பார்த்து விட்டு பின்னர் வீடு செல்வது வழக்கம். ராகவனும், கபிலனும் நடந்தே வருபவர்கள், இதுவரைகாலமும் செழியனும் அவர்களைப் போலவே நடந்தே வந்தி ருந்தான், ஆனால் இன்று தனது புது சையிக்கிளில் வந்திருந்தான். ஆனாலும் வழமைபோல செழியனும் நூலகத்துக்கு போனான். நூலகத்தின் தாழ்வாரத்தில் சையிக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றான்.

நூலக மேசைகள் மீது இருந்த எல்லா பத்திரிகைகள் சஞ்சிகைகளையும் மேலோட்டமாக ஆள் மாறி ஆள் பார்த்த பின்னர் எல்லோருமாக வெளியே வந்தார்கள்,. கடைசியாக வந்த செழியன் சையிக்கிள் விட்டிருந்த இடத்தை பார்த்ததும் கத்தினான்,

“ஐயோ, சையிக்கிளை காணேல்லையடா”, திடுக்குற்ற பெடியள் ஆளுக்கு ஒரு திசைக்கு ஓடி தேடினார்கள். சையிக்கிளை எங்கும் காணவில்லை, நூலகத்தில் மேலோட்டமாக படித்துவிட்டு உடனே புறப்படுவது வழமை என்பதால் செழியன் சையிக்கிளை பூட்ட வில்லை. அதுமட்டுமல்ல, அன்றைய பொழுதின் சந்தோசங்கள் அவனை, சையிக்கிளை பூட்டிவிட்டு உள்ளே செல்லவேண்டும் என்ற அளவுக்கு சிந்திக்க விடவில்லை. செழியனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அருகில் நின்ற ஒவ்வொருவரிடமும் சென்று,

“என்ர சையிக்கிளைக் கண்டனியளே, புது லுமாலா சையிக்கிள், இதில லைபிரறி வாசல்ல விட்டிட்டு உள்ள போன்னான், வந்து பாக்க காணேல்லை”, என்று கேட்டான்.

யாரும் சையிக்கிளைக் கவனித்ததாக கூறவில்லை. திடீர் என்று கீற்றாக் நினைவு வர விசிலடித்தபடி ஒவ்வொரு சையிக்கிளையும் நோக்கி ஓடினான்,

வீதியில் சென்று கொண்டிருந்த சைக்கிள்களையும் உற்றுப்பார்த்தபடி விசிலடித்தான். எதுவும் பிரியோசனப் படவில்லை, நண்பர்களும் எல்லாப்புறமும் தேடிக் களைத்து திரும்பினார்கள்.

செழியன் சையிக்கிளைப் பூட்டாமல் விட்டுவிட்டு நூலகத்துக்குள் சென்றதை யாரோ கவனித்து கொண்டி ருந்துவிட்டு சையிக்கிளை களவாடிச் சென்றிருக்க வேண்டும். நண்பர்களுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. ராகவனிடமும் கபிலனிடமும் அவர்களுக்கென சையிக் கிள் இல்லை என்பதால் நண்பர்களின் சையிக்கிள்களி லேயே வகுப்புக்கோ, கடல்குளிக்கவோ போய்வருவது வழக்கம். இவ்வளவு நாளும் செழியனும் அவ்வாறு தான். ஆனால் இன்று தனக்கென ஒரு புது சையிக்கிளை கொண்டுவந்து தங்களையும் அதில் டபிள் ஏற்றி சென்றிருந்தான். வகுப்புக்குக் கொண்டுவந்த முதல் நாளே செழியனின் சையிக்கிளை காணவில்லை என்பது அவர்களுக்கும் மிகவும் அதிர்ச்சியையும் துக்கத்தையும் கொடுத்தது.

செழியன் இன்னும் வீதியில் போய்வரும் சைக்கிள்க ளையே பார்த்துக்கொண்டு நின்றான், சிலவேளைகளில் சுற்றுமுற்றும் பார்த்தபடி விசிலடித்தான். பித்துபிடித்தவன் மாதிரி நின்றான்,

கபிலன் கைகளில் புத்தகப்பை வைத்திருந்தான், ஆனால் செழியனதும் ராகவனதும் புத்தகப் பைகள் செழியனின் சையிக்கிளில் கொழுவப்பட்டிருந்ததால், அவையும் காணாமல் போயிருந்தன.

செழியனை பார்த்து ராகவன் மெதுவாக கேட்டான்,

“வாடா, வீட்டை போவம்”, செழியன், “இல்லையடா, நீங்க போங்கோ, நான் நிண்டு பாக்க போறன், யாராவது மாறி கொண்டு போயிருப்பாங்கள், திருப்ப கொண்டுவரேக்கை நான் நிண்டா தானே வாங்கலாம்” என்றான்.

ராகவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. கபிலனை பார்த்தான், கபிலனுக்கும் அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை. அவனுக்குச் சையிக்கிளை யாரும் மாறி எடுத்து சென்றிருக்கலாம் என்று தோன்றவில்லை, யாரோ திருடிச்சென்று விட்டார்கள் என்றே அவனும் ராகவனும் நம்பினார்கள், ஆனால் செழியன் கூறியதற்கு நேரடியாக மறுத்து கூற தயக்கமாக இருந்தது. செழியனை தனியாக விட்டு செல்லவும் முடியவில்லை, இருவரும் யோசித் தபடி நின்றார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் செழியன் தானாகவே சொன்னான்,

“வாங்கோடா போவம், நீங்களும் இன்னும் சாப்பி டேல்லை” என்றபடி நடக்க தொடங்கினான்.

ஆனால் உண்மையிலேயே அப்போது யாரும் பசியை உணரும் மனநிலையிலில்லை. ராகவனும் கபிலனும் பின்னாலேயே நடந்தார்கள், மெத்தக்கடை சந்தியில் நண்பர்கள் பிரிந்து தத்தமது வீடுகளை நோக்கி நடக்க தொடங்கினார்கள். செழியன் சிவன்கோவிலின் மேற்கு வாசலுக்கு வந்து சிறிதுநேரம் நின்று பிள்ளையாரை பார்த்தான்,

“ஏன் கடவுளே, குடுத்துப்போட்டு இப்பிடி பறிக்கிறாய், நான் என்னெண்டு வீட்டை போறது, அம்மாவை என்னெண்டு முழிக்கிறது, வீட்டை எவ்வளவு தேவை இருக்க அம்மா வந்த காசில வாங்கித்தந்த சையிக்கிளை இப்பிடி களவுகுடுக்க வைச்சிட்டியே” என்று மனசுக்குள் சொல்லும் போதே கண்களில் இருந்து கொழகொழ என்று கண்ணீர்வர, அழத்தொடங்கினான்.நண்பர்கள் தனக்காகத்தான் காத்து நிற்கிறார்கள் என்பது தெரிந்து, அவர்களை வீட்டுக்கு அனுப்ப, தானும் வீட்டுக்கு செல்வதாக கூறி நண்பர்களை அனுப்பிவிட்டு வந்த செழியன் சிவன் கோவிலின் பிள்ளையார் வாசலில் வந்து பொறுக்க முடியாமல் உடைந்து அழுதான். ‘வீரகத்தி பிள்ளையாரை’ பார்த்தபடியே படிகளில் இறங்கி சென்று கடைசிப்படியில் உட்கார்ந்து கொண் டான். எவ்வளவு நேரம் அப்படியே கோவில் வாசலில் அழுதபடி இருந்திருப்பானோ தெரியவில்லை, மேற்கு வாசல் துலாக்கிணற்றில் தண்ணியள்ள ஆட்கள் வரத் தொடங்க, மெதுவாக எழுந்து வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான், அப்போது கூட போய்வருகின்ற சையிக்கிள்களை ஒவ்வொன்றாக பார்த்தபடியே நடந்தான். நீண்ட நேரம் அழுததன் மிச்சமாக வந்த கேவலுடன் இடைக்கிடையில் விசும்பியபடி, தலை கலைந்து, கண்கள் சிவந்து, போட்டிருந்த சட்டை கசங்கி, கால்கள் முழுவதும் புழுதி படிந்தபடி வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தான் செழியன்.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**

# கொக்குத் தவம்

சிறப்புச் சிறுகதை



எஸ். அகஸ்தியர்

**“ஐ**யா, உங்க இருக்கிறியளோ?”

குரல் கொடுத்துக்கொண்டு விறாந்தைக்கு வெளியே நின்று கொண்டிருந்தான் சின்னத்துரை.

“என்னடாப்பா?” என்று கேட்டவாறு வெளியே வந்தார். ‘சக்கடத்தார்’ குருசுமுத்தர்.

“அவே, உங்களைத்தான் கூட்டியரட்டாம்”

“ஆற்றாப்பா?”

“மரியானண்ணையும் பாக்கியமப்பாவும்”

மதியூகமில்லாதவன் தனது பலவீனத்தைக் காட்டிக் கொள்ளும் போது அதில் கணை தொடுப்பது எளிது என்பதை அவர் அறிவார். சின்னத்துரையின் பேச்சிலிருந்து அவர்களை முற்றாகப் புரிந்துகொண்ட குருசுமுத்தர் அதை வாகாகப் பயன் படுத்திக்கொண்டார். ‘மெழுகுக் கழுதை’ என்று பெயரெடுத்த சின்னத்துரையின் ‘திறமை’யையும் அவர் தெரிந்து வைத்திருந்தால் எல்லாவற்றையும் அனுமானித்துக் கொள்வதில் அவருக்கு ஒன்றும் சிரமம் இருப்பதில்லை. அவர் இருந்த இடத்தை விட்டு எழுந்துவர ஐந்து நிமிடங்களாவது பிடிக்கும். இந்த அளவிற்காகவாவது இவரைப் பற்றித் தெரியாதவர்கள்

யாராவது இருந்தால் அவர்கள் அசல் 'மண்டுகங்கள்' அதாவது ஒன்றுமே தெரியாத கிணற்றுத் தவளைகள்.

சின்னத்துரை 'மொக்குக் கழுதை' என்றாலும் குருசுமுத்தரைப்பற்றிய எடுபிடிகள் எல்லாம் தெரிந்ததுதான் இன்னும் அவர் 'கேற்'றடியில் நின்று கொண்டிருந்தான்.

"என்ராப்பா 'நான்' இல்லாட்டி இனி ஊருக்க ஒண்டுமே நடக்காதா?" சும்மா எரிந்து விழுந்து கொண்டே சின்னத்துரையைப் பார்த்து

"சரி நீ போ நான் உனக்குப் பிற கால வாறன். நீ போற கையோட மரியானையும் அங்க கூட்டிக் கொண்டு வந்துவிடு" என்றார்.



## எஸ். அகஸ்தியர்

ஈழத்து இலக்கிய உலகில் சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக ஆழ்ந்த பற்றுறிதியுடன் செயலாற்றியவர். இவர் 350 க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் ஒன்பது குறுநாவல்களையும் பத்து நெடுநாவல்களையும் பல குட்டிக்கதைகளையும் பல வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் ஒரு மக்கள் எழுத்தாளர். இரு சாகித்ய மண்டல விருதுகளோடு வேறு பல விருதுகளையும் பெற்று தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி பிரான்சில் தன் இறுதிக்காலத்தில் வாழ்ந்து பல இலக்கியங்கள் தன் இறுதிக் காலம்வரை படைத்த பெருந்தகை. அவரின் இச் சிறுகதையை இங்கு சிறப்புக் கதையாக இடுவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

அவர் மனசில் உள்ளூர ஒரு மகிழ்ச்சி. ஊர் விவகாரங்களில் தலையிட்டுத் தீர்ப்பளிக்கக்கூடியளவு 'புரக்கிராசி' வேலையும் தெரியுமாதலால் அதையிட்டும் அவருக்கு ஒரு பெருமை.

ஒரு காலம் அவர் பொடியனாய் இருந்தபோது வயிற்றுப்பசி தாங்காது இறங்கிய தரகுத்தொழில் மூலம் ஒரளவு முன்னுக்கு வந்தாரென்றாலும் அதனால் அவர் கடைசியில் வெறுப்பும் விரக்தியும் கொண்டார் ஆயினும் அந்தத் தொழில் மூலம் கிடைத்த அனுபவமே அவரை இந்தளவுக்குக் 'கெட்டிக்காரனா'க்கியும் விட்டது. அவர் எந்தத் தொழில் மூலம் அனுபவம் - கெட்டித்தனம் பெண் ஆகியவற்றை அடைந்தாரோ அந்தத் தொழிலே கடைசியில் அவர் மானத்தையும் பறித்து நடு றோட்டில் விட்டுவிட்டது.

குருசுமுத்தருக்கு அப்போது பத்தொன்பது இருபது வயதிருக்கும் வழக்கம் போல இரணைதீவுக் கடலுக்குச் சென்று மீன்கள் வாங்கிக் 'காவுதடி'யில் போட்டுக் கொண்டு அபபடியே நாச்சிமார் கோயிலடி சிப்பித்தறை தட்டாதெருவுக் கூடாக குருநகரைத் தாண்டி வீட்டுக்குத் திரும்பும் போது தோளின் பாரம் குறைந்து மடிப்பணம் பாரமா கிவிடும்.

எந்தக் கிராமத்துக்குப் போகாவிட்டாலும் குருநகருக்குள்ளால் செல்லவில்லையென்றால் அன்றைக்கு 'யாவாரம்' நடக்காத மாதிரித்தான். ஆகையால் அந்த ஊருக்குள்ளால் வராமல் யாவாரம் செய்யவேமாட்டார். அவருடைய விடலைப் பருவத்திற்கேற்ப ஒரு 'வாலைக் குமரி' தனது தாயோடு சேர்ந்து நின்று தெருப்படலையோடு ஒட்டிக் கொண்டு அவரைப் பார்த்து வந்த பழக்கம் கடைசியாகக் காதலாக மாறியது. எப்படியும் அவளைக் குருநகரிலிருந்து தனது ஊருக்கே 'கிளப்பி'க்கொண்டு வர வேண்டும் என்று அவர் துடித்துக் கொண்டதினால் அவர் தேன் சுவைக்கும் வண்டாக மாறினார்.

காவுகோலுடன் நெடுந்தூரம் நடந்து அலைந்த களைப்பில் வீட்டுக்கு வந்ததும் அவருடைய ஆச்சிக்குப் 'பெற்ற கடமை'க்காக ஏதாவது கொடுத்துவிட்டு மேல் காலைக் கழுவிக்கொண்டு 'காத்தான் கொட்டில்' கள்ளுத் தண்ணியையும் 'மண்டி'விட்டு அப்படியே சிப்பித்தறைப் பக்கம் போய் முஸ்பாத்தி பண்ணிவிட்டு இரவு பத்துப் பதினொரு மணிக்கே வீடு திரும்புவார்.

எப்போதாவது யாவாரம் நயமில்லாவிட்டால் தனது தம்பி ராசப்புவையும் கூட்டிக்கொண்டு கடலுக்குப் போவார். அங்கே பெரியபாடு, சித்தோடை, அகலமுனை, ஓடத்தலை,சேத்துப்புட்டி, மடத்துக்கரை வெட்டோடை, கொடுக்கடி ஆகிய கடற்பரப்புக்களில் நீர் வகையைப் பார்த்துப் பத்துப் பதினைந்து பாடுகள் இழுத்துவிட்டு வெள்ளம் வந்து ஆற்றில் விழுந்தவுடன் தோணியைச் சாய்த்துக் கொண்டு கரைக்கு வந்துவிடுவார்.

ஒரு நாள் காற்றும் மழையும் சீறிக் கொண்டதனால் யாருமே அன்று கடலுக்குப் போகவில்லை. இதையறிந்த குருசுமுத்து ராசப்புவையும் கூட்டிக்கொண்டு எவருக்கும் தெரியாமல் 'தனித்தோணி' தாங்கிக்

கொண்டு போனார்.தனி உழைப்பில் பிடிக்கும் மச்சங்கள் மறுநாள் துறை முகவாடியில் நல்ல விலை போகும் என்ற 'வியாபார மூளை' அவருள் ஆசைத் வாயில் வந்தபடியே 'புறுபுறு'த்துக் கொண்டு வெற்றிலை வாயைக் குதப்பி 'பொழிச்' சென்று வலைக்குள் துப்பினார் முத்தர்.



தீயை மூட்டிவிட்டது. அன்று செக்கல் பொழுதோடு தொழில் செய்யக் கடலுக்குள் இறங்கியவர்கள் நடுச்சாமத்துக்கு மேலாகியும் சோறும் தின்னாமல் 'ஒரேபிடி'யில் நின்று வலை இழுத்தார்கள்.

காற்று அடங்கவில்லை. மழையும் நிற்கவில்லை. தம்பி ராசப்புவுக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. நித்திரையும் வந்து கண்களை மயக்கியது.

கப்பல் களத்தில் ஒருபாடு இழுப்பதென்றால் பெரும் 'பிரசவவேதனை' யாகும் எப்படியோ 'முக்கித்தக்கி' இழுத்துக் கொண்டே பாட்டைக் கூட்டி உமலுக்குள் போடுவதற்குப் பதிலாகக் கைதவறிக் கடலுக்குள் போட்டுவிட்டான் ராசப்பு. குருசுமுத்தருக்கு நெருப்புப் போலக் கோபம் வந்துவிட்டது

"டேய் சனியனே, இந்தப்பாடுபட்டு ரத்தம் புழிஞ்சு பிடிச்ச மீனை அப்படியே கடலுக்குள்ள போட்டிட்டியேடா மடையா, கலியாணம் செய்து தந்தால் உன்ர பொஞ்சாதியையும் இப்படித்தான்ரா கை விடுவாய் என்ன?"

ராசப்பன் இளையவன் என்றாலும் இளந்தாரியல்லவா? 'சுரீர்' என்று மூக்கு முட்ட ஏறிவிட்டது.

"சரியண்ணை பறஞ்சதுகாணும், இனி பேசாம உன் பாட்டில வலையை இழு. இல்லாட்டி அடிதுறைக்குப் போவம்.

சினப்பு மேலிட சீறிக்கொண்டு சொன்னான் ராசப்பு.

"என்னடா பயலே என்னோட எதிர்த்துக் கதைக்க வெளிக்கிட்டிட்டியோடா?"

"உப்பிடிப்பட்ட உனக்கு என்ன மரியாதை செய்யிறது?"

"என்னடா சொன்னனி இன்னோருக்கா அப்படிச் சொல்லடா பாப்பம்"

"அதுதான் சொல்றன், என்ன மரியாதையெண்டு" 'பளார்' எடுத்த வீச்சில் ராசப்புவின் கன்னத்தில் ஒன்று விட்டார் முத்தர்.

‘‘என்ர ஐயோ! என்ர காதுக்குறிஞ்சி வெடிச்சுப்போச்சு தணை, என்ரை ஆச்சியோய்….’’ குழறிக்கொண்டு கடலுக்குள் ‘தொப்’ என்று விழுந்தான் ராசப்பு.

அந்த அடியோடு ராசப்புவின் காது உண்மையில் செவிடாய்த்தான் போய்விட்டது. அதற்குப் பின் ஊரில் எல்லோரும் ‘செகிட்டு ராசப்பு’ ‘செகிட்டு ராசப்பு’ என்றுதான் அழைப்பார்கள். அன்றையோடு அவர்பாடு தொழில் மந்தம், பிடிபாடும் அருந்தல்.

குருசுமுத்தர் அந்தச் சம்பவத்துக்குப் பின் நாளாவட்டத்தில் தொழிலையும் விட்டுவிட்டார். தடி காவுவதையும் நிறுத்திக்கொண்டார்.

அது ஒரு ‘எழியதொழில்’ என்று தனக்குள் தீர்மானித்தே விட்டார்.

கொஞ்ச நாள் கழிய வயிறு கடித்தது. அந்த உபாதையால் ‘சுறுட்டுச் சுத்திப் பாப்பம்’ என்று கொழும்புத் துறைப்பக்கம் உள்ள சுறுட்டுக் கொட்டில்களுக்கு ‘விஜயம்’ செய்யத் தொடங்கினார். அவை கூட அவர் வயிற்றை நிரப்பவில்லை. ஆனால் அவர் கண்போட்ட பெண்மணி இருந்தாளே அந்த ‘வைப்பு’க்கு மட்டும் என்னவோ நிரம்பிக் கொண்டு வந்தது.

இந்த விசயம் வெளிக்குத் தெரிந்து கை காலுக்குப் பொல்லாப்பு வந்து சேரமுன் புத்திசாலித்தனமாக அவர் தனது ஊருக்கே இரகசியமாக வந்துவிட்டார். அவளும் ‘இதை விட்டால் இனிக் கிட்டாது’ என்று ஓடி வந்துவிட்டாள். கூடி வந்தவளை ஊரில் வைத்திருக்கக்கூட அவரால் முடியவில்லை. எனவே கொழும்பு மாநகருக்குப் புறப்பட றெயில் ஏறிவிட்டார்.

அதற்குப் பின் அவருக்குக் கைகொடுத்து உதவியது ஓர் ‘ஊர்ச்சக்கிடத்தார்’ வேலை. அதிலிருந்து கொண்டே அவர் ‘ஊர்த்தொண்டு’ புரியலானார்.

சக்கடத்தார் குருசுமுத்தர் நடுக்குறிச்சிக்கு வந்துவிட்டார். கூட்டம் பாக்கியக் கிழவன் வீட்டு முற்றத்தில் ‘கலகலப்’பாக நடந்து கொண்டிருந்தது. முத்தர் மெதுவாக நாரியை வளைத்துக் கைகளால் பிடித்துக்கொண்டு முன்னே வந்துகொண்டிருந்தார். பொறுத்த நேரத்தில் முத்தர் வந்திருக்காவிட்டால் இந்நேரம் மாரியானும் பொன்னுத்துரையும் பொல்லுகளால் மண்டை உடைபட்டிருப்பார்கள். அவரைக் கண்டதும் அமைதி நிலவியது.

‘‘என்னடாப்பா, நீங்கள் மனிசர்களா அல்லது மிருகங்களா?’’ என்றவர், கடல் நனைஞ்ச கால்புத்தி இவங்களை விட்டுப் போகாது என்று முணுமுணுத்துக் கொண்டார். யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இதைக் கண்டதும் அவர் முகம் மகிழ்ச்சிப் பிம்பம் ஆகியது.

தம்முடைய கோட், சூட், ரை, சப்பாத்து ஆகியன அவர்களை ஊமைகளாக்கிவிட்டன என்று யூகித்துக் கொண்டபோது அவர் முகத்தில் புன்னகை ஒன்று அரும்பியது.

சுமார் ஒரு மணிநேரம் பேசிவிட்டு மரியானுக்கு மட்டும் ஏதோ ‘சமிக்ஞை’ காட்டியபின் எழுந்து சென்றார்.

அன்று இரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை. ‘ஊர் குழம்பினால் உடையாருக்குத் தாயம்’ என்பது அவருக்குத் தெரியும். அவரே ஊர்ப்புரக்கராசி சங்கடத்தார்.

மரியானைப் புகழ்ந்து பேசிவிட்டால் அவன் தனக்கு உடந்தையாக இருப்பான் என்பதை அவர் அறிவார். மரியானே அவர் புகழ்ந்த பேச்சில் மயங்கிவிட்டான்.

‘‘அது உண்மைதானண்ணை, இவங்கள் எல்லோரும் போட்டு இழுக்கிற வலைக்கு முன்னால அவன் ஒருத்தன் பெரிய கரவலையைக் கொண்டுவந்து போட்டு எல்லா மச்சங்களையும் பிடித்துக்கொண்டானாம் அதால இவங்கள் ஆத்திரப்பட்டு அவன் பாவிக்கு நல்லா அடிச்சுப்போட்டாங்கள்’’

‘‘அவன் இவங்களில் வழக்கு வச்சிட்டான். வழக்கு இப்ப பெலப்பட்டுப் போச்சு. இந்த வழக்கில் கட்டாயம் நாலைஞ்சு பேர் அம்புடுவாங்கள்போல கிடக்கு’’

‘‘அது சரி, இதில என்ன வில்லங்கம் இருக்கு?’’

‘‘இதில ஒரு சங்கடம். இந்த வழக்குக்காகச் சேர்த்த காசு. என்னட்ட இருக்கட்டும் உன்னட்ட இருக்கட்டுக் கெண்டு ஒருத்தனை ஒருத்தன் அடிச்சுக்கொண்டு சாகிறாங்கள். அதுக்காகத்தான் சின்னத்துரையை உங்களிட்ட அவசரமாக அனுப்பினனாங்கள்.’’

‘‘ஓகோ அப்படியா சங்கதி? ‘பெட்டியையும் திறப்

பையும் சங்கடத்தார் குருமுத்தண்ணையிட்டக் குடுத் துவிடுங்கோ' வெண்டு நீ சொன்னால் அந்தப் பயல்களில ஆர் மறுப்பான்?''

"அப்படித்தானண்ணை இப்ப எண்ணியிருக்கிறம்"

குருசுமுத்தர் வைத்த கண்ணியில் மீன்கள் சிக்கிவிட்டன. எப்படியோ வழக்குகள் அமர்க்களமாக நடந்தன. எல்லாம் சங்கடத்தார் குருசுமுத்தரின் வாய் வீச்சுத்தான் என்று ஊர்முழுக்கப் பேசிக்கொண்டார்கள்.

இந்த வழக்குக்கு எப்படியும் பத்துப் பதினையாயிர மெண்டாலும் கட்டாயம் வேணுமென்று அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவர்களோ வழிதெரியாது விழித்தனர்.

ஆனால் இந்த வழக்கிலிருந்து தப்ப வேணுமே? இப்பொழுது குருசுமுத்தர் வீட்டில் ஒரே கும்மாளம். மாதக் கடைசியில் அவருடைய கடைக்குட்டிப் பெண்ணுக்குத் திருமணம் என்ற பேச்சு அடிபட்டது.

வழக்கு இறுகவில்லை. எல்லோரும் விடுதலை!

இந்தச் செய்தியால் மகிழ்ச்சிப் பெருக்கில் உந்தப்பட்ட அவர்கள் தங்கள் அபிமானத்துக்குப் பாத்திரமான 'சங்கடத்தார்' குருசுமுத்தரைச் சூழ்ந்துவிட்டார்கள்.

"சங்கடத்தார் குருசுமுத்தருக்கு, ஜே!"

"எங்களுக்கு விடுதலை அளித்த வீரன் வாழ்க"

தெருவில் ஜனக்கூட்டம் நிறைந்துவிட்டது.

யாரோ சனத்தை முடுகி வருவது தெரிந்தது.

கூட்டத்தை ஊடறுத்துக் கொண்டு ராசதுரை சங்கடத்தார் குருசுமுத்தரைத் தேடி வந்துகொண்டிருந்தார்.

"ராசதுரை, என்னப்பா சங்கதி?"

ராசதுரை ஒரு வெள்ளைக் காகிதத்தை அவரிடம் நீட்டினான்.'வாழ்த்துப் பத்திரங்கூட நேரத்தோடு தயார்பண்ணி வைத்திருக்கிறான். நாலுபேருக்கு முன்னாலயல்லோ தரவேணும்.... மோட்டுப்பயலே'

அந்த வாழ்த்துப்பத்திரம் ஜனநெரிசலால் நழுவிக் கிழே விழுந்தது.

"என்ராப்பா விசயம்?" என்று மறுபடியும் ராசதுரையைக் கேட்டார் சங்கடத்தார்.

"அதிலதான் அம்மா எல்லாம் எழுதியிருக்கிறா, பாருங்கோ"

"உது கடிதமே? அம்மா என்ன எழுதியிருக்கிறா? வாயாலை சொல்லித்தொலையனப்பா"

"அது ஒரு கவலையான சங்கதி"

முத்தர் நெஞ்சு குபீரித்தது.

"அது என்னப்பா கவலை, எங்க எடடா கடிதத்தை?"

"அந்தக் கடிதம் அவங்கட கையில அம்புட்டுப் போச்சு"

சங்கடத்தார் பேச வாய் எடுக்காமல் மௌனியாகினார்.

அந்தக் கடிதத்தை ஒருவன் தூக்கிப் பிடித்துக்கொண்டு வெறி பிடித்தவன்போல் ஆவேசமாக உரக்க வாசித்தான்.

**பட்சமுள்ள பிராண நாயருக்குஇஅவசரமாக எழுதுவது. இண்டைக்குக் காலத்தால நீங்கள் கோட்டடிக்குப் போன பிறகு பெட்டியில இருந்த பத்தாயிரத்தையும் காணவில்லை. எங்கட வெறிக் குட்டியன்ர பொடியன்தான் களவாண்டிருப்பான். அந்தக் கள்ள வடுவாவை விடப்படாது. உடன பொலிசில 'என்றி' போட்டு அவனைப் பிடிச்சு 'லொக்கப்'பில போடச் சொல்லுங்கோ. பாவம் பாடுபட்டுழைச்சதுகளின்ர பணத்தை அதுகளுக்கே கொடுத்துவிடலாம். நாங்கள் அந்தச் சனங்களை ஏமாத்தினம். இப்ப இவன் எங்களை ஏமாத்திப் போட்டான். கொஞ்சமா பத்தாயிரம் ரூபாயல்லே?**

**உங்கள் பட்சமுள்ள**

**கு.சின்னம்மா**

சங்கடத்தார் சதிரம் குல்லிட்டது. மரியானையும் ராசதுரையையும்தவிர அவருடன் அப்போது அங்கு எவரையுமே காணவில்லை.சங்கடத்தாரின் 'பொடிச்சி'க்கு மாதக் கடைசியில் திட்டமிட்டிருந்த கலியாணம் நடக்கவில்லை.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**

# போர்க்களம்




இரண்டு நாடுகள் போர் புரிகின்றன என்ற செய்தியைக் கேட்டதும் அருகிலுள்ள வளர்முக நாடுகளுக்கு திக்..திக்.. என்று இருக்கும். ஆயுத வியாபாரம் மேற்கொள்ளும் நாடுகளுக்கோ தமது ஆதிக்கத்தைப் பரப்புவதற்கு உருவான வாய்ப்பு என்ற இன்பம் நிச்சயமாய் இருக்கும். இவர்களுக்கு மத்தியில் மாட்டிக் கொண்டு அல்லலுறும் ஏதுமறியாச் சனங்களுக்கோ யுத்தம் அச்சத்தின் உச்சத்தை நித்தம் தரும். உரிமைகளை மீட்பதற்காகவன்றி நாடு களை ஆக்கிரமிக்கும் வேட்கையினால் ஆரம்பமாகியிருந்த யுத்தத்தின் உச்சக்கட்ட நாள் அதுவாகும்..

“மேஜர் ஜெனரல்! நாட்டின் எல்லைப் பகுதியில் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல்கள் நடைபெறும் எனத் தகவல்கள் கசிந்துள்ளன” என்றான் படைப் பிரிவுகளின் துணைக் கட்டளையிடும் அதிகாரி.

ஜெனரல் கலவரமடையவில்லை.

“ம்.. ராடாரின் உதவியுடன் அதனைச் சுட்டு வீழ்த்துவதற்கு ஒற்றைப் படைவீரன் போதும்” எனக் கூறிவிட்டுச் சிரித்தார். இதற்கிடையில் குறித்த நாட்டின் ஊடகங்களுக்கு இத்தகவல் கசிந்திருந்தது.

“பொதுமக்களுடைய நலன் கருதியும் சர்வதேசச் சமாதானப் பேரவையின் கட்டளையை மதித்துமே மார்ச் மாத இறுதிவரை நாம் தற்காலிக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தோம். மீண்டும் அவர்கள் எம்மைச் சீண்டும் பட்சத்தில் எமது நகர்வுகள் பாரிய அழிவுகளை ஏற்படுத்தாமல் விடாது என நினைவூட்டிக் கொள்ள விரும்புகின்றேன்.. ” என்றார் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர்.

சுமார் இருமாதகாலமாய் முடிவின்றித் தொடர்கின்ற இந்த யுத்தத்தில் குளிரூட்டப்பட்ட அறைகளில் காலுக்கு மேல்கால் போட்டுக் கொண்டு கட்டளையிடும் இவர்க ளைப் போன்றவர்களில் ஒருவர் கூட மடியவில்லையே என்பதுதான் எனக்குக் கவலையை ஏற்படுத்துகிறது.

“அவர்கள் எமக்கு நாசத்தை ஏற்படுத்துவார்களாயின் நாம் எத்தனை மோசமானவர்கள் என்பதை அவர்களுக்குப் புலப்படுத்துவோம்.” என ஆவேசத்தில் கொந்தளித்தார் மற்றைய நாட்டின் ஒரு பிரபல அரசியல்வாதி.

“ஜெனரல், வரலாற்றில் இன்றைய தினம் நடக்கப் போகும் விடயத்தை உலக மக்கள் யாரும் மறக்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் அந்த நாட்டின் படைத்தளபதிக்கும் மற்றுமொருவருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளதை நம் நாட்டின் உளவுத்துறை உறுதி செய்துள்ளது.” என வார்த்தைகளை மென்று விழுங்கினார் கட்டளையிடும் அதிகாரி.

நீண்ட நேரம் நிலவிய மௌனத்தை உடைத்துக் கொண்டு ஜெனரலின் குரல் வெளிப்பட்டது. “எல்லோரையும் தயார் நிலையில் இருக்கச் சொல்லுங்கள்.. ஆனால் என் கட்டளையின்றி எதனையும் செய்து விபரீதம் ஏற்படுத்த வேண்டாம் என எச்சரித்து வையுங்கள்” இம்முறையும் ஜெனரல் கலவரமடையவில்லை.

ஜெனரலின் கட்டளையை இராணுவ வீரர்களுக்குத் தெரிவித்தார் கட்டளையிடும் அதிகாரி.

கொஞ்சம் கொஞ்சமாக இருள் சூழ்ந்து ஒரு கட்டத்தில் நிலவின் ஆக்கிரமிப்புக்குட்படுத்தப்பட்டுப் போயிருந்தது

வானம்.

“ம்.. சொல்லுங்கள்.. ” என்கிறார் ஜெனரல்.

“எமது நாட்டின் வடக்கு எல்லையை நோக்கி.. அதாவது இப்போது நீங்கள் இருக்கும் இடத்தை நோக்கி விமான மொன்று அனுமதியின்றி வரும். உடனடியாக அதைச் சுட்டு வீழ்த்தக் கட்டளையிடுங்கள்.”

“எத்தனை நிமிடங்களுக்குள் எனச் சரியாக சொல்ல முடியுமா?”

“அதன் வேகத்தின் படி பார்த்தால் எப்படியும் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குள் அது எல்லைக்குள் நுழைந்துவிடும்.”

அத்துடன் தொடர்பு துண்டிக்கப்படு கின்றது. உடனடியாக கட்டளையிடும் அதிகாரி வரவழைக்கப்படுகின்றார்.

“இன்று இரவு பன்னிரண்டு மணிக் குள் அந்த விமானம் வருவதாக மேலிடம் உறுதி செய்து விட்டது. ஆனால்.. வெறும் ஒரு விமானத்தை வைத்து என்ன செய்ய எதிர்பார்க் கிறார்களாயிருக்கும்..?” என தனக் குத் தானே கேள்வியையும் கேட்டுக் கொண்டு விடை தெரியாமல் தவித் தார் ஜெனரல். பின்பு அவரே மீண்டும் பேசத் தொடங்கினார்.

“எது எப்படியோ எல்லைக்குள் அத்துமீறி நுழையும் விமானத்தை உடனடியாகச் சுட்டு வீழ்த்தச் சொல் லுங்கள்.”

கட்டளையிடும் அதிகாரியும் அவ் வாறே செய்யும்படி அறிவிப்பதாய் கண்களால் சமிக்ஞை செய்தார். எலும்புத்துண்டுக்காக ஏங்கும் தெரு நாய்களாய் மேலிடத்தின் கட்டளைக் காகக் காத்துக் கிடக்கும் ராணுவத் தினருக்குத் தமது அதிகாரியின் அறிவிப்பு பெரும் உற்சாகத்தைத் தந்திருக்க வேண்டும்.

போர்த்திக் கொண்டு தூங்க வேண்டிய நேரத்தில் வானத்தையே பார்த்துக் கொண்டு கிடந்தார்கள் அத்தனைப் பேரும்...

“ஒரு விமானம் தானே வரப் போகிறது.? ஏன் இத்தனை பேர்?” ஏன மெதுவாக பேச்சை ஆரம்பித்தான் ஒரு சிப்பாய்

“அதுதானே....? ” எனக் கேள்வியை கேட்டவனின் சந்தேகம் எனும் தீயில் எண்ணெய் ஊற்றினான் இன்னொருவன்.

“யாருக்குத் தெரியும், வரப்போவது ஒரு விமானம் மட்டும் தானென்று....” என்றான் மற்றொரு சிப்பாய்

“ஏன் .. அதுதான் அதிகாரி அறிவித்தாரே... ” என இன்னொரு இராணுவ வீரன் கூறினான்.

இப்படியாக இவர்களுக்கு இடையிலான உரையாடல் நீண்டு கொண்டே போக ஜெனரலின் சத்தம் அவற்றுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

“ஜெனரல்....ஜெனரல்....” எனக் கதறினார் கட்டளையிடும் அதிகாரி ஜெனரலின் உடல் மரக்கட்டையைப் போலாகியிருந்தது.

“யாரும் பதட்டமடைய வேண்டாம்..!”

நாட்டைக் காக்கும் பொறுப்பு உங்கள் கைகளில்....இன்னும் சில நிமிடங்களில் வரப்போகும் விமானம் மட்டுமே நம் இலக்கு....அதுவே, ஜெனரலுக்கான உங்களின் இறுதி மரியாதை.” என்று கட்டளையிட்டார் அதிகாரி

ஜெனரலின் இழப்பு படையினருக்கு பெரும் பின்னடைவுதான்... என்றாலும் அதைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் படைவீரர்கள் அப்போது இருக்கவில்லை. இவ்வாறாக, ஜெனரலின் உயிர் காற்றோடு காற்றாகக் கலந்து கரைந்துப் போயிருந்தது.

“இன்னும் நூற்றி இருபது செக்கன்கள்” ஆட்டத்தின் இறுதிக் கட்டம் ஆரம்பமானது. செக்கன்கள் ஒவ்வொன்றாகச் செத்து மடியும் போதும் படையினரின் உள்ளக் கொதிப்பு கூடிக்கொண்டே போனது

இன்னும் ஐந்தே வினாடிகள்...

ஆம்....

பின்னணி இசை இல்லாதிருந்த போதும் கிட்டத்தட்ட ஒரு முன்னணி நாயகனின் திரைப்பட நுழைவைப் போலிருந்தது விமானத்தின் வருகை. ஆனால்.. அதை விமானமென்று சொல்லிவிட்டால் விமானங்கள் எல் லாம் சேர்ந்து என்னை நீதிமன்றக் கூண்டில் நிறுத்தி வைத்துவிடும். எனவே அந்தச் சொல்லைப் பயன் படுத்தியதற்காக வருந்துகின்றேன்.

அது விமானம் இல்லையென்றால்,

“இதுதான் அணுகுண்டாயிருக்குமோ..” என்னவாயிருந்தால் நமக்கென்ன என நினைத்த இராணுவ வீரர்கள் சரமாரியாக சுட்டுத் தள்ளினார்கள். அந்தப் பறக்கும் வாகனம் வெடித்துச் சிதறியிருக்க வேண்டும். ஆனால் அது அப்படிச் செய்யவில்லை திடீரெனக் காற்றில் கந்தகவாசனையும் வேறேதோ தாங்க முடியாத வாசனையும் வீசியது. இப்போது அந்தப் பறக்கும் வாகனம் வாணவேடிக்கையாக மாறி “பிறந்தநாள் வாழ்த்துக்கள்” எனச் சில விநாடிகள் வானை வண்ண மயமாக்கிவிட்டுக் காணாமல் போனது. படைவீரர்களுக்கு அந்த விசவாயு எரிச்சலை ஏற்படுத்திட ஒவ்வொருவரும் “தொப்..தொப்..” என வீழ்ந்தார்கள். அந்த மாதத்தின் முதல் நாளிலேயே இப்படியொரு பின்னடைவு ஏற்படும் என அவர்கள் எண்ணியிருக்க வாய்ப் பேயில்லை. மாதத்தின் முதல் நாள் என்பது சரி..என்ன மாதமாயிருக்கக் கூடும் என்ற வினா எழவேயில் லையா......?

அது “ஏப்ரல் மாதம்..”

## ஒரு பக்கக் கதை



# கனாக்காலம்

பரமசிவமும், கார்த்திகேசுவும் நல்ல நண்பர்கள். அவர்கள் இருவருக்கிடையேயும் வியாபாரத்தில். போட்டி உண்டு ஆனால் பொறாமை அறவே கிடையாது. பரமசிவத்தின் ஒரே மகள் ஜோதி அழகானவள். அமைதியான சுபாவம். கார்த்திகேசுவின் இரண்டாவது மகன் விஜய். அழகானவன், கொஞ்சம் மோசமான பழக்கவழக்கமுள்ளவர்களுடன் நட்பானவன்.

ஜோதி, தன் மாமன் மகன் சிவாவை உயிருக்குயிராய் காதலித்து வந்தாள். பரமசிவத்துக்கு தெரிந்தும் அவர் அலட்டிக் கொள்ளவில்லை. வயதுக் கோளாறு அப்படித்தான் என இருந்துவிட்டார்.

ஒரு நாள் கார்த்திகேசு பரமசிவத்திடம், தன் இரண்டாவது மகனுக்கு ஜோதியைக் கேட்டுப் பார்த்தார்.அது பரமசிவத்துக்குப் பிடித்துவிட்டது... ஜோதியின் அம்மாவிடம் விசயத்தைச் சொன்னார். பெரிய இடம்தானே அம்மாவுக்கும் பிடித்துவிட்டது.

இடைக்கிடையே இவர்கள் கதைக்கும் விசயம் ஜோதியின் செவிகளுக்கு எட்டிவிட்டது.

“அம்மா..அம்மா... எனது கலியாண விசயம் , வேண்டாம்மா... அவர் வேண்டாம்..நான் நம்ம சிவாவைத்தான் விரும்புகிறேன்.. அவரை எனக்கு கட்டிவைம்மா..! அப்பாவிடமும் செல்லுமா..” எனக் கெஞ்சினாள்.

“அப்பா சம்மதித்தால் பார்ப்போம்..” என ஒரே வார்த்தையில் பதில் கூறினாள் அம்மா. அம்மா எவ்வளவு எடுத்துக் கூறியும் அப்பா சம்மதிக்கவில்லை. வலுக் கட்டாய நிலை யில் கல்யாணம் ஒழுங்கு செய்யப்பட்டது.

“சிவா... வா... எங்கேயாவது போயிடுவோம்..” என்று சிவாவை அழைத்தாள் ஜோதி.

“இங்கே பாரு ஜோதி, நம்ம இருவரின் நேசத்திற்காக பெற்றோர்களின் சுய கௌரவத்தைப் போக்கிவிடக் கூடாது. இறை விதி அதுவென்றால் நடக்கட்டும்..” என்று சிவாவும் சொல்லிவிட்டான். ஒன்றை மட்டும் உறுதியாக ஜோதியிடம் சொன்னான் சிவா.

“நான் வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்” என உறுதியாகவே கூறிவிட்டான்.

ஜோதியின் பரிபூரண விருப்பம் இன்றி கல்யாணம் நடைபெற்றது.

அன்றே தன் மகிழ்ச்சியை முற்றிலும் துறந்துவிட்டாள் ஜோதி.

கல்யாணத்தின் பின்பும் மாப்பிள்ளை விஜய் நண்பர்க ளோடு இரவினிலும் காலம் கழிப்பதை வழக்கமாக்கினான். ஜோதி ஒன்றும் பேசவில்லை. மனதுக்குள் அழுதவளாய் மௌனம் காத்தாள். வாழ்க்கை நரகமாகவே கழிந்தது. காலம்போக விஜய் குடிப் பழக்கத்திற்கு ஆளாகி, வீட்டுக்குள் அட்டகாசம் ஆரம்பித்து விட்டது.

ஜோதி பல மாதங்கள் பொறுத்தாள்.

கடைசியில் அப்பாவிடம்,

“அப்பா....! இனி என்னால் அவரோட வாழ ஏலாது. அவர் வேண்டாம். எனக்கு விவாகரத்து வேண்டும். மறுத்தால், என் உயிர் உலகைவிட்டு விடைபெறும்..” எனச் சத்தமிட்டே சொன்னாள்.

விவாகரத்து நடந்தேறியது. வாழாவெட்டியாக வீட்டில் இருந்தாள்.

பரமசிவத்துக்கும் தாய்க்கும் மிகுந்த கவலை.

“என்ன ஜோதி இப்படியே எவ்வளவு காலம் இருப்பாய்..?”. என்று கேட்ட அம்மாவிடம்,

அப்பாகிட்ட சொல்லி நம்ம சிவாவை கேட்டுப் பார்க்கச் சொல்லுங்க என்று தைரியமாகச் சொன்னாள்.
வேறு வழியின்றி பரமசிவமும் போய் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, ஒருவாறு சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார்.

சிவாவுக்கும் தாங்க முடியாத சந்தோசம். சிவா- ஜோதி கல்யாணம் நடந்தது. வாடியிருந்த ஜோதி முகம் மலர்ந்தது. நடந்துவிட்ட சம்பவங்கள் ஜோதிக்குக் கனாக்காலமாகவே தோன்றியது.

**சூ கலாவர்ணன்**



# மஞ்சரி சிறுகதைகள்: ஒரு பார்வை

மஞ்சரி 11

பேராசிரியர் செ. யோகராசா

## ஒரு தேநீர் ஒரு குவளை

குழந்தையின் மனநிலை நின்று எழுதப்பட்டுள்ள இச் சிறுகதையைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் வாசகர்கள் நாமும் குழந்தையின் மனநிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

## ஒரு காகிதப் பூவை வட்டமிடும் வண்டு

பரஸ்பரம் ஒருவர் மீது மற்றவருக்கு ஏற்பட்டது காதலா? காமமா? என்பதில் தெளிவை ஏற்படுத்துவதற்கு கதாசிரியர் தவறிவிட்டார். சிறுகதையின் தலைப்பினால் மட்டும் அதனை ஏற்படுத்திவிட முடியாது.

## ஒரு மர(ண)த்தின் புலம்பல்

அ∴றிணைப் பொருளொன்றின் அறிவுத்திறனும் உணர்ச்சி வெளிப்பாட்டு முறையும் காரணமாக சுயசரிதைக் கட்டுரையாக அமைவதிலிருந்து விலகி இச் சிருஸ்டி சிறுகதையாகப் பரிணமித்துள்ளது.

## மடிப்பிச்சை


பெற்ற குழந்தையை இழந்துவிட்ட தாய் ஒருத்தியின் உடல் உள உணர்வுகளை பெண் எழுத்தாளர்களால் மட்டுமன்றி ஆண் எழுத்தாளர்களாலும் ஓரளவு வெளிப்படுத்தவியலும் என்பதற்கு இச் சிறுகதை சான்று பகர்கிறது.

## தாய்

மாஸ்ரரின் அர்ப்பணிப்புடனான கற்பித்தலும் கஸ்டப்பட்டு பிள்ளைகளை வெளி நாட்டிற்கு அனுப்பியமையும் பற்றிய அதி விபரிப்பு இச் சிறுகதையின் கரு வீச்சுடன் வெளிப்படுவதற்குத் தடையாக இருந்துள்ளது.

## திருக்குறளை மொழி பெயர்த்த பிரான்சுவா குரோ மரணம்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர் பிரான்சுவா குரோ (Francois Gros) 1960 களின் தொடக்கத்திலிருந்து தமிழில் ஆராய்ச்சி மேற்கொண்டு வந்தார்.



பாரிஸ் நகரில் ( 1933 - 2021) பாரிஸ் பல்கலைக் கழகத்தின் (Ecole Pratique Des hautes Etudes) என்ற உயர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தென்னிந்திய வரலாறு மற்றும் மொழியியலுக்கான பேராசிரியராக அவர் பணி புரிந்தார்.

புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் இந்தியவியல் துறையில் தனது ஆராய்ச்சிப் பணியைத் துவக்கிய பிரான்சுவா குரோ 1977 முதல் 1989 வரை தூர கிழக்கு நாடுகளுக்கான பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் இயக்குனராகப் பணியாற்றினார்.

சங்கத் தமிழிலிருந்து தற்காலத் தமிழ் வரை நீளும் இவரது ஈடுபாடு பல்வேறு தமிழ்ப் படைப்புகளை பிரெஞ்சு மொழிக்குக் கொண்டு சென்றுள்ளது.

இந்திய மொழிகள் பற்றி ஆய்வில் ஈடுபட்ட அவர் முதலில் சமஸ்கிருத இலக்கியங்களை கற்றுத் தேர்ந்து தமிழ்மொழி மீதும் பற்றுக் கொண்டார்.

இவரின் மறைவு தமிழ் செவ்வியல் இலக்கியத்திற்கு மட்டுமன்றி நவீன தமிழ் இலக்கயத்திற்கும் பேரிழப் பாகும்



# எழுத்தின் அனுபவங்கள்.....

## நந்தினிசேவியர்



### மேதினக் கதை.!

எமது கட்சியின் பத்திரிகை "தொழிலாளி " என்பது பலர் அறிந்த விடயம். ஏப் 71 வரை அது கொழும்பிலிருந்து வெளிவந்தது. அப்போது இளங்கீரன் அதன் ஆசிரியராக இருந்தார். ஏப்ரல் கிளர்ச்சியின் பின் சந்தேகத்தின் பெயரில் தொழிலாளி அச்சகம் அரசபடைகளால் உடைக் கப்பட்டது. கட்சியும் உட்கட்சி மோதலால் உடைக் கப்பட்டது. இளங்கீரன் ஜனவேகம் பத்திரிகையில் இணைந்து அதன் ஆசிரியரானார்.

யாழ்ப்பாணத்தில் எமது கட்சிக்குரிய அச்சகம் ஒன்று ".யாழ்ப்பாண அச்சகம் " என்ற பெயரில் இயங்கி வந்தது. அவ்வச்சகத்தில் சிலகாலம் பயிலுனனாக நான் இருந்திருக்கிறேன். தொழிலாளி பத்திரிகையை அங்கிருந்து வெளியிட கட்சி முடிவு செய்திருந்தது.ஆரம்பகால கொழும்பு தொழிலாளி பத்திரிகையில் சுபத்திரன் போன்ற கவிஞர்களின் கவிதைகள் பல பிரசுரமாகி இருந்தன. யாழ்ப்பாண தொழிலாளியில் எனது கவிதைகள் சில வெளிவத்தன. 73 ம் ஆண்டு மேதின இதழில் எனது கதை ஒன்று பிரசுரமாகவேண்டும் எனதோழர்கள் விரும்பினார்கள். நான் ஒரு கதையை எழுத முனைந்தேன். ஒரு உண்மையை இங்கே அழுத்தமாக கூற முனைகிறேன். ஒரு எழுத்தாளனின் படைப்புகள் அனைத்தும் வெற்றிகரமாக அமைவதில்லை.புதுமைப்பித்தன் படைப்புகள் அனைத்தும் உன்னதமானவை அல்ல என்பதை பலர் அறிவார். எனது கதைகளில் தோல்விக்கதைகள் பல இருக்கலாம்.ஆனால் நான் சுயவிமர்சனத்தோடு ஒப்புக் கொள்கிறேன் அந்த மேதினக்கதை ஒரு தோல்விக் கதை. அக்கதை வலிந்து என்னால் எழுதப்பட்டது. நான் அக்கதைக்காக எனது நண்பர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன். கதையின் பெயர் நினைவில் இல்லை. கதைவந்த தொழிலாளியும் கைவசம் இல்லை. ஒருவிதத்தில் அது நல்லதென்றே எனக்குப்படுகிறது.

### தாயகம்

**1974** ஏப்ரல் புதுவருட தினத்தன்று தாயகத்தின் முதலாவது இதழ் நெல்லியடி அம்பலத்தாடிகள் மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. பேரா.கைலாசபதி.செல்வ. பத்மநாதன். தங்கவடிவேல் மாஸ்ரர் மற்றும் பலர் கலந்துகொண்ட நிகழ்வு அது.
யாழ்ப்பாணத்தில் தேசிய கலைஇலக்கியப்பேரவை ஆரம்பிக்கப்பட்டு அதன் சார்பில் வெளியிடப்பட்ட இதழே தாயகம். முதல் இதழில் என்.கே.ரகுநாதன், கைலாசபதி, சில்லையூர் ஆகியோரும் நானும் எழுதி இருந்தோம். எனது கதையின் பெயர். "ஒரு வறிய குடும்பத்தின் ஒருநாள் பொழுது." எனது கதைகள் தொகுப்பாகிய போது அதன் தலைப்பு " ஒரு பகற் பொழுது " என்றா கியது. ஹற்றனில் நடந்த "தாயகம்" அறிமுகவிழாவில் அக்கதையைப் பற்றி பேரா. அ.சண்முகதாஸ் பின்வருமாறு சிலாகித்திருந்தார்.
"நந்தினியின் இக்கதையைப் படிக்கும்போது புதுமைப்பித்தனின் " ஒருநாள் கழிந்தது"கதை ஞாபகத்திற்கு வருகிறது. அக்கதையில் இருந்த நம்பிக்கை வரட்சியை இக்கதையில் காணமுடியவில்லை"பின்னர் தாயகத்தின் நான்காவது இதழில் எனது " நீண்ட இரவுக்குப் பின் ".கதை பிரசுரமாகியது. அக்கதை இப்படி ஆரம்பிக்கும். "அந்தப் பரீட்சை நடக்குமிடத்தைக் கண்டு பிடிக்க அரசரத்தினமும் குலமும் மிகவும் கஸ்டப்பட்டுவிட்டார்கள்." அப்போது சிறுகதை பற்றிய பாடம் ஒன்று 7ம் ஆண்டு கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டு பாட நூ லிலும் சேர்கப்பட்டிருந்தது. பாடப்பயிற்சியில் மேற்படி வச னங்களைக் கொடுத்து கதையை தொடர்ந்து எழுதி முடிக்குமாறு அறிவுறுத்தியிருந்தனர். கதையெழுதியது நான்.... ஆனால் பயிற்சிக்கு அது தேவைப்படா ததால் என் பெயர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எனது கதையை ஏலவே வாசித்தவர்களால் எனக்கு அது தெரியப்படுத்தப்பட்டது. பொய்யுரைக்கவில்லை. உண்மை.!


SKM
BOOKS
COMING SOON!
WWW.SKM-BOOKS.COM
BUY & SELL YOUR BOOKS ONLINE

# LUXMI EDUCATION CENTRE



# ADMISSIONS OPEN

UNLOCK YOUR POTENTIAL

## COURSES

11+,

YEAR 2, YEAR 3, YEAR 4,

YEAR 5, YEAR 6,

YEAR 7, YEAR 8, YEAR 9,

YEAR 10, YEAR 11,

YEAR 12 AND YEAR 13

## WHY CHOOSE US?

- Qualified and Experienced teachers
- 20+ Years Experience
- Covid Friendly Classes
- Leading Online lessons
- Offering:
  - Maths
  - Science
  - English
  - Physics
  - Chemistry
  - Biology

## REACH US AT:

Email: info@leconline.co.uk
Tel: 0208 573 0368
Mob: 07852 810285
Website: www.leconline.co.uk
101A Blyth Road, Hayes, Middlesex, UB3 1DB

OFFERING
ONLINE CLASSES
ENROL NOW!